SOUTHALL SHUTTERS (NATIONWIDE)
Shop Front - Roller Shutter - Glass
*Shop Shutters * Remote Control Garage Shutters
*Van Shutters *Door Closers *Industrial Shutters
SALES - SERVICE - REPAIR
LEICHESTER - LONDON - BIRMINGHAM
Tel. Head Office: 020 8843 2235

FREE இலவசம்
The UDHAYAN
உதயன்
Estd.: 1996
UK's No.1 National Tamil Newspaper

SUN TV
+44(0) 208 33 56780
WWW.SUNTVUK.COM

e-mail: thelondon@udhayan.freeserve.co.uk
UN-42 Jan. - 15 Mar. 2005
For News & Advertising: 020 8952 5677

# நெருங்குகிறது தேர்தல்!! நெருக்கடியில் தஞ்சம்!!!

## தஞ்சத்தை ஆதரித்து போடுங்கள் வோட்டு !!!

Labour LIBERAL DEMOCRATS CONSERVATIVE

பிரித்தானியப் பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் மே மாதம் அளவில் நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தேர்தல் களத்தில் மூன்று பிரதான கட்சிகளும் இறங்கி உள்ளன. வழமையான தேர்தல்கள் போல் கொன்சவேடிவ் கட்சி இத்தடவையும் குடிவரவு மற்றும் அரசியல் தஞ்ச விடயங்களை முக்கியத்துவப்படுத்தி உள்ளது. அவர்களுக்கு எந்த வகையிலும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிப்பதில் தொழிற்கட்சி களம் இறங்கி உள்ளது. வலதுசாரிப் பத்திரிகைகள் இந்நெருக்கடியை மேலும் மேலும் தூண்டிவிடுவதில் குறியாக உள்ளன.

இதனால் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட 30,000க்கும் மேற்பட்ட தமிழர்களதும் வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்த இன்னும் பல்லாயிரக்கணக்கானவர்களதும் எதிர்காலம் மேலும் நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளது. இத்தேர்தலில் கொன்சவேடிவ் கட்சிக்கு வெற்றி வாய்ப்புக்கான சாத்தியம் அதிகம் இல்லை என்பதையே புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இக்கட்சிகளில் எக்கட்சி ஆட்சி அமைத்தாலும் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களை விரைவில் திருப்பி அனுப்புவதும் தஞ்சம் கோருவதை மேலும் கடினமாக்குவதுமே இத்தேர்தலின் முடிவாக அமைய உள்ளது.

தமிழர்கள் உட்பட்ட சிறுபான்மை இனங்கள் தொடர்ச்சியாக கேள்வியின்றி தொழிற்கட்சிக்கு ஆதரவளித்து வந்தன. இத்தேர்தலில் இந்நிலை மாற்றப்பட்டு தொழிற்கட்சிக்கான அழுத்தத்தை வழங்குவது மிகவும் அவசியம் என சிறுபான்மையின அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றன. பல்லின சமூகங்கள் வாழும் பகுதிகளில் சிறுபான்மையினரே தீர்மானிக்கும் சக்தியை உடையவர்களாக இருப்பதால் அவர்களது வாக்குகளை வேட்டுகளாக்க வேண்டும் என அவ்வவதானிகள் தெரிவிக்கின்றன. மூன்றாவது சக்தியாக உள்ள லிபிரல் டெமொகிரட்டுக்கு தங்களது வாக்குகளை அழிப்பதன் மூலம் தொழிற்கட்சி, கொன்சவேடிவ் கட்சிகளுக்கு பாடம் கற்பிக்க வேண்டிய தருணம் ஏற்பட்டு உள்ளது.

கடுமையான சட்டங்களை கொண்டுவந்து தஞ்சம் கோருவோரின் எண்ணிக்கையைக் குறைப்பது தொழிற்கட்சியின் தேர்தல் அறிவிப்பாக உள்ளது. கொன்சவேடிவ் கட்சியினர் தஞ்ச விண்ணப்பங்களை பிரித்தானியாவுக்கு வெளியே மேற்கொள்ள வேண்டும், ஆண்டுக்கு இத்தனை தஞ்ச விண்ணப்பங்களைத் தான் ஏற்பது, ஐநா அகதிகள் சாசன உடன்பாட்டில் இருந்து வெளியேறு வது போன்ற மிக மோசமான திட்டங்களை முன்வைத்து உள்ளது. மாறாக லிபிரல் டெமொகிரட் கட்சியினர் ஐரோப்பிய ஒன்றியத்தின் தஞ்சக் கொள்கையை ஏற்றுக் கொள்வதுடன், தஞ்சம் கோருவோரை கொடுப்பனவுகளில் தங்கி இராமல் அவர்களுக்கு வேலை செய்யும் அனுமதியை வழங்க முன்வந்துள்ளனர்.

தலைநகரில் 50க்கும் அதிகமான தொகுதிகளில் தமிழர்களின் வாக்குகள் செல்வாக்கு செலுத்துவதால் இத்தடவை தமிழர்கள் ஒரு அரசியல் சதுரங்கத்தை நடத்த வேண்டும் என தஞ்சம் நிராகரிக்கப்பட்ட நிலையில் உள்ள தமிழர்களும் அவர்கள் சார்ந்த அமைப்புகளும் தெரிவிக்கின்றன.

அரசியல் தஞ்ச ஆதரவுக்கு போடுங்கள் வோட்டு அதன் மூலம் மற்றவர்களுக்கு வையுங்கள் வேட்டு என்கின்றனர் தஞ்சம் மறுக்கப்பட்ட தமிழர்கள்.




THE ISLANDERS CLUB
Bar and Restaurant
(Sri Lankan and Indian Cuisine)
Party Bookings Available
* Catered for all occasions
* Big Screen TV with Live coverage
* Pool table
* 10% discount for takewaway over £15
* We Specially prepare vegeterian dishes
* 120 seat capacity for parties
Tel: 020 8203 9428
8/9 Sentinel Square, Brent Street, Hendon London NW4 2EL
BEHIND HSBC BANK
Email: theislandersclub@amserve.com
Website: www.theislandersclub.co.uk

MIDDX TYRES LTD
SPECIALISTS IN PERFORMANCE TYRES
NEW, PARTWORN & REMOULDS
MOT PREPARATIONS . STEERING EXHAUSTS . WHEELS
SUSPENSION . 4 WHEEL ALIGNMENTS . BRAKES
Starter Motors, Alternators and Batteries
41-43 THE GREEN SOUTHALL MIDDLESEX
TEL & FAX : 020 8813 9154

Paul Bakers
Specialists in Egg & Eggless Cakes for all occasions
Also Bread, Baps, Rolls, etc.
CALL 020 8813 8322
SOUTHALL 020 8574 8388
32, SOUTH ROAD, / 143, NORWOOD ROAD
ALSO IN FELTHAM & ISLEWORTH

IDEAL GLAZING
With over 20 years of experience
MANUFACTURERS & INSTALLERS OF uPVC AND ALUMINIUM
FOR FREE ESTIMATE CALL
020 8574 8342
or Fax:
0208843 1903
IDEAL GLAZING (EURO) LTD
29 The Green Street, Southall, Middlesex, UB2 4AN

FOODS FROM ALL OVER THE WORLD
TVS
TVS CASH & CARRY
Importers & wholesalers of ethnic foods. Specialists in Afro-Caribbean, African, Indian, Chinese/Sri Lankan & Halal food products.
All branded grocery & drinks available at competitive prices.
Major credit cards accepted, Cheque facility subject to conditions.
For details, Contact Us on
0208 965 2885
or visit
TVS HOUSE 63 Minerva Road, Park Royal, London NW10 (Opposite ASDA)

C & S Builders Merchants (Stamford Hill) Ltd.
NEW SUPER STORES over 1 acre site
SKIPS FOR HIRE
Special Offers on Boilers
1. Vaillant £510.00 + VAT
2. Biast £208.00 + VAT
OPEN 7 DAYS A WEEKS
Call: 020 8498 2000
C & S HOUSE: 151, Blackhorse lane, London E17 5QU, Tel: 020 8498 2000
276-286 Stamford Hill, London N16 6TY, Tel: 020 8809 5373
122-126 Grove Green Road, London E11 4EL, Tel: 020 8539 2391
E-mail: sales@csbuildersmerchants.co.uk www.csbuildersmerchants.co.uk
Also at LEYTON & STAMFORDHILL

Man & Co Estate Agents
SALES - LETTINGS - MANAGEMENT - FINANCIAL SERVICES
3 Fryent Way, Kingsbury, London NW9 9ER
Tel: 020 8206 9930 Fax: 020 8206 9931
Web: www.manandco.co.uk
Email: info@manandco.co.uk
NAEA
your property is at risk if you do not keep up with the repayment or other loans secured on it. writen details on request. *All loans subject to status
Future Finance
020 8206 9939
In-House experienced financial advisors
Specialists in residential mortgages
True Self-Cert and Non-Status mortgages
Exclusive mortgage rates
Specialists in adverse credit advice (CCJs, Arrears, Defaults)
Commercial Loans*

# கட்டிப்போட்டுவிட்டு திருட்டு

நடு இரவில் ஈஸ்ற்ஹாம் பெட்பேர்ட் வீதியில் உள்ள வர்த்தகர் பார்த்தீபன் (அப்பன்) வீட்டில் புகுந்த கள்வர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டி உள்ளார்கள். வீட்டில் இருந்த பார்த்தீபனையும் அவரது மனைவி மற்றும் நண்பர் ஒருவரையும் கட்டிப் போட்டுவிட்டு பணம், நகைகள் என எல்லாவற்றையும் சுருட்டிச் சென்றுள்ளார்கள். இச்சம்பவம் ஜனவரி 23 ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. கிழக்கு இலண்டன் ஈஸ்ற்ஹாமில் பார்த்தீபன் பல வருடங்களாக வாழ்ந்து வருகிறார்.

ஆசிய நாட்டவர் ஒருவர் கதவைத் தட்டி முகவரி விசாரிப்பது போல் பாவனை செய்ய பதுங்கி இருந்தவர்கள் வீட்டினுள் நுழைந்து துப்பாக்கி மற்றும் கத்திகளைக் காட்டி மிரட்டி பார்த்தீபனையும் மனைவியையும் கட்டிப் போட்டுவிட்டு கொள்ளையில் இறங்கினர். கள்வர்கள் மேலே சென்ற போது அறையில் தூங்கிக் கொண்டிருந்த நண்பரையும் கொண்டு வந்து கட்டிப் போட்டு விட்டு வீட்டை சூறையாடி உள்ளார்கள். எட்டுப் பேர் அளவில் கொள்ளையில் ஈடுபட்டதாகவும் அவர்கள் அனைவரும் கறுப்பினத்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ரில்பறியில் உள்ள தனது கடைகளின் வெள்ளி, சனி, ஞாயிறு வியாபாரப் பணத்தை வீட்டில் வைத்திருந்தார் பார்த்தீபன். மேலும் நண்பர் ஒருவர் இன்னொருவருக்கு கொடுக்கும்படி வழங்கிய பணம் £4,000 வீட்டில் இருந்தது. தற்போது அனைத்தும் பறிபோயுள்ளது. மொத்த இழப்பு £50,000 வரை இருக்கும் என்கிறார் அவரது நண்பர் ஜெயதேவன்.

சுனாமிக்கு முன் வடக்கு லண்டனிலும் தமிழர் ஒருவரின் வீடு மாலை ஏழு மணியளவில் கொள்ளையிடப்பட்டது. மேலும் தென்மேற்கு இலண்டனில் உண்டியல் குகன் என்பவரின் வீட்டில் பொலிஸ் உடையில் வந்த திருடர்கள் பட்டப்பகலில் பெரும் தொகைப் பணத்தை கொள்ளையடித்துச் சென்றமை தெரிந்ததே.

# பல்கலைக்கழக மாணவி தற்கொலை

ரொறன்ரோ பல்கலைக்கழக மாணவி ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார். ரொரன்ரோவில் 401 ஹைறு வேயில் போக்குவரத்து நெரிசல் நிறைந்த நேரத்தில் மேம்பாலத்தில் இருந்து குதித்து இத்தமிழ் மாணவி தற்கொலை செய்துள்ளார். 21 வயதான இவர் பகுதி நேரமாக வேலை செய்பவர் என்றும் வழமைபோல் வேலைக்கு செல்வதாய் சொல்லி விட்டே தற்கொலை செய்துள்ளார் என்றும் தெரியவருகிறது.

# சன்றைஸ் வானொலி

16 ஆண்டு காலமாக டாக்டர் இ நித்தியானந்தனின் நிர்வாகத்தில் இயங்கிய சன்றைஸ் தமிழ் வானொலி அதன் முக்கிய அறிவிப்பாளர் நடாமோகனின் கைக்கு மாறி உள்ளது. இன்றுள்ள வானொலிகளில் நீண்டகால சேவையைக் கொண்ட வானொலி இது என்பது குறிப்பிடத்தக்கது.

# கோண்டாவில் இளைஞர் கனடாவில் பலி

யாழ் கோண்டாவிலைச் சேர்ந்த தனுசன் ஜெயக்குமரன் (18) என்ற இளைஞர் ஜனவரி 14 அன்று கனடாவின் தமிழர்கள் செறிந்து வாழும் ஸ்காபறோ பகுதியில் படுகொலை செய்யப்பட்டார். சம்பவ தினம் இரவு தமிழ் கடையில் வேலைசெய்து கொண்டிருந்த இந்த இளைஞரை இரு இளைஞர்கள் கடைக்கு வெளியே இழுத்துச் சென்று கடை வாசலில் வைத்து கத்தியால் குத்தி உள்ளனர். குற்றுயிராக கிடந்த தனுசன் ஜெயக்குமரனை காரில் போட்டுக்கொண்டு சென்ற இளைஞர்கள் அருகில் உள்ள பூங்காவில் போட்டுள்ளனர்.

சம்பவம் பொலிசாருக்கு தெரியப்படுத்தப்பட்டதும் தேடுதலை மேற்கொண்ட பொலிசார் குற்றுயிராக இருந்த தனுசனை மீட்டனர். தனுசன் உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதும் அவர் உயிர் பிழைக்கவில்லை. 2000ம் ஆண்டு கனடா வந்த தனுசன் கடின உழைப்பாளி என்றும் தனது பெற்றோரை கனடாவுக்கு அழைக்க முயற்சி செய்து வந்ததாகவும் தெரியவருகிறது. கோஸ்டி மோதல் ஒன்றுக்கு இவர் சாட்சியாக இருந்ததால் ஏற்பட்ட பழிவாங்கல் சம்பவமே இது என அப்பகுதித் தமிழர்கள் தெரிவிக்கின்றனர்.

தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட கார் அப்பூங்காவில் இருந்து மீட்கப்பட்டது. மேலும் இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் ஜீவன் அற்புதராஜா (20), பிராங்ளின் நேசராஜா என்ற இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். பொலிசார் இச்சம்பவத்தில் தொடர்புடைய இன்னும் இருவரைத் தேடி வருகின்றனர்.

# கிங்ஸ்ரன் பெண் காணாமல் போயுள்ளார்

41 வயதான சந்தியா ரெயினர் என்ற இலங்கைப் பெண் காணாமல் போயுள்ளார். கிங்ஸ்ரன், காடினல் அவனியூவில் உள்ள தனது வீட்டில் இருந்து ஜனவரி 9 காலை எட்டு மணிக்கு புறப்பட்ட இவர் காணாமல் போனதாக பொலிஸ் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. சந்தியா வீட்டில் இருந்து வெளிக்கிட்ட சூழல் அவருடைய நலன் பற்றிய அக்கறையை ஏற்படுத்துவதாக பொலிஸ் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. இவர் வை64 பதிவிலக்கமுடைய சில்வர் நிற சிற்றன் எக்ஸ்ளாரா பிக்காசோ வண்டியில் சென்றுள்ளார்.

சந்தியாவை உடனடியாக தம்முடன் தொடர்பு கொள்ளும் படி பொலிசார் கேட்டுக் கொண்டுள்ளனர். சந்தியாவின் குடும்பத்தினர் அவருடைய நலன் பற்றி மிகவும் அச்சப்படுவதால் அவர் நலமாக இருப்பதை தெரியப்படுத்தும்படி பொலிசார் கேட்டுக் கொண்டுள்ளனர். தகவல் கொடுக்க வேண்டிய இலக்கம் 020 8541 1212 - கிங்ஸ்ரன் பொலிஸ்.

# £90,000 மோசடியில் ஈடுபட்ட தபாலதிபர் சிறையில்

லூட்டனில் வசிக்கும் கனகரட்ணம் தனபாலசிங்கம் என்ற போஸ்ட்மாஸ்டருக்கு ஜன 27 முதல் சிறைத்தண்டனை ஆரம்பித்துள்ளது. கனகரட்ணம் போஸ்ட்மாஸ்டராக இருந்த பெட்போர்ட் Ickleford பகுதி தபாலகத்தில் £90,000 மோசடி செய்யப்பட்டு உள்ளது. மகன் சுதர்சனுடன் சேர்ந்து காசு புத்தகங்களில் மோசடி செய்ததற்காக கனகரட்ணத்துக்கு இத்தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. இவர்கள் இருவரும் களவாடப்பட்ட காசுப் புத்தகங்களைப் பயன்படுத்தி பொதுப்பணத்தை மோசடி செய்துள்ளனர்.

இவர்கள் இருவரையும் பொலிசார் டிசம்பர் 18ல் விசாரணைக்கு அழைத்திருந்தனர். ஆனால் தந்தை மட்டுமே சென்றிருந்தார். விசாரணைகளின் போது மோசடி இடம்பெற்றது தனக்குத் தெரியும் என்று ஒத்துக் கொண்ட கனகரட்ணம், அதில் மகனுக்கு எந்தத் தொடர்பும் இல்லை எனத் தெரிவித்திருந்தார். தனது மகனின் கவனக்குறைவால் இது இடம்பெற்றதாக கனகரட்ணம் பொலிஸாருக்குத் தெரிவித்தார்.

இவ்விருவரும் அல்லது இருவரில் ஒருவர் வேலை செய்யும் போது வழமைக்கு மாறாக பணம் செலுத்தப்பட்டு உள்ளது. இந்த மோசடி ஒக்ரோபர் 2001ல் இடம்பெற்றது. சிறிது காலத்தின் பின் ஒக்ரோபர் 2002ல் மீண்டும் இடம்பெற்றது.


கேம்பிரிட்ஜ் கிரவுண் கோட்டில் ஜனவரி 13ல் கனகரட்ணத்துக்கு தண்டனை வழங்கப்பட்டது. சுதர்சன் தற்போது தலைமறைவாகி உள்ளார்.

# தமிழர்களின் அரசியல் தஞ்சத்தை வலியுறுத்தும் சந்திப்பு

தமிழ் மக்களின் அரசியல் தஞ்சத்தை வலியுறுத்தும் சந்திப்பு ஜனவரி 27ல் வெஸ்ட்மினிஸ்டர் பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இலங்கை விவகாரங்களுக்கான அனைத்துக் கட்சிக்குழுச் செயலாளர் அன்டி லவ் உடன் இடம்பெற்ற இச்சந்திப்பில் நியூஹாம் கவுன்சிலர் போல் சத்தியநேசன், தமிழர் தகவல் நடுவத்தின் தலைவர் வரதகுமார், பத்திரிகையாளர் த ஜெயபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர். தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களைத் திருப்பி அனுப்பக் கூடாது, சுனாமியால் பாதிக்கப்பட்ட உறவுகள் பிரித்தானியாவுக்கு வருவதற்கான குடிவரவு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டும், இலங்கையில் சுனாமி அனர்த்த மீள்கட்டுமானம் பாகுபாடின்றி மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும், பிரித்தானிய உதவிகள் தொடர வேண்டும் என்ற நான்கு அம்சங்கள் இச்சந்திப்பில் வலியுறுத்தப்பட்டது.

பிரித்தானிய பாராளுமன்ற குழுவை அனுப்பி மீள்கட்டுமான நடவடிக்கைகளைப் பார்வையிடுவது, பிரித்தானிய உதவிகள் தொடர்வதற்கான அழுத்தங்களை வழங்குவது என்பன சாத்தியமானவை என்று குறிப்பிட்ட பா உ அன்டி லவ் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களைத் திருப்பி அனுப்புவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டு உள்ளது எனத் தான் நம்புவதாகத் தெரிவித்தார். ஆனால் அதனை முழுமையாகத் தடுக்க முடியும் என்ற நம்பிக்கையை தான் வழங்க முடியாததை அவர் தமிழ் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டினார். ஆனால் தொடர்ந்தும் தான் அதற்கு அழுத்தங்களை வழங்குவேன் என்று உறுதி அளித்தார்.

கனடிய அரசு சுனாமியால் பாதிக்கப்பட்ட உறவினர்களை வரவழைப்பதற்கு ஏற்படுத்தி உள்ள புதிய ஏற்பாட்டின் பிரதிகள் அன்டி லவ்விடம் வழங்கப்பட்டு இங்கும் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.



சந்திப்பில் கலந்து கொண்ட பத்திரிகையாளர் த ஜெயபாலன், நியூஹாம் கவுன்சிலர் போல் சத்தியநேசன், பா உ அன்டி லவ், தமிழர் தகவல் நடுவத்தின் தலைவர் வரதகுமார் ஆகியோர் படத்தில்.

# பிரான்ஸிலும் தஞ்சம் வலியுறுத்தப்படுகிறது

பிரான்ஸில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்கும் படி பிரான்சில் உள்ள இடதுசாரி அரசியல் அமைப்பான சமூகப் பாதுகாப்புக்கான சர்வதேச இயக்கம் கோரிக்கை விடுத்து உள்ளது. சுனாமி அனர்த்தத்தை அடுத்து மனிதாபிமான அடிப்படையில் பிரான்ஸ் அரசு பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு தஞ்சம் வழங்க வேண்டுமென அவ்வமைப்பு கோரி உள்ளது. இக்கட்சியுடன் பல புலம்பெயர்ந்த தமிழர்கள் இணைந்து கையெழுத்து வேட்டையையும் நடாத்தி உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருப்பி அனுப்புவதை தற்காலிகமாக நிறுத்த UNHCR வேண்டுகோள்

இலங்கைத் தீவு முழுவதையும் பாதிக்கப்பட்ட பிரதேசமாக கருத்தில் எடுத்துள்ளது ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் (UNHCR). அதனால் தஞ்சம் மறுக்கப்பட்டவர்களை இலங்கைக்கு பலவந்தமாகத் திருப்பி அனுப்ப வேண்டாம் என ஜனவரி 6ல் வெளியிட்ட செய்திக் குறிப்பில் அரசுகளை UNHCR கேட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் தொற்று நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாலும் அங்குள்ள கட்டமைப்புகள் சீர்குலைந்துள்ளதாலும் பல பாகங்களுக்கு இன்னும் மனிதாபிமான உதவிகள் சென்றடையாத நிலையில் இருப்பதாலும் திருப்பி அனுப்புவதை இடைநிறுத்தும்படி UNHCR வேண்டுகோள் விடுத்து உள்ளது. மேலும் அங்குள்ள அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள நிலையில் திருப்பி அனுப்பப்படுபவர்களின் சுமை அவர்களின் வேலைப்பழுவை அதிகரிக்கும் எனவும் UNHCR தெரிவித்து உள்ளது.

பிரித்தானிய தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிலர் சுனாமி அனர்த்தத்தை அடுத்து விடுவிக்கப்பட்டு உள்ளனர். சுனாமிக்குப் பின் யாரும் திருப்பி அனுப்பப்பட்டதாகத் தகவல்கள் கிடைக்கவில்லை.

The UDHAYAN உதயன்
ADVERTISE FOR BEST RESULTS
020 8952 5677

TEMPTATION
Restaurant & Bar
North Indian & Muglai Cuisine with a drift of Oriental
Buffet 12 noon -3.30pm
£4.99 only
Party orders welcome
Open 7 days 12pm to 12am midnight
Call us on 020 8206 2206
487 Kingsbury Rd., Kingsbury NW9 9ED

Palm Restaurant
Srilankan & South Indian Cuisine
சுவை, சிக்கனம், சேவை, நிறைவு
VEG or NON VEG
Party orders Welcome from anywhere
Kandiah Rajarathnam
(T) 020 8520 7465
102, Palmersston Road, Walthamstow E17 6PZ

T.C.S. TUTORIAL COLLEGE
Celebrating 10 years of Education Excellence
Day Evening & Weekend Classes
First-class teaching, small groups
Study Visa students welcome
- GCSE & GCE's,
- Computing, CISCO -CCNA Professional
- Health & Social Care,
- Business Studies,
- English-ESOL & EFL,
- Travel & Tourism,
- Saturday School for Children
Call Now: Tel. 020 8206 2988
Email: tcs_school@tiscali.co.uk
TCS Tutorial College, Alpine House, Honeypot Lane, Kingsbury, London NW9 9RX

SHOP FOR SALE
Shop for sale in East London
News, Grocery and Off Licence
New Lease 16 years
Takings£6/7000 per week
Rent £13000 p/a with accommodation
£65,000 ONO
Call: 079 0431 7029
or
079 3149 1157
for details

# மணமகள் கரம் பற்ற வந்த மணமகனை அதிகாரிகள் கரம் பிடித்துச் சென்றனர்

திருமணப் பதிவுக்கு தயாராய் உற்றார் உறவினர் சூழ இருந்த மணமகன் பதிவு அலுவலர்கள் வழங்கிய தகவலை அடுத்து குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். இச்சம்பவம் பிறன்ற் பதிவு அலுவலகத்தில் நவம்பர் 24ல் இடம்பெற்றது. டென்மார்க்கில் இருந்து வந்த மணமகளுடன் பதிவுத் திருமணத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இலண்டனில் ஹரோவில் உள்ள வீட்டில் மணமகள் தங்கி இருந்தார். மணமகன் பிறன்ற் கவுன்சிலில் வாழ்ந்து வந்தார்.

தகுந்த ஆவணங்களைக் காண்பித்த பின்னரும் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட மணமகன் இரு வாரங்களின் பின் டிசம்பர் 10ல் விடுவிக்கப்பட்டார். தடுத்து வைக்கப்பட்ட ஹவுன்சிலோ தடுப்பு முகாமில் தன்னையும் மற்றோரையும் குற்றவாளிகள் போல் அதிகாரிகள் நடத்தியதாக அவ்விளைஞர் தெரிவித்தார். மனிதாபிமானத்துக்கே இடமிருக்கவில்லை என்று குறிப்பிட்ட அவர், மனித உரிமைகள் பற்றி பீற்றிக் கொள்ளும் பிரித்தானியாவின் மனிதாபிமானம் அகதிகளைத் தடுத்து வைத்திருக்கும் முகாம்களில் செத்துக் கொண்டிருப்பதாக மிகவும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் தெரிவித்தார்.

மற்றுமொரு சம்பவத்தில் இதற்கு பத்து தினங்களுக்கு முன்னர் நவம்பர் 14ல் தஞ்ச விண்ணப்பம் மறுக்கப்பட்டிருந்த நிலையில் திருமணப் பதிவு செய்ய முற்பட்ட பி அன்ரன் (23) என்ற இளைஞர் அஸ்போர்ட் கென்ற் பதிவு அலுவலகத்தில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார். அன்ரனுக்கு ஜேர்மனில் இருந்து வந்த பெண்ணுடன் பதிவுத் திருமணம் செய்ய சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தது. அஸ்போர்ட் பதிவு அலுவலகத்தில் தமது திருமணப் பதிவுக்காக மணமக்கள் தயாராக இருந்தபோது பதிவு அலுவலர்கள் வழங்கிய தகவலை அடுத்து மணமகன் கைது செய்யப்பட்டு சில தினங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

தமிழ் திருமணப் பதிவுகளில் குடிவரவு அதிகாரிகள் நுழைவது இது முதற் தடவையல்ல. இவ்வாண்டு ஏப்ரல் 10ல் பிரன்றில் திருமணப் பதிவுக்காகக் காத்திருந்த மணமகன் குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு அன்று மாலை விடுவிக்கப்பட்டார். நவம்பரில் ஹரோவில் திருமணப் பதிவுக்காகக் காத்திருந்த மணப்பெண் சகல குடிவரவு ஆவணங்களைக் காண்பித்த போதும் குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இந்த நான்கு சம்பவங்களிலும் குடிவரவு அதிகாரிகள் தகுந்த ஆதாரங்கள் இன்றி பதிவு அலுவலர்கள் எழுப்பிய சந்தேகத்தின் அடிப்படையில் மட்டுமே மணமக்களைக் கைது செய்துள்ளனர். இவ்வாறான சம்பவங்கள் சிறுபான்மையினரை சீண்டுவதாக அமைந்து உள்ளது. திருமணம் போன்ற நிகழ்வுகளில் தவறுதலாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட தரப்பினரை உளவியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மிகவும் பாதிப்படைய வைக்கிறது. திருமணம் போன்ற நல்ல காரியங்களில் இத்துரதிஸ்ட சம்பவங்கள் நிகழ்வது முதற்கோணல் முற்றும் கோணல் ஆகிவிடும் என்ற பயத்தை தம்பதிகளிடையே ஏற்படுத்தி விடுகிறது. உள்துறை அமைச்சு திருமணம் போன்ற வாழ்க்கையின் கலாச்சாரத்தின் மிக மிக முக்கிய நிகழ்வில் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வது மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. குடிவரவு அதிகாரிகள் தமது அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்வதாகவே பாதிக்கப்பட்ட குடும்பத்தவர்கள் கருதுகின்றனர்.

## வழக்கு தாமதம்

ஓகஸ்ட் 30ல் பட்டப்பகலில் வெம்பிளியில் ரபிக் லைட்டில் வைத்து கொல்லப்பட்ட அசன் ரட்ணசேகரத்தின் (18) கொலை வழக்கு ஒக்ரோபரில் நடைபெற்ற போதும் யூரிகளின் முடிவு தொங்கு முடிவாக அமைந்து விட்டது. அதனால் இன்னுமொரு வழக்குக்கு நவம்பரில் உத்தர விடப்பட்டு இருந்தது. வழக்கை ஆரம்பிப்பதற்கான திகதி இன்னமும் அறிவிக்கப்படவில்லை. வழமையாக கொலை வழக்குகளில் யூரிகளின் முடிவு இவ்வாறு அமைவதில்லை என்பது குறிபடத்தக்கது.

## ரமில் ஹொட்லைன்

ரமில் ஹொட்லைன் 0800 587 2935 மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக பொலிசார் தெரிவிக்கின்றனர். வாரத்துக்கு 20 அழைப்புக்ள் வருவதாகவும் தங்களுக்கு பயனுள்ள தகவல்கள் கிடைப்பதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

## புதிய ஆணையாளருக்கு தமிழ் குழுக்களின் வன்முறை பற்றி விளக்கம்



மெற்றோ பொலிட்டன் பொலிஸின் புதிய ஆணையாளராக பதவியேற்கப் போகும் சேர் இயன் பிளேயருக்கு (51) தமிழ் இளைஞர் குழுக்களின் வன்முறை பற்றி விளக்கமளிக்கப்பட்டது. ஜனவரி இறுதியில் தற்போதைய ஆணையாளர் சேர் ஜோன் ஸ்ரீவன்ஸ் ஓய்வு பெறுவதை அடுத்து அவ்விடத்துக்கு தற்போதைய துணை ஆணையாளர் சேர் இயன் பிளேயர் நியமிக்கப்பட்டு உள்ளார். உலகின் மிகச் சிறந்த பொலிஸ் பிரிவை தலைமை தாங்கும் பொறுப்புக்கு என்னைத் தெரிவு செய்திருப்பது தனக்கு மிகுந்த பெருமை அளிப்பதாக சேர் இயன் பிளேயர் தெரிவித்திருந்தார். இந்நியமனத்தை ஓய்வு பெற்றுச் செல்லவுள்ள சேர் ஜோன் ஸ்ரீவன்ஸ்ம் வரவேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் இளைஞர் குழுக்களின் வன்முறையைக் கட்டுப்படுத்த கடந்த ஆண்டு ஸ்கொட்லன்ட் யாட் தனிப் பொலீஸ் அதிகாரி Deputy Assistant Commisioner Stephn House ஐ (மேலே) நியமித்திருந்தமை தெரிந்தது. இவர் பதவியேற்க உள்ள சேர் இயன் பிளேயரைச் சந்திந்து தமிழ் இளைஞர் குழுக்களின் வன்முறைகள் பற்றி விளக்கமளித்துள்ளார். இதன் மூலம் தமிழ் இளைஞர் குழுக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஒப்பிரேசன் என்வர் போன்ற நடவடிக்கைகளுக்கு மேலதிக வளங்களைப் பெறக் கூடியதாக இருக்கும் எனத் தெரியவருகிறது.



சேர் இயன் பிளேயர்

## ஈஸ்ற்ஹாம் கொலை வழக்கு மார்ச்சில்

ஈஸ்ற்ஹாம் கையம் வீதியில் வைத்துத் தாக்கப்பட்டு கடந்த பொங்கல் தினத்தன்று உயிரிழந்த மகேஸ்வரன் கணேசனின் கொலை வழக்கு மார்ச் 2005ல் விசாரணைக்கு வருகிறது. இவரது கொலை தொடர்பாக பார்க்கிங்கைச் சேர்ந்த சிவகுணம் சிவக்குமார் (31) என்பவர் மீது கொலைக் குற்றம் பதிவு செய்யப்பட்டது. இக்கொலையுடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்கள் இலங்கையில் இருந்து நாடுகடத்தப்பட உள்ளனர். இக்கொலை வழக்கு டிசம்பர் 2004ல் நடைபெறத் திட்டமிட்டு இருந்த போதிலும் நாடுகடத்தல் செயற்பாடுகள் தாமதித்ததால் மேலும் மூன்று மாத காலத்துக்கு வழக்கு பிற்போடப்பட்டு உள்ளது.

நாடு கடத்தப்பட உள்ள இந்நபர்கள் மேலும் இரு கொலைகள் தொடர்பாகவும் விசாரிக்கப்பட வேண்டி இருந்ததாக Detective Chief Superintendent DCS Andrew Murphy தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அன்ரு மேர்பி ஒப்பிரேசன் என்வர் நடவடிக்கையில் தமிழ் இளைஞர்களின் கொலைகள் தொடர்பான விசாரணையை மேற்கொண்டு வரும் அதிகாரியாவார். குற்றவாளிகள் எங்கு மறைந்திருந்தாலும் அவர்கள் நீதிக்கு முன் கொண்டுவரப்படுவார்கள் என்று சில மாதங்களுக்கு முன் உறுதியளித்திருந்தார்.

## 33 தமிழ் இளைஞர்கள் கைது

நவம்பர், ஒக்ரோபர் மாதங்களில் இடம்பெற்ற ஒப்பிரேசன் என்வர் நடவடிக்கையில் 33 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு உள்ளனர். வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டது, திருட்டுக் கார்களைப் பயன்படுத்தியது, கிறடிட்காட் மோசடி போன்ற பல குற்றச்சாட்டுகளுக்காக இவ்விளைஞர்கள் கைது செய்யப்பட்டு உள்ளனர். இந்த ஒப்பிரேசன் என்வர் நடவடிக்கையின் போது 28 இடங்களை முற்றுகையிட்டு தேடுதல் மேற்கொள்ள நிதிமன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. லண்டனின் பல பாகங்களிலும் இருந்த இவ்விடங்கள் தேடுதல் நடவடிக்கைக்கு உள்ளானது. வோல்தம்ஸ்ரோ, நியூஹாம், றெட்பிறிட்ஜ், குறொய்டன், பிறன்ற், பார்னற் ஆகிய இடங்கள் தொடர்ந்தும் தமிழ் இளைஞர் குழுக்களின் வன்முறை மையங்களாக இருக்கின்றன.




## இளைஞர் குழுக்கள் பற்றி தேசிய பொலீஸ் மாநாடு

லண்டனில் தமிழ் இளைஞர் குழுக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் கடுமையான பொலிஸ் நடவடிக்கைகளால் இளைஞர் குழுக்கள் லண்டனைவிட்டு வெளியேறி வருகின்றன. இந்தக் குழுக்கள் மில்டன்கீன்ஸ், அஸ்போர்ட், மஞ்செஸ்ரர், கிளாஸ்கோ, நியூகாஸ்டில், லெஸ்ரர் என நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவி உள்ளனர். பரவிச் சென்ற இடங்களிலும் சிறு சிறு அசம்பாவிதங்கள் ஏற்பட்டு உள்ளன. மேலும் இலண்டனில் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் நாட்டின் ஏனைய இடங்களில் தலைமறைவாகி உள்ளனர்.

இந்நிலையை அறிவிக்கவும் இளைஞர் குழுக்களின் தோற்றம் வரலாறு பற்றி விளக்கமளிக்கவும் ஸ்கொட்லண்ட் யாட் தேசிய பொலிஸ் மாநாடு ஒன்றைக் கூட்டியது. நாடு முழுவதும் உள்ள 43 பொலிஸ் பிரிவுகளில் 15 பொலிஸ் பிரிவுகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். ஸ்ரட்போர்ட்செயர், வெஸ்ட் மிட்லன்ட், கிளாஸ்கோ, வெஸ்ட் யோர்க்செயர், கிறேட்டர் மஞ்செஸ்ரர் என நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 15 பொலிஸ் பிரிவுகள் கலந்து கொண்டன. குற்றவாளிகள் தப்பிக் கொள்ள எந்த சந்தர்ப்பமும் வழங்கப்படமாட்டாது என பொலிஸ் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். பாதுகாப்பான தமிழ் சமூகமே இதன் நோக்கம் எனவும் சட்டத்துக்கு கட்டுப்பட்டு வாழும் தமிழ் சமூகத்தை பாதுகாப்பது தமது கடமை எனவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

## சுனாமி அஞ்சலி

சுனாமியால் மரணித்தவர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகள் உலகம் முழுவதும் இடம்பெற்றது. பிரித்தானியா வில் ஜனவரி 5ல் மூன்று நிமிட அஞ்சலி அனுஷ்டிக்கப்பட்டது. மேலும் நியூஹாம் கவுன்சில் ஜனவரி 16ல் நினைவு நிகழ்வு ஒன்றை வெஸ்ற்ஹாம் புட்போல் மைதானத்தில் நடத்தியது. ரவலர்ஸ் ஸ்கயரில் தமிழ் மக்கள் கூடி தமது அஞ்சலியைச் செலுத்தி இருந்தனர். ஜனவரி 15ல் குரொய்டன் தமிழ் சங்கத்தினர் தமது தைப்பொங்கல் நிகழ்வை சுனாமியால் இறந்தவர்களுக்கான நினைவு நிகழ்வாக மாற்றித் தமது அஞ்சலியைச் செலுத்தினர். இந்நிகழ்வில் அப்பகுதி இளைஞர்கள் முக்கிய பங்கெடுத்தமை குறிப்பிடத்தக்கது. இவ்விளைஞர்கள் தற்போது தமிழ் சங்கத்தின் முக்கிய பொறுப்புகளுக்கும் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

## ஊர்காவற்துறை கல்லூரி விழா



300க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியின் முதலாவது ஒன்றுகூடல் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது. டிசம்பர் 18ல் நடைபெற்ற இந்நிகழ்வில் பரதநாட்டியம், வாய்ப்பாட்டு, நாடகம் போன்ற நிகழ்ச்சிகளுடன் வழமை போல் இறுதியில் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. இச்சங்கத்தின் முதலாவது நிகழ்ச்சிக்கு இவ்வளவு தொகையானோர் கலந்து கொண்டமை பெரு மகிழ்ச்சி அளிப்பதாக கல்லூரி அமைப்பின் செயலாளர் ஜெராட் திமோதி (படம்) தெரிவித்தார்.

இந்நிகழ்வின் முக்கிய நிகழ்ச்சியாக செல்வி ருக்ஷியின் நடன நிகழ்ச்சி இடம்பெற்றது. இவர் ஜேர்மனியில் இருந்து வந்து கலந்து கொண்டார். நிகழ்வில் இசைக்கப்பட்ட கவிஞர் காசியானந்தனின் விடுதலை கீதங்கள் மிகவும் உணர்வுபூர்வமாக இருந்தது.

ஐரோப்பிய நாடுகளில் பிறந்து வளர்ந்து வரும் தமிழ் சிறார்கள் இயல், இசை, நாடகம் என தமிழில் தம் திறமையை மேடையேற்ற ஊர்காவற்துறையில் பிறந்து வளர்ந்த அறிவிப்பாளர் மனுவேற்பிள்ளை ஆங்கிலத்தில் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கியது மிகவும் பொருத்த மற்றதாகவும் ஆச்சரிய மாகவும் இருந்தது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும் தமிழர்களாக இருக்கும் போது அறிவிப்பாளர் தனது ஆங்கிலப் புலமையை காட்ட இந்த மேடை யைப் பயன்படுத்தியது தமிழை முதல் மொழியாகக் கொண்ட பல முதலாம் தலைமுறைப் பெற்றோருக்கு மிகவும் சங்கடமாக இருந்தது.

# கிங்ஸ்பறி கொலை ஐவர் கைது

# தகவலுக்கு £20,000 சன்மானம்

கிங்ஸ்பறியில் இடம்பெற்ற கேதீஸ்வரன் சண்முகநாதனின் (29) கொலை தொடர்பாக ஐந்து தமிழ் இளைஞர்கள் டிசம்பர் 15ல் கைது செய்யப்பட்டு உள்ளனர். கிங்ஸ்பறியில் உள்ள ஹைபீல்ட் அவனியூவில் உள்ள செர்லி கோட் எனும் குடிமனைப் பகுதியில் வைத்து கேதீஸ்வரன் சண்முகநாதன் ஓகஸ்ட் 27ல் சுட்டுக் கொல்லப்பட்டார். கைதுகள் மேற்கொள்ளப்பட்டபோதும் குற்றத்தை நிரூபிக்கக் கூடிய ஆதாரங்களை பொலிசார் இன்னமும் தேடுகின்றனர். அதனாலேயே இந்த சன்மானம் தற்போது அறிவிக்கப்பட்டு உள்ளது. தமிழ் கொலை விசாரணை களில் இவ்வளவு தொகை சன்மானம் அறிவிக்கப்பட்டு இருப்பது இதுவே முதற் தடவையாகும்.

### கேதீஸ்வரன் சண்முகநாதன் கொலை :

9:10 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றி பொலிசாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. பொலிசாரும், அம்புலன்சும் ஸ்தலத்துக்கு விரைந்தன. அவர்கள் வந்து சேரும் போது தாக்கப்பட்ட கேதீஸ்வரன் துப்பாக்கிச் சூட்டால் ஏற்பட்ட காயத்தினால் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார். ஆனால் சிறிது நேரத்தில் அவ்விடத்திலேயே அவர் உயிரிழந்தார். செர்லி கோட் குடியிருப்பில் உள்ள முகவரி ஒன்றுக்கு நான்கு நண்பர்கள் சென்றுவிட்டு அருகில் நிறுத்தப்பட்டு இருந்த நீல நிற ஹொண்டா காருக்குள் சென்றிருந்தனர். அவர்கள் சென்றிருக்கவும் உயரமான மெல்லிய ஆண் சந்தேக நபர் சாரதியின் இருக்கைப் பக்கமாக நடந்து வந்து யன்னலினூடாக குறைந்தது ஒரு தடவையாவது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார். சாரதியின் இருக்கையில் அமர்ந்து இருந்த கேதீஸ்வரன் கடுமையான காயத்துக்கு உள்ளாகி சில நிமிடங்களில் உயிரிழந்தார்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்த நபர் ஹைபீல்ட் அவனியூவால் நடந்து சென்று பக் லேனுக்குள் திரும்பி அங்கு நிறுத்தப்பட்டு இருந்த கடும் நிற காரில் ஹேய்ஸ் லேன் நோக்கிச் சென்றுள்ளார். இத்துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெறுவதற்கு சிறிது முன்னதாகவே அக்கார் அங்கு குறிப்பிட்ட நேரம் நிறுத்தி வைத்திருக்கப்பட்டிருக்க வேண்டும் என பொலிசார் கருதுகின்றனர்.

### கொலை மர்மம் :

இக்கைது மேற்கொள்ளப்படும் வரை இக்கொலை மர்மமானதாகவே இருந்து வந்தது. பொலிசார் தங்கள் விசாரணையை திறந்தே வைத்திருந்தனர். கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் இலங்கைத் தமிழர்கள் என பொலிசார் தெரிவிக்கின்றனர். பல கோணங்களிலும் தகவல்கள் சேகரிக்கப்பட்டே இக்கைதுகள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் செய்திகள் கூறுகின்றன.

குற்றவாளிகள் விரைவில் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவார்கள் என்ற நம்பிக்கையை இக்கைது களின் பின்னர் பொலிசார் வெளியிட்டு உள்ளனர். இக்கொலை விசாரணையை Detective Supt Nigel Counsell மேற்கொண்டு உள்ளார். இக்கொலை தொடர்பான தகவல்களை கொண்டிருப்பவர்கள் தம்மை வெளிக்காட்டாமல் க்ரைம் ஸ்ரொப்பர்ஸ் 0800 555 111 உடனோ ரமிழ் ஹொட்லைன் 0800 587 2935 உடனோ தொடர்பு கொண்டு குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க உதவ முடியும்.



கொலை

20,000 பவுண்டுகள் சன்மானம்

27 ஆகஸ்ட் 2004, வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில், 29 வயதுடைய கேதீஸ்வரன் சண்முகநாதன் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

[illegible]

[illegible]

கொல்லப்பட்டவரை உங்களுக்குத் தெரியுமா?
துப்பாக்கியால் சுடப்பட்டதை நீங்கள் பார்த்தீர்களா?
உங்களால் உதவ முடியுமா?

இந்தக் கொலைக்கு காரணமானவர்கள் கைது செய்யப்படுவதற்கோ, குற்றம் நிரூபிக்கப்படுவதற்கோ உதவும் எவ்வித தகவலைத் தந்தாலும் அவருக்கு 20,000 பவுண்டுகள் சன்மானமாக வழங்கப்படும்.

தகவல் அறிந்தவர் தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்

020 8358 0300

மாறாக, ரகசியமாகத் தொடர்புகொண்டுப் தமிழில் பேசுவதற்கான இலக்கம்

0800 587 2935

மாறாக, நீங்கள் யார் என்ற தகவல் தெரியவராது தகவல் தர விரும்பினால் கிரைம் ஸ்டாப்பர்ஸ் அமைப்பை தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்

0800 555 111

METROPOLITAN POLICE Working for a safer London

CRIMESTOPPERS 0800 555 111

# சுனாமி நிதி சேகரிப்பு லண்டனில் சர்ச்சை

இலங்கையில் தமிழ் பகுதிகளில் ஏற்பட்ட சுனாமி பேரழிவை அடுத்து இலண்டனில் தமிழர் வாழும் பகுதிகள் அனைத்திலும் கடைகளிலும் தெருவிலும் ஆலயங்களிலும் எழுந்தமானமாக நிதி சேகரிப்பு நடைபெற்றது. அமைப்புகளும், தனி நபர்களும் நிதி சேகரிப்பில் ஈடுபட்டனர்.

ஆனால் திடிரென நிதி சேகரப்பில் ஈடுபட்ட சிலர் பொலிசாரால் விசாரிக்கப்பட்டனர். விசாரணைகளில் நிதி சேகரிப்பு அமைப்புகளில் மாறாட்டம் காணப்பட்டது வெளிச்சத்துக்கு வந்தது. நிதி சேகரிப்பில் ஈடுபடுத்தப்பட்டவர்கள் தமது உண்டியலில் உள்ள விபரத்தை கிழித்தெறிந்து விட்டு உண்டியலை ஒப்படைத்துவிட்டு உடனடியாக அவ்விடங்களை விட்டு ஓடுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

இது பற்றித் தெரியவருவதாவது, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நிதி கையாடலில் தவறிழைத்ததை அடுத்து பிரித்தானிய செயரிற்றி கொமிசனால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. அதனால் இலண்டனில் புனர்வாழ்வுக் கழகத்துக்கு சேகரிக்கப்படும் பணம் செயரிற்றி கொமிசனால் நியமிக்கப்பட்டவரின் அறிவுறுத்தலின் படியே பயன்படுத்த முடியும். அதனால் இலண்டனில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு மாற்றாக வெண்புறா என்ற அமைப்பு முதன்மைப்படுத்தப்பட்டது. ஏனைய நாடுகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மட்டுமே நிதி சேகரிப்பில் ஈடுபட்டது. ஆனால் இலண்டனில் வெண்புறா அமைப்புக்கு நிதி வழங்குமாறு மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.


ஆனால் வெண்புறா அமைப்பு இவ்வாண்டு ஜனவரி வரை பிரித்தானிய செயரிற்றி கொமிசனில் பதிவு செய்யப்பட வில்லை. அதனால் வெண்புறா அமைப்புக்கு செயரிட்டி பதிவு இலக்கமும் இல்லை. அதனால் அது பொது மக்களிடம் நிதி சேகரிக்கும் தகமையை சட்ட விதிகளின் படி கொண்டிருக்கவில்லை. ஆனால் வெண்புறா அமைப்பினர் 1066824 என்ற பதிவு இலக்கத்தை நிதி சேகரிப்புக்கு பயன்படுத்தி வந்தனர். இப்பதிவு இலக்கம் வெண்புறாவினுடையது அல்ல. அது Medical Institute Of Tamils (MIOT) என்ற அமைப்பினுடையது.

பொலிசாரின் விசாரணைகளில் இது வெளிச்சத்துக்கு வந்ததை அடுத்து நல்ல நோக்கத்தில் நிதி சேகரிப்பில் ஈடுபட்டவர்கள் ஏதோ களவு செய்தவர்கள் போல் நடத்தப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். நிதிசேகரிப்பில் ஈடுபட்ட நிறுவனங்களின் அமைப்பாளர்களுக்கு முதலாவது துண்டுப் பிரசுரம் வெளியிடும் போதே இது சுட்டிக்காட்டப்பட்டதாகவும் ஆனால் அதனை சரி செய்வதாகக் கூறிவிட்டு மீண்டும் தவறான ஒரு பிரசுரத்தை வெளியிட்டதாகவும் ரூற்றிங்கில் நிதி சேகரிப்புப் பணியில் ஈடுபட்டவர் உதயனுக்குத் தெரிவிக்கிறார். மேலும் நிதி சேகரிப்பில் ஈடுபட்டவர்கள் சிலர் பொது மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் நடந்து கொண்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

வெண்புறா அமைப்பு ஜனவரி 4 2005ல் செயரிற்றி கொமிசனில் பதிவு செய்யப்பட்டு உள்ளது. இதன் பதிவிலக்கம் 1107434.

பா ஜெயராஜன்

# தொடரும் படுகொலைகள் புலம்பெயர் சமூகம் தொடர்ந்தும் மௌனம்



பெப்ரவரி 7ல் இடம்பெற்ற தாக்குதலில் வி.புலிகளின் மட்டு அம்பாறை அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன்(படம்) உட்பட ஐவர் உயிரிழந்துள்ளனர். மார்ச் 2003ல் வி. புலிகளுக்குள் ஏற்பட்ட கிளர்ச்சிக்குப் பின் இருதரப்பிலும் பழிவாங்கல் நடவடிக்கைகள் இடம்பெற்ற வண்ணமே உள்ளது. மார்ச் 2003 வரை சக போராளிகளாக இருந்தவர்கள் ஒரே இரவில் உயிர்குடிக்கும் எதிரிகளாகினர். இதனால் குருஷேஸ்திரமாகி உள்ளது மட்டு அம்பாறை பகுதிகள்.

இச்சம்பவத்தை அடுத்து இலங்கையில் சமாதானத்துக்கு மேலும் ஒரு அடி விழுந்து உள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழ் மக்களின் உரிமையை பெற்றுக் கொடுத்ததோ இல்லையோ தமிழ் மண்ணை பிணம் செய்யும் தேசமாக மாற்றி உள்ளது. 2002 பெப்ரவரியில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் இம்மாதத்துடன் மூன்று ஆண்டுகளைத் தாண்டி உள்ளது. இந்த ஒப்பந்தம் பெயரளவில் மட்டுமே சமாதானத்தை கொண்டு வந்துள்ளது.

சமாதான காலத்தில் பலநூறு தமிழர்கள் கொல்லப்பட்டு உள்ளனர். இந்த நீண்ட முடிவற்ற பட்டியலில் பெப்ரவரி 7ல் மேலும் ஐவர் சேர்த்துக் கொள்ளப்பட்டு உள்ளனர். தற்போது இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை மரணம் என்பது ஒரு கணக்கெடுப்பு என்பதற்கு அப்பால் ஒரு செய்தி என்பதற்கு அப்பால் பார்க்கப்படுவதில்லை. ஏனென்றால் அவர்கள் மரணத்துள் வாழும் மக்கள்.

பலநூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்ட போதும் புலம்பெயர்ந்து வந்து தமது உயிர்களைக் காப்பாற்றிக் கொண்டவர்கள் உயிர்க்கொலைகளை தவறு என்று கண்டிக்க முன்வரவில்லை. மாறாக கொலைகள் வெவ்வேறு காரணங்களுக்காக நியாப்படுத்தப்பட்டன. இன்று புலம்பெயர்ந்த இளைஞர்களும் 10க்கு மேற்பட்ட கொலைகளைச் செய்துள்ளனர். அவர்களும் தமது பார்வையில் அதனை நியாயம் என்கின்றனர். உயிர்க்கொலைகள் அனைத்தும் அது யாரால் செய்யப்பட்டு இருந்தாலும் கண்டிக்கப்பட வேண்டும். அந்த நிலைக்கு தமிழ் மக்கள் வரவேண்டும். கொலைகளை ஆராய்ச்சி செய்து முடிவெடுக்க முற்பட்டால் இன்னும் இக்கொலைப் பட்டியல் வளர்ந்து கொண்டே செல்லும்.



கௌசல்யனின் படுகொலைக்கு புலிகளில் இருந்து பிரிந்து சென்ற கேர்ணல் கருணா (படம்) தலைமையிலான கிளர்ச்சிக் குழுவே காரணம் என்று சொல்லப்படுகிறது. அரச படைகள் இதற்கு துணையாக இருந்ததாக வி.புலிகள் குற்றம் சுமத்தி உள்ளனர். அரசு படைகள் அதனை மறுக்கின்றன. குற்றம் சாட்டுவதும் மறுப்பதும் இலங்கையில் ஒன்றும் புதிதல்ல. பலநூறு கொலைகளுக்கு குற்றச்சாட்டுகளும் உண்டு மறுப்புகளும் உண்டு. ஆனால் கொலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை. வைக்கப்படும் அறிகுறியும் தற்போதைக்கு இல்லை. இக்கட்டுரை எழுதப்பட்டு உங்கள் கைக்குக் கிடைக்க முன் எமது தமிழ் தேசம் இன்னும் சில பிணங்களைச் செய்திருக்கும்.

www.imperial-world.com
The Furniture Warehouse
For all your furniture needs
Sofas, Dining Sets, Beds + mattresses, Desks, coffee tables, Wardrobes + Chests
Stores - Wimbledon, Hayes & Perivale
020 8998 7344

We DISCOUNT our PRICES not our QUALITY
DISCOUNT (CONSTRUCTION) DOUBLE GLAZING
FENSA Registered Company
Over 20 Years Experience
Selling direct to Public
VISIT OUR SHOWROOM and see our VAST RANGE of QUALITY CONSERVATORIES
Visit our website: www.dconsdgltd.co.uk
Email: bhudia@freeuk.com
Call 020 8514 0819
844 Romford Rd, Manor Park, London E12 5JP

BRIGHT WINDOWS LTD www.brightwindows.co.uk
Manufacturers, Suppliers & Installers of Double Glazing, UPVC and Aluminium Windows, Doors, Patio Doors & Porches
Trade & Retail Welcome
020 8459 8811
www.brightdoubleglazing.co.uk Fax: 020 8459 8844
202 Church Road, Willesden, London NW10 9NP

V.J.CARPETS Ltd.
Full 3 Bedroom house Carpets
Contact us on
(T) 020 8574 9033
(M) 07958 681 009
110, The Green, Southall, Middx. UB2 4BQ


# சுனாமிக்குப் பின் : மக்களின் உறுதியையும் இன ஒற்றுமையையும் கண்டு புலம்பெயர்ந்த தமிழர்கள் பெருமை கொள்கின்றனர்

சர்வதேச உதவிகள் இலங்கையை வந்தடைவதற்கு முன்னரேயே மக்கள் மீட்புப் பணிகளிலும் உடனடி நிவாரணப் பணிகளிலும் ஈடுபட்டு நிலைமையை மோசமடையாமல் செய்துள்ளனர். கிழக்கு மாகாணம் ஏற்கனவே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் டிசம்பர் 26ல் கொலைகாரச் சுனாமி கரையோரப் பிரதேசங்களைத் தாக்கியது. சுனாமி விபரீதத்துக்குப் பின்னரும் மட்டக்களப்பில் மழை காரணமாக மீட்புப் பணிகளும் நிவாரணப் பணிகளும் தடைப்பட்டது. இருந்தும் அங்குள்ள மக்கள் தமது சொந்த, பந்தங்களை இழந்த துயரத்துடனும் வேதனையுடனும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு உள்ளனர். அவர்களுடைய அந்த மன உறுதியை புலம்பெயர்ந்த தமிழர்கள் தொலைக் காட்சியில் வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.














தெற்காசியாவில் ஏற்பட்ட வரலாறு காணாத பேரழிவால் இலங்கை மிக மோசமாகப் பாதிக்கப்படடது. இலங்கையில் 40,000 பேர் வரை உயிரிழந்ததாகவும் 1.5 மில்லியன் பேர்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் மதிப்பிடப்பட்டு உள்ளது. ஏற்கனவே இரண்டு தசாப்த கால யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் சுனாமி கோரத் தாண்டவத்தை நிகழ்த்தி உள்ளது. தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லீம்கள் என்ற பாகுபாடில்லாமல் அனைவரையும் அள்ளிச் சென்றது சுனாமி. இன, மத பாகுபாடின்றி மக்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

வடமராட்சியில் இராணுவ வீரர்களை விடுதலைப் புலிகள் மீட்டெடுத்தனர். திருமலையில் இராணுவம் தமிழ் மக்கள் பலரையும் மீட்டெடுத்து காப்பாற்றியது. கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பில் மூவின மக்களும் ஒருவருக்கு ஒருவர் துணையாக இருந்து உள்ளனர். முஸ்லீம் மக்கள் தமக்கு கிடைத்த நிவாரணப் பொருட்களை தமிழ், சிங்கள சமூகங்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளனர். அம்பாறைக்கு முதலில் எடுத்துச் செல்லப்பட்ட நிவாரணப் பொருட்கள் பதுளையில் உள்ள சிங்கள, தமிழ் இளைஞர்களாலேயே எடுத்துச் செல்லப்பட்டு உள்ளது.

பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பகுதிகளில் பணி புரிவதற்காக சிங்கள மருத்துவர்களும் தாதிகளும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு விரைந்தனர். அவர்களது உதவியை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்டு அவர்களை பாதிக்கப்பட்ட வெவ்வேறு பிரதேசங்களுக்கும் அனுப்பி வைத்தனர். விடுதலைப் புலிகளின் மருத்துவக் குழுவில் பணியாற்றிய மருத்துவர் ஒருவரை நாம் தொடர்பு கொண்ட போது முல்லைத்தீவில் தான் பணியாற்றிய மருத்துவக் குழுவில் இருந்த ஒரே தமிழர் தான் மட்டும் தான் என்று தெரிவித்த அவர் ஏனையவர்கள் அனைவரும் சிங்களவர்கள் என்று குறிப்பிட்டார்.


TRICO SHIPPING WORLDWIDE
Small cartons and large container
Full House packing and shipping to any destination of your choice.
Special Rates:- COUCHIN, TREVENDRAM BOMBAY - CHENNAI
* Two regular shipments to Colombo per month
* Goods arrive within 17days
20 YEARS IN SERVICE
Call us for a friendly personal service
Tel: 020 8888 8787
Fax: 020 8888 5445
E-mail: trico@btclick.com
UNIT D 011 - BUILDING C BUSINESS CENTRE, CLARENDON ROAD, WOODGREEN, LONDON N22 6XJ


பிரித்தானிய தமிழ் சமூகத்தின் ஒரே குரல் உதயன்

SIGN ★ A ★ RAMA
"WHERE THE WORLD GOES FOR SIGNS"
For all your Signage needs
Shop Fascias, Window Graphics, Pavement Boards and much more
0800 634 0096
220 Church Lane, Kingsbury
London NW9 8SN
www.signking.net
QMS ISO 9001 REGISTERED FIRM Reg. No. 8876

Panesar Electrical Co
Lighting Showroom
NOW OPEN @ 362 HIGH STREET NORTH MANOR PARK LONDON E12 6PH
FOR MORE INFO
TEL: 020 8472 1833 FAX: 020 8471 6231







1. அமைச்சுச் செயலாளர் ஸ்ரீவன் ரிம்ஸ் கவுன்சிலர் போலுடன் உரையாடுகிறார்.
2. அமைச்சரைச் சந்திக்க வந்திருந்த தமிழ் மக்கள் அவருடன் உரையாடுகின்றனர்.
3. சைவ முன்னேற்றச் சங்கப் பிரதிதி தமது அமைப்பின் நிவாரண நடவடிக்கைகளைப் பற்றி அமைச்சருக்கு விளக்குகிறார்.

## விரைந்து சென்ற நிவாரணங்கள்

சுனாமி செய்தியைக் கேள்விப்பட்ட புலம்பெயர்ந்த மக்கள் பணம், மருந்து வகைகள், உலர் உணவுகள், ஆடைகள் என சேகரிப்பில் ஈடுபட்டனர். கவுன்சிலர் போல் சத்தியநேசன் தலைமையில் தேசம் குழுவினரும் நிதி தவிர்ந்த சேகரிப்புப் பணிகளில் ஈடுபட்டனர். இப்பொருட்கள் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. அப்பொருட்களை இங்கு சேகரிப்ப தில் பாரதி தமிழ் பள்ளி, வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலயம், சைவ முன்னேற்றச் சங்கம், எட்ச்வெயர் அன்னை காயத்திரி ஆலயம், இலண்டன் தமிழ் சங்கம் மற்றும் தனிநபர்கள் பலரும் ஒத்துழைப்பு வழங்கி இருந்தனர். சேகரிக்கப்பட்ட மருத்துவப் பொருட்கள் விமான மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டு அக்கரைப்பற்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

தேசம் குழுவினரால் ஈஸ்ற்ஹாம் ஹை ஸ்ரீற்றில் ஒரு உதவி மையம் ஆரம்பிக்கப்பட்டது. சதா அன்கோ சொலிசிற்றஸ் நிறுவனம் இவ்விடத்தை தற்கா லிகமாக வழங்கி இருந்தது. பல்லினத்தவர்களாலும் வழங்கப்பட்ட ஆடைகள் நிரம்பி வழிந்தது. மையத்துக்கு வந்த அமைச்சுச் செயலாளர் ஸ்ரீவன் ரிம்ஸ் வந்திருந்தவர்களைச் சந்தித்து குறைகளைக் கேட்டறிந்தார்.

ஈலிங் கனகதுர்க்கைஅம்மன் ஆலயத்தினர்£40,000களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு வழங்கி. உள்ளனர். மேலும் £15,000 பெறுமதியான மருத்து வப் பொருட்களையும் கிழக்கு மாகாணத்துக்கு அனுப்பி வைத்தனர். இவர்கள் ஐந்து 40அடி கெண்ரெயினர்களில் நிவாரண உதவிகளை அனுப்பி வைத்தனர். மேலும் இவர்கள் கிழக்கு மாகாணத்தில் சிறுவர் இல்லங்களை பராமரித்து வரு வது குறிப்பிடத்தக்கது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து இவர்கள் சில நீண்ட காலத் திட்டங்களையும் மேற்கொள்ள உள்ளதாக இவ் ஆலயத்தின் நிர்வகத் தலைவர் கருணலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார். இவ்வாறாக பல்வேறு அமைப்புகளும் நிறுவனங்களும் தனி நபர்களும் தத்தம் எல்லைகளுக்குள் துரிதமாகச் செயற்பட்டு தமது பங்களிப்பை மேற்கொள்கின்றன.

ஆனால் அப்பேரழிவு இடம்பெற்ற சில மணி நேரங்களிலேயே நிவாரணப் பணிகளையும் மீட்புப் பணிகளையும் மேற்கொண்ட விடுதலைப்புலிகளினதும், உள்ளூர் அமைப்புகளினதும், வர்த்தக ஸ்தாபனங்களதும் தனிநபர்களதும் பங்களிப்பு மிக அபாரமானது. சர்வதேச உதவிகள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சென்றடையும் வரை ஒரு வாரகாலமாக இந்த உள்ளூரில் செயற்பட்டவர்களின் உழைப்பு, மனிதாபிமானம் பாராட்டப்பட வேண்டும். அதற்கு ஈடு இணை எதுவும் இல்லை.

# கார்த்திகாவின் அரங்கேற்றம்



கார்த்திகா சிவராஜாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் ஒக்ரோபர் 16ல் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீமதி வசந்தகுமாரியின் மாணவியான கார்த்திகா இம்பீரியல் கொலிஜ் பல்கலைக்கழகத்தில் Maths & Management 2nd year ல் படிக்கிறார். இவர் தமிழ் மொழியோடு வாய்ப்பாட்டு, வயலின், நடனம் ஆகிய நுண்கலைகளை தனது நான்கு வயது முதல் பயின்று வருகிறார். சகல வல்லமை பொருந்திய இந்த இளவயது மங்கை பாடுவதிலும் பேசுவதிலும் நடிப்பதிலும் வல்லவர் என்கிறார் ஹென்டன் தமிழ் பாடசாலை தலைமை ஆசிரியை ஸ்ரீமதி சுமதி சிவமோகன்.

கார்த்திகா, ஸ்ரீமதி வசந்தகுமாரியின் 50வது மாணவியாக அரங்கேறி உள்ளார். ஸ்ரீமதி வசந்தகுமாரி பரத்சேச்ரா நாட்டியாலயம் என்ற நுண்கலை அமைப்பை இலங்கையில் நிறுவி நடனக்கலையை பயிற்றுவித்தார். ஸ்ரீமதி வசந்தகுமாரி 2000ம் ஆண்டு இலங்கையின் இந்து கலாச்சார அமைச்சினால் வழங்கப்படும் சாகித்திய விருதை பெற்றார். மேலும் ரத்தினதீபம் விருதையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர்கள் சம்பந்தப்பட்ட மோசமான வன்செயல்களில் வீழ்ச்சி

தமிழர்கள் சம்பந்தப்பட்ட வன்செயல்களில் வீழ்ச்சி ஏற்பட்டு உள்ளது. 2000 முதல் இதுவரை 15 வரையான கொலைகள் இடம்பெற்று உள்ளது. அதில் 7 கொலைகள் கடந்த 22 மாதங்களுக்குள் நடந்துள்ளது. இவ்வருடம் ஜனவரி முதல் இரு கொலைகள் மட்டுமே நடந்துள்ளது. இலண்டனில் பொலிசாரின் தீவிர நடவடிக்கையால் இந்த வன்முறைக் குழுக்கள் பிரித்தானியாவின் வெவ்வேறு பகுதிகளுக்குள் நுழைந்துள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

பொலிசாரின் புலனாய்வுத் தகவல்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒப்பிரேசன் என்வர், ரமிழ் ஹொட்லைன், துண்டுப் பிரசுரங்கள் போன்ற பொலிசாரின் தீவிர நடவடிக்கையால் வன்முறைகள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இந்நடிவடிக்கைகளால் இளைஞர் குழுக்கள் தமது வழமையான இருப்பிடங்களைக் கைவிட நிர்ப்பந்திக்கப்பட்டு உள்ளதாக டிஎசி ஸ்ரீபன் ஹவுஸ் தெரிவிக்கிறார். அவர் மேலும் தெரிவிக்கையில் பொலிசார் வன்முறைகளைக் கட்டுப்படுத்தி உள்ளனரே அல்லாமல் அதனை முற்றாக ஒழித்தது விடவில்லை என்றும் அதற்கு சிறிது காலம் தேவைப்படுவதாகவும் தெரிவித்தார்.

தமிழ் இளைஞர் குழுக்களிடையே நடைபெறுகின்ற அத்தனை சம்பவங்களும் பொலிஸில் பதிவு செய்யப்படுவதில்லை என்பதால் வன்முறையின் அளவு நிர்ணயிக்க முடியாதுள்ளது. அனால் உயிரிழப்புகள், கடத்தல்கள், மோசமான உடற்காயங்கள் ஏற்படும் பட்சத்தில் அவை பதிவு செய்யப்படுகின்றன. 00, 01 ம் ஆண்டுகளில் அவ்வகையான 200 குற்றச்செயல்கள் பதிவு செய்யப்பட்டதாக வடக்கு இலண்டன் கொமாண்டர் ரிச்சட் பிரயன் தெரிவித்திருந்தார். ஆனால் இப்போது மாதம் சராசரியாக 40 குற்றச்செயல்கள் பதிவு செய்யப்படுகின்றது. இருப்பினும் மோசமான உயிராபத்தை ஏற்படுத்தக் கூடியதும் உடற்காயங்களை ஏற்படுத்தக் கூடியதுமான சம்பவங்கள் குறைந்தே உள்ளன. தற்போது பொலிசாரிடம் முறையிடுவோரின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளமை; மேலும் வன்முறைச் சம்பவங்களை விட கிறடிட்காட் மோசடி, திருட்டு வாகனங்களைப் பயன்படுத்தியது அல்லது வாகனங்களைத் திருடியது போன்ற குற்றச் செயல்களும் பதிவுக்கு உட்படுத்தப்படுவதால் குற்றச் செயல்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது.

# நிதி சேகரிப்பில் சாதனை

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சுனாமி நிதி சேகரிப்பில் சாதனை நிகழ்த்தி உள்ளது. புலம்பெயர்ந்த மக்கள் தங்களது இயல்புக்கு சற்று அதிகமாகவே தமது பங்களிப்பை வழங்கி உள்ளனர். சர்வதேச அமைப்புகள் தம்மால் சேகரிக்கப்பட்ட நிதி விபரங்களை வெளியிட்டுள்ளன. ஆனால் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் எவ்வளவு நிதி சேகரிக்கப்பட்டது என்பது பற்றியும் அதனை எப்படிப் பயன்படுத்த உள்ளது என்பது பற்றியும் தொடர்ந்தும் மௌனமாகவே உள்ளது.

### தமிழ் குடும்பஸ்தரின் கொலை முயற்சி நிரூபிக்கப்பட்டது :

# மனைவி மீது ஒன்பது தடவைகள் கத்திக் குத்து

தனது மனைவியைக் கொலை செய்ய ஒன்பது தடவைகள் கத்தியால் குத்திய கணவனது கொலை முயற்சி நிருபிக்கப்பட்டு உள்ளது. பிளக்பெயர்ஸ் கிறவுன் நீதிமன்றத்தில் டிசம்பர் 6ல் ஆரம்பமான வழக்கிற்கு டிசம்பர் 10ல் தீர்ப்பு வழங்கப்பட்டது. பாலச்சந்திரமூர்த்தி யோகச்சந்திரன் (40) என்பவரே தனது 39 வயது நிரம்பிய மூன்று குழந்தைகளுக்குத் தாயான மனைவியை ஒன்பது தடவைகள் குத்தி கொலை செய்ய முயற்சித்து உள்ளார். வேலையற்றவரான பாலச்சந்திரமூர்த்தி யோகச்சந்திரன் தனது மனைவியைக் கொடுமைப்படுத்தும் பழக்கமுடையவர் என பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. யோகச்சந்திரனது தண்டனைக்காலம் ஜனவரி 27 2005 முதல் ஆரம்பிக்கிறது.

தென்மேற்கு இலண்டனில் மோடன் பகுதியில் பிளாற்றில் வசித்து வந்த இக்குடும்பத்தினரிடையே கசப்புணர்வு இருந்து வந்துள்ளது. கடந்த ஆண்டு நவம்பர் 24 அன்று காலை 8:50 மணியளவில் யோகச்சந்திரனின் 15 வயது மகள் அலறிக் கொண்டு பிளாற்றின் படிகளில் நின்று உதவிக்கு அழைத்தார். பொலிசாரும் மருத்துவ வண்டியினரும் அழைக்கப்பட்டனர். இவர்கள் பிளாற்றினுள் நுழைந்த போது திருமதி யோகச்சந்திரன் கத்திக் குத்துகளுடன் மயக்கமுற்ற நிலையில் குளியலறையில் வீழ்ந்து கிடந்தார். மருத்துவ வண்டித் தாதிகள் உடனடியாக அவருக்கு முதலுதவி அளித்து சென் ஹெலிஅர்ஸ் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். அங்கு அவருக்கு ஆறு மணி நேர சத்திர சிகிச்சை நடைபெற்றது. அதன் பின்பு இரு மாதங்கள் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது. நீண்ட சிகிச்சையின் பின் திருமதி யோகச்சந்திரன் உடல் நிலை தேறி பூரண குணமடைந்தார்.

இக் கொலை முயற்சி நடைபெற்ற மறுதினம் நவம்பர் 25 2003ல் பாலச்சந்திரமூர்த்தி யோகச்சந்திரன் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார். பொலிஸ் விசாரணைகளில் யோகச்சந்திரன் பதிலளிக்க மறுத்துவிட்டார். அதைத் தொடர்ந்து பொலிசார் யோகச்சந்திரன் மீது கொலை முயற்சி மேற்கொண்டதாக குற்றச்சாட்டைப் பதிவு செய்தனர். திருமதி யோகச்சந்திரனும் அவருடைய மகளும் ஆரம்பத்தில் பொலிசாருக்கு சாட்சியமளித்தனர். ஆனால் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அவர்கள் தமது வாக்கு மூலங்களை மாற்றிக் கொண்டனர். வழக்கு திகதிகளில் தாயும் மகளும் நீதிமன்றத்துக்கு வருகை தந்தனர். இவர்கள் சாட்சியமளிக்கையில் சம்பவ தினம் என்ன நடந்தது என்பதை தாங்கள் மறந்து

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# இலங்கைத் தமிழ் அகதிகளின் அகிம்சைப் போராட்டத்துக்கு அவுஸ்திரேலிய அரசு செவிசாய்த்தது

தம்மைத் தாயகத்துக்குத் திருப்பி அனுப்ப வேண்டாம் என்று கோரி அவுஸ்திரேலிய அகதி முகாமில் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டுவரும் இலங்கை அகதிகள் அதிகாரிகள் வழங்கிய உறுதிமொழியை, அடுத்து தங்கள் போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர். இவர்களில் சிலரின் உடல்நிலை மோசமடைந்திருந்ததால் அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இதே வகையான போராட்டத்தில் அவுஸ்திரேலியாவில் தஞ்சக்கோரிக்கை நிராகரிக்கப்பட்ட இலங்கையர்கள் உட்பட 16 பேர் ஒக்ரோபரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அகதி அந்தஸ்து மறுக்கப்பட்ட 16 பேரும் 2001 செப் 15ல் படகு மூலம் அவுஸ்திரேலியாவை சென்றடைந்தனர். கடந்த 3 வருடங்களாக தென் அவுஸ்திரேலியாவின் பாக்ஸ்ரர் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களது அகதி அந்தஸ்து கோரிக்கை மறுக்கப்பட்ட நிலையில் இவர்களை நாடு கடத்த அவுஸ்திரேலிய அரசு முடிவு செய்துள்ளதையடுத்தே, இவர்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளவர்கள் இலங்கையில் இன்னும் நிலையான சமாதானம் ஏற்படாத காரணத்தினால் நாட்டிற்குத் திரும்பிச் சென்றால் உயிராபத்து ஏற்படும் எனக் கூறி தமது தஞ்சக்கோரிக்கையை ஏற்கும்படி கோரியிருந்தனர்.

கடந்த காலங்களில் அவுஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாகச் சென்றபோது பிடிபட்டவர்கள் பலர் தற்போது தெற்கு அவுஸ்திரேலியாவின் பக்ஸ்ரர் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் தமக்கு அகதி அந்தஸ்து வழங்கக் கோரியும் தம்மைத் தாயகத்துக்குத் திருப்பி அனுப்ப வேண்டாம் எனக் கோரியும் நவம்பர் பிற்பகுதியில் பாக்ஸ்ரர் முகாமில் இரண்டு இலங்கையர்கள் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர். ஒரு வாரத்தின் பின் மேலும் 9 இலங்கையர்கள் இவர்களது போராட்டத்தில் இணைந்து கொண்டனர். போராட்டத்தால் தஞ்சம் கோரியவர்களின் உடல்நிலை மோசமடைந்ததால் முதலில் நால்வரும் பின்னர் மூவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். நெருக்கடி நிலையை உணர்ந்த அவுஸ்திரேலிய குடிவரவு அதிகாரிகள் போராட்டக்காரர்களுடன் பேச்சு நடத்தினர்.

இலங்கையில் தற்போது நிலைமை பழையபடி, மோசமடைய ஆரம்பித்திருப்பதால் முகாமிலுள்ள இலங்கையர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக நேர்காணல் செய்து அவர்கள் தொடர்பான, மீள் தயார் செய்யப்பட்ட அறிக்கையை குடி வரவு அமைச்சருக்கு அனுப்புவது என்று பேச்சுகளில் இணக்கம் காணப்பட்டுள்ளது என இந்தப் பேச்சுகள் தொடர்பாக அகதிகள் விவகாரத்துறைப் பேச்சாளர் மிரா றொபிள்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்களில் சிலருக்கு நெஞ்சு வலி, வயிற்று வலி போன்றவற்றுக்கான அறிகுறிகள் தென்பட்டதாலும் சிலரது பேச்சாற்றல் பெரிதும் குறைந்து மெல்லிய ஈனக்குரலில் காணப்பட்டதாலும் அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்கள்.

# வளர்ந்து வரும் கனடிய தமிழ் இசையமைப்பாளர்

கபிலேஸ்வர் என்ற கனடிய தமிழ் இளைஞர் தமிழ் இசைத் துறையில் தனக்கென ஒரு இடத்தை தக்க வைத்து வருகிறார். சிறுவயது முதல் இசையில் ஆர்வமுடைய இவர் கனடாவிலும் இந்தியாவிலும் இசைப் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டார். இவரது முதலாவது இசைத்தட்டு முதல் கனவு எச்எம்வி நிறுவனத்துடன் இந்தியாவில் வெளியிடப்பட்டது. உன்னிமேனன், உன்னிகிருஷ்ணன், ஸ்ரீனிவாஸ், கார்த்திக், ஹரிஸ், ராகவேந்திரா, சுஜாதா, சுவர்ணலதா, ஹரினி, பவதாரணி, அனுராதா ஸ்ரீராம், மகாநதி சோபனா என்று பலரும் இவரது இசையமைப்பில் பாடி இசைத்தட்டுக்களை வெளியிட்டு உள்ளனர்.



கபிலேஸ்வர் தற்போது தென்னிந்திய திரைப்படங்களுக்கும் கனடாவில் தயாராகும் திரைப்படங்களுக்கும் இசையமைத்த வருகிறார். உள்ளம் கவர்ந்தவளே, காதல் நயாகரா, சுகமே சுகம் ஆகிய படங்களுக்கு இவர் இசையமைத்து உள்ளார். காதல் சல்சா, சுவாசம், காதல் பேசுமா, என்றும் உன்நினைவில் போன்ற படங்களுக்கான இசையமைப்பிலும் கபிலேஸ்வர் ஈடுபட்டு உள்ளார்.

வளர்ந்துவரும் இவ்இசைக்கலைஞர் பல்வேறு விருதுகளையும் வென்றுள்ளார். கனடாவில் 2002ல் Artist Recognition Awardம் 2003ன் சிறந்த இசை அமைப்பாளருக்கான விருதும் வழங்கப்பட்டது.

# கொலை வழக்கில் தீர்ப்பு



சங்கர் கதிர்காமநாதனின் (24) கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட இரு வெள்ளை இன இளைஞர்களதும் கொலைக் குற்றம் நிரூபிக்கப்பட்டு உள்ளது. கடந்த ஆண்டு ஏப் 22 மாலை வேலை முடிந்து வீடு திரும்பும் போது சங்கர் குற்றவாளிகளால் தாக்கப்பட்டு இருவாரங்களின் பின் மே 6ல் மரணமானார். இச்சம்பவம் அஸ்போர்ட் கென்றில் இடம்பெற்றது.

6ம் பக்கத் தொடர்ச்சி...

விட்டதாகவும் இப்போதும் தாங்கள் யோகச்சந்திரனில் அன்பு செலுத்துவதாகவும் அவரை வீட்டுக்கு அழைத்துச் செல்ல விரும்புவதாகவும் தெரிவித்தனர். யோகச்சந்திரன் தடுத்து வைக்கப் பட்டு இருந்த போது தான் சென்று அவரை ஜெயிலில் பார்த்ததாக அவரது மனைவி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

யோகச்சந்திரன் ஒரு வன் முறையாளன், கிட்டத்தட்ட தனது மனைவியைக் கொலை செய்து விட்டார், அத்தம்பதிகளுக்கு இடையே வன்முறை சம்பவங்கள் நீண்ட காலமாகக் காணப்பட்டு உள்ளது, தங்கள் துணைகளை துன்புறுத்துபவர்களைக் கைது செய்து தண்டனை பெற்றுக் கொடுக்கும் கடமை எங்களுக்கு உண்டு என்று தெரிவிக்கிறார் Merton Police Community Saftey Unit DS Dave Mc Allister. அவர் மேலும் தெரிவிக்கையில் தேவைப்பட்டால்

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

QATAR AIRWAYS
VALID FROM 10JAN-20MAR
£290+taxes
BOMBAY
VALID FROM 07JAN-20MAR
Island Travel
£335+taxes
TRIVANDRUM, KOCHI
HYDERABAD
MUSCAT / BAHRAIN / ABU DHABI / KUWAIT
£205+taxes
KUALA LUMPUR / MANILA
£360+taxes
SHANGHAI / BEIJING
£330+taxes
Manu Travels
SriLankan £360+taxes
CALICUT / TRICHI / HYDERABAD / TRIVANDRUM
KOCHI / MADRAS / BOMBAY / DELHI
Manu Travels 306-308 High Street North, Manor Park, London E12 6SA
Tel: 020 8471 1919 Fax: 020 8471 4333
www.manutravels.com

RehncyShaheen
Chartered Accountants
www.rehncyshaheen.com
Our Services include
* Auditing
* Cashflow & Management Accounting
* Client Accounting Services
* Business Start-up
* Back Duty Investigation (Tax & VAT)
* Taxation
For Information:
Mr. Rehncy MA FCA FCCA CTA AIIT MCMI ACIArb
Middx. Offices: 020 8864 9065 020 8813 8324
1276/1278 Greenford Road, Greenford, Middx UB6 0HH.
Mr. A M Shaheen MA LLB ACEA MCMI
South London Office 020 7223 8221
189 Lavender Hill, London SW11 5TB

## சிறுகதைப் போட்டி

தமிழினி சிறுகதைப் போட்டிக்கான கடைசி நாள் காதலர் தினமான பெப்ரவரி 14 என அச்சஞ்சிகையின் ஆசிரியர் சி குலேந்திரன் அறிவித்து உள்ளார். இப்போட்டியில் உலகின் எப்பாகத்தில் இருந்தும் கலந்து கொள்ள முடியும் எனவும் அவர் உதயனுக்குத் தெரிவித்தார். ஆக்கங்கள் 5 பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும் என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டு உள்ளது. 1ம், 2ம், 3ம் பரிசுகள் முறையே £150, £100, £50 என அறிவிக்கப்பட்டு உள்ளது.

## தமிழ், முஸ்லீம் அறிஞர்கள் ஆய்வு நூல்

இலங்கைத் தமிழ், முஸ்லீம் அறிஞர்கள் பற்றிய ஆய்வுநூல் ஒன்றை தமிழினி மஞ்சரி வெளியிட உள்ளது. உங்கள் ஆக்கங்களை மார்ச் 15க்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு சஞ்சிகையின் ஆசிரியர் சி குலேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார். பிரசுரத்துக்கு தெரிவு செய்யப்படும் ஆக்கங்களுக்கு சன்மானமும் நூலின் 5 பிரதிகளும் படைப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் அவ்வாசிரியர் மேலும் தெரிவிக்கிறார். ஆக்கங் களுடன் அது தொடர்பான புகைப் படங்களையும் படைப்பாளியின் விபரங்கள் மற்றும் புகைப்படங்களையும் அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளது.

Financial Services
- Personal Accounts
- Sole Proprietorships, Partnership Businesses & Solicitors Accounts
- Company Accounts
- Project Reports & Management Information
- Budgets & Corporate Plans

Esther Abayasekara – ACMA
21 years experience in several industries
Tel: - 020 8952 8606
Mobile: – 07837 956 182
Fax: – 020 8952 9606
Email: esther_abay@yahoo.co.uk
Grosvenor House, 3rd Floor
1 High Street, Edgware, Middlesex, HA8 7TA

Khosla & Co.
Chartered Certified Accountants
For your Accounting and Taxation needs
Call
Tel: 020 8548 8899
Fax: 020 8548 8846
412 Katherine Road
London E7 8NP

# நால்வருக்கு 60 ஆண்டுகள் சிறை

## பொலிஸ் செய்தி

நான்கு தமிழ் இளைஞர்களுக்கு மொத்தமாக 60 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. டிசம்பர் 15ல் குறொய்டன் கிறவுன் நீதிமன்றம் இத்தீர்ப்பை வழங்கி உள்ளது. ஒக்ரோபர் 28 2003ல் குறொய்டனில் திருக்குமார் சோதிலிங்கத்தை கொலை செய்த குற்றத்திற்காக சுகந்தன் நடராஜா (24), சாந்தன் (விஜயகுமார்) தர்மலிங்கம் (28), ரஞ்சன் சண்முகநாதன் (26), சசிகரன் செல்வரட்ணம் (21) ஆகிய நால்வருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது. குற்றவாளிகள் ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என நீதிபதி இத்தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட திருக்குமாரின் குடும்பத்தினருக்கும் இத்தண்டனையைப் பெற்றுக் கொடுக்க கடுமையாக முயற்சித்த பொலிஸ் புலன்விசாரணைக் குழுவிற்கும் இத்தீர்ப்பு மிகவும் நல்ல தீர்ப்பு எனத் தெரிவிக்கிறார் Spesial Crime Directorate DI David Morgan. அவர் மேலும் தெரிவிக்கையில் திருக்குமாரை கொலை செய்வதற்கு மிக மோசமான வன்முறை பயன்படுத்தப்பட்டதாகவும் இந்தத் தீர்ப்பையே பாதிக்கப்பட்ட குடும்பத்தினரும் பொலிஸாரும் எதிர்பார்த்ததாகவும் குறிப்பிட்டார். தமிழ் சமூகம் குழுக்களின் வன்முறையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பதை இந்தத் தீர்ப்பு மிகவும் தெளிவாக வெளிப்படுத்தி இருப்பதாகவும் DI David Morgan தெரிவித்தார். (தொடர்ச்சி 15ம் பக்கம்)

## சுனாமி கணக்குகள் சர்வதேச நிறுவனம் ஆய்வு

சுனாமி அனர்த்தத்தை அடுத்து இலங்கைக்கு பல்வேறு நாடுகளில் இருந்தும் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதனால் வழங்கப்படும் நிதி தொடர்பான கணக்காய்வுகளை மேற் கொள்ளும் பொறுப்பை சர்வதேச நிறுவனம் ஒன்றிடம் கையளித்துள்ளதாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

இலங்கைக்குக் கிடைக்கும் நிதிகள் பற்றிய விபரமும் அவற்றினை செலவிடும் முறை பற்றியும், நாட்டு மக்கள் அனைவருக்கும் வெளிப்படையாக, ஒளிவு மறைவின்றி தெரிந்து கொள்ளும் விதத்தில் அந் நிறுவனம் கணக்காய்வுகளை மேற்கொள்ளும். மெகன்சி என்ற சர்வதேச நிறுவனமே இக்கணக்கு ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளது. இந்நிறுவனம் சர்வதேச மட்டத்தில் அரச மற்றும் அரச சார்பற்ற அனைத்துக் கணக்காய்வுகளையும் மேற்கொள்ளும் ஒரு பிரசித்தி பெற்ற நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

# கவுன்சிலர் போலுக்கு தேசிய விருது

நியூஹாம் வோல் என்ட் தொகுதிக் கவுன்சிலர் போல் சத்தியநேசனுக்கு தேசிய விருது வழங்கப்பட்டு உள்ளது. சமூகத்துக்கு எதிரான பழக்க வழக்கங்களை (Anti Social Behaviour) வேரறுப்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டமைக்காக அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டு உள்ளது. உள்துறை அமைச்சின் Together Taking a Stand Award என்ற விருதே டிசம்பர் முதலாம் திகதி இடம்பெற்ற வைபவத்தில் வழங்கப்பட்டது. இவ்விருதினை உள்துறை அமைச்சுடன் க்ரைம் கொன்சேன் மற்றும் கோப்-ஓப் அமைப்புகள் இணைந்து வழங்கின.


பிளக்பெயர்ஸ் மேர்மெயிட் தியட்டரில் இடம்பெற்ற விருது வழங்கும் வைபவத்தில் அறுநூறுக்கும் மேற்பட்டவர்கள் நாட்டின் பல்வேறு பாகங்களில் இருந்தும் பல்வேறு அமைப்புகளில் இருந்தும் கலந்து கொண்டனர். உள்துறை அமைச்சின் அமைச்சர் ஹசல் பிளியர்ஸ், பிபிசி க்ரைம் வோட்ச் பிரசன்டர் பியனோ புறுஸ் ஆகியோர் கவுன்சிலருக்கு விருதை வழங்கினர். மேலும் அவர்களது செயற்பாட்டை ஊக்குவிக்குமுகமாக ஆயிரம் பவுண்கள் வழங்கப்பட்டது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வெவ்வேறு செயற்பாடுகளுக்காக 100 விருதுகள் வழங்கப்பட்டது. அதற்கு 700 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது. அதிலிருந்து 100 பேர் விருதுகளைப் பெறத் தெரிவு செய்யப்பட்டனர். இவ்விருதைப் பெற்ற ஒரே ஆசியர் கவுன்சிலர் சத்தியநேசன் என்பது குறிப்பிடத்தக்கது.

சமூகப் பிறள்வு நடவடிக்கைகளான குழு மோதல்கள், அயலவர் தொந்தரவு, காடைத்தனம், காவாலித்தனம் இவற்றுக்கு எதிராக கவுன்சிலர் சத்தியநேசன் உறுதியாகச் செயற்பட்டிருந்தார். கவுன்சில், பொலீஸ் மற்றும் சமூக நிறுவனங்களுடன் இணைந்து வேலை செய்து சமூகத்தை பாதிக்கும் நடவடிக்கைகளை வேரறுக்க அவர் எடுத்த முயற்சி தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்டு உள்ளது. குறிப்பாக தமிழ் இளைஞர் குழுக்களின் வன்முறைகளைக் கட்டுப்படுத்தவும் அவர் முயற்சி எடுத்து வருகின்றார்.

கலாச்சாரம், பாரம்பரியம், சமூக மதிப்பு இவற்றை இளைய சமூகத்தினரிடம் கொண்டு சென்று அவர்களையும் சமூகத்துக்குள் உள்வாங்கி உன்னத சமூகம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று அவர் பேசுகையில் குறிப்பிட்டார். இவ்விருது தனக்கு மட்டும் தரப்பட்ட விருது அல்ல என்றும் தன்னுடன் இணைந்து செயற்பட்ட அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார். சமூகப் பிறள்வு நடவடிக்கைகளைக் களைவதில் உதயன் பத்திரிகை கொடுக்கும் ஊக்கத்தையும் கவுன்சிலர் பாராட்டினார்.

கவுன்சிலர் சத்தியநேசனுக்கு இவ்விருது வழங்கப்பட்டது நியூஹாம் கவுன்சிலுக்கே பெருமையாக உள்ளது என மேயர் ரொபின் வேல்ஸ் குறிப்பிட்டு உள்ளார். யாழ் உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட சத்தியநேசனுக்கு தமிழ் சமூகப் பிரதிநிதிகள் பலரும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். இலண்டன் தமிழர்கள் எல்லோருக்குமே கவுன்சிலர் பெருமை தேடித்தந்துள்ளதாக ஈலிங் அம்மன் ஆலய நிர்வாகத் தலைவர் கருணலிங்கம் குறிப்பிட்டார்.



உள்துறை அமைச்சின் அமைச்சர் ஹசல் பிளியர்ஸ், பிபிசி க்ரைம் வோட்ச் பிரசன்டர் பியனோ புறுஸ் ஆகியோர் கவுன்சிலர் போலுடன்

INDIAN FUNERAL DIRECTORS
We now operate from our new, modern & fully equipped premises on Mollison Way, Edgware.
Our comprehensive service includes:-
- Large prayer room (Mandir) for performing the last funeral rites or for paying the last respects
- All religious rites, ceremonies and wishes respected and administered
- Modern, fully equipped washing & dressing facilities
- Funeral ceremony items provided

Tel: 020 8952 5252
SANJAY or BHARAT SHAH (formerly of Kenton Road)
44 South Parade, Mollison Way, Edgware, Middlesex HA8 5QL.
MOBILE: 0777 030 66 44

# UNBEATABLE PRICES


*** TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE**

MASSIVE SALE





MASSIVE SALE

ELITE TILES are undeniably UK's No.1
Importers, Distributors, Wholesalers and Retailers
of

















*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*




## £2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR

(collect same day)

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**

**Elite House, The Broadway,
West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm – Sat 10am-5pm – Sun 10am – 2pm

MARKANDAN & SHARMA
Solicitors and Administrators for oaths

Nathan & Chelva
Solicitors

Mr. M. Markandan L.L.B (Hons)
available for consultation on:
079 5638 6576

Bow Business Centre
153-159 Bow Road
London E3 2SE
Tel: 020 8981 5330
Fax: 020 8981 5350

or

169 Tooting High Street
Tooting
London SW17 0SY
Tel: 020 8672 1800
Fax: 020 8672 0105

EVERGLADE WINDOWS



Double glazing styled with excellence
Quality
UPVc & Aluminium Windows
Patio Doors
Conservatories
Doors
10 year Guarantee
Visit Our Showroom
to see the extensive range of products
www.everglade.co.uk
020 8998 8775

## 7ம் பக்கத் தொடர்ச்சி...

பாதிக்கப்பட்டவரின் ஒத்துழைப்பில்லாமலேயே அவருக்கு ஆபத்து ஏற்படும் என்று கருதும் பட்சத்தில் நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்று தெரிவித்தார். யோகச்சந்திரனின் மனைவியும் அவரது மூன்று பிள்ளைகளும் இனிமேல் பயமில்லாமல் தங்கள் வாழ்க்கையை நகர்த்தலாம் என தான் நம்புவதாக டேவ் மக் அலிஸ்ரர் தெரிவித்தார்.

FUNTASIA
FANCY DRESS & PARTY SHOP
SPECIALIST IN PARTY GOODS
ESTABLISHED SINCE 1984
BALLOON PRINTING
BALLOON DECORATING
HELIUM HIRE
HELIUM HIRE PACKAGE
PARTY WARE NOVELTIES
BRIDAL FAVOURS SOFT TOYS
FANCY DRESS FOR HIRE & SALE
WINGS, MASKS, MAKE-UP
MAGIC TRICKS & JOKES
ADULT JOKES & NOVELTIES
PERSONALISED NAPKINS
AND BOOK MATCHES
CAKES MADE TO ORDER
RUBBER STAMPS SERVICES
FIREWORKS
INT'L MONEY TRANSFER
ADULT PRODUCTS FOR
HEN NIGHT & STAG NIGHT
229 KENTON ROAD,
KENTON, HARROW,
MIDDLESEX HA3 0HD
Tel/Fax: 020-8907 1333
email: funtasia@shivex.co.uk
www.funtasiaworld.com

2005 Hindu Directory
For Advertisements
Call 020 8905 7775

Champers Wines CASH & CARRY
Suppliers of Wines, Beers and Spirits
Wide range of product available
at very Competitive Prices
For further details contact
Sales on Tel: 020 8961 2889
Fax: 020 8963 0989
Unit 11, Cumberland Avenue, Park Royal, London NW10 7RT
We Accept All Major Credit Cards

THE INTERNATIONAL WOOD FLOOR CENTRE
MANY WELL KNOWN BRANDS
TARKET • KHARS • MORIN • MIRAGE JUNCKERS
SPECIAL OFFER
SOLID OAK
130mm x 19mm
£24.99 +VAT
21 North Parade, Mollison Way, Edgware HA8 5QH
T: 020 8951 4395 • F: 020 8951 4251
www.internationalwoodfloor.co.uk

CITY DEVELOPMENT & CONSTRUCTION
The Complete Building Service
New Build
Extensions
Renovations
Conversions
Plumbing
Electrical
Central Heating
Bricklaying
Plastering
Carpentry
Loft Conversions
Fax: 020 8472 8493
020 8470 2740
352-354 Katherine Road London E7 8NW
07768 936 114 or 07831 592 553

Take your opportunity NOW!!!
For Classified Advertisements Only £20/- Call 07957 681 944

British Gutter Systems
Tel: 020 8573 6333/ Fax: 020 8573 2390
Maintenance Free Leak Proof Gutters
Mobile Factory
Our installation team come to your home with our 'Mobile factory' and produce 'Made to Measure' guttering on site. Lengths of upto 70ft are not uncommon
Seamles (Jointless) Gutters | Downpipe | Facia, Soffis
Needs virtually no maintenance. Protects your roof's structure. Never Reapaint or Repair. Saves you time, money and worry. Adds value to your home
Visit Our Show room
Unit 2, Hayes Metro Centre, Springfield Road, hayes, Middlesex UB4 0LE

New Century Glazing Ltd.
...the ULTIMATE NEWBUILD or Complete refurbishment -
Eurocell's maintainence free PVCu WINDOWS and DOORS, FULLY WELDED and INTERNALLY BEADED...
Member of FENSA Free Estimates
Tel: 020 8848 0189
Unit 5, Halls Business Centre, Pump Lane, Hayes, Middx.

Style & Quality
Marble & Granite
Marble
Granites
Limestones
Ceramics
Custom Design & Installation
Kitchen Worktops
Vanity Tables
Wall Finish
Free Consultation & Quotes
52 Standard Road, Park Royal, London NW10 6EU
Tel: 020 8965 1441
www.quickgoldltd.co.uk
QG QuickGold Ltd

ALEC WADLOW & CO
THE DOOR, WINDOW & CONSERVATORY SPECIALIST
Local Family Business
Supplying and Installing
Quality Double Glazing
&
Conservatories
"We care about your home"
19 Village Way East, Harrow, Middx. HA2 7LX
Tel: 020 8866 3366

MANGALA MOTORS
High Quality at Sensible Prices
* Car/Van Sales
* Full and Iterim service
* MOT & Mechanical Repairs
* Professional Technician
* Fully Guranteed Job
Call On
020 8203 6655
Unit 1, 3 & 4, The Bridges
Aerodrome Road, London NW4 4SS

RASIAH & CO.
Solicitors
* Conveyancing (Residential & Commercial)
* Immigration
* Matrimonial
* Landlord & Tenants
* Police Station Representation
* Legal Aid work undertaken
020 8543 4040
020 8543 2400
180A Merton High Street, London SW19 1AY

SIA
Gold House
இந்தியாவிலும் இலங்கையிலும் பல்லாண்டு காலம் புகழ் பெற்ற LKS நகை மாளிகையின் மற்றுமொரு கிளை
தமிழர்களின் நகைக் களஞ்சியம்
346 High Street North
Manor Park London E12 6PH
020 8470 8282

UXBRIDGE
CARPETS & FURNITURE LTD
2 Double, 1 Single, 3 Wandlerbeds, 4 Chairs, 1 Dining table, 1 Colee table, 3 Piece Sofa
All just for £999 (including delivery)
(T) 020 8561 8633
(M) 07889 936406
1032 & 1034 Uxbridge Road,
Hayes, Middx. UB4 0RJ

YAASHIK Motors
* MOT - Diesel & Petrol
* Performance Tuning & Parts
* Mail Order
* Seat, Audi Specialist
* Servicing, Clutches, etc.
Tel: 020 8998 8900
Unit 5A, 255 Water Road, Wembley, Middx. HA0 1JW

Smart Signs & Blinds LTD.
SIGNS OF ALL KINDS
AWNINGS & CANOPIES
Suitable for both Home & Commercial Premises
0208 900 2873
07940 541 640

Shipping To Sri Lanka & Worldwide
We started shipping - Others followed
We have shipped 165 cars to Colombo in one vessel
For a friendly service Contact
Percy Jayawardena
Perma International
62D Cricklewood Broadway
London NW2 3EP
Tel: 020 8452 6750 Fax: 020 8452 3882
e-mail permainternational@yahoo.co.uk

HAD AN ACCIDENT RECENTLY ?
Should you have been involved in a motor accident which was not your fault, let JAK AUTOS manage your claim. We work on a NO WIN - NO FEE basis.
All service costs are recovered from the guilty party's insurance company.
Vehicle Replacement Rental
Storage
Recovery
Claim Management
Personal Injury
Legal Assistance
Repair



If you are unfortunate enough to be involved in an accident, call
J.A.K. AUTOS LTD.
unit 2 Sheraton Business Centre,
Wadsworth Close, Perivale Greenford,
Middx. UB6 7JB
email: jakautos@btconnect.com
(T) 020 8991 5454, (M) 07956 869039
(F) 020 8810 5800

## குரொய்டன் நீதிமன்றம் தீர்ப்பு .....
### (3ம் பக்கத் தொடர்ச்சி )



சோதிலிங்கத்தின் கொலை : பின்னணி :

Dennett Rd Croydon ஐச் சேர்ந்த திருக்குமார் சோதிலிங்கம் (28), (படம்) ஒக்ரோபர் 28 2003ல் தாக்குதலுக்கு உள்ளாகி தலையில் ஏற்பட்ட கடுமையான காயத்தினால் மரணமானார். சம்பவதினம் அதிகாலை 2 மணிக்கு மேற்கு குரொய் டன் இலண்டன் வீதியில் உள்ள உணவகத்திற்குச் சென்றவர் கடுமையாகத் தாக்கப்பட்டார். காத்திருந்த சிலர் இவர் அவ்விடத்திற்கு வந்ததும் தாக்கிவிட்டு வீதியில் போட்டுவிட்டு ஓடி உள்ளனர். பொலிஸார் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்தனர். மருத்துவ வண்டியில் காயப் பட்ட வரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கிருந்து மற்றொரு மருத்து வமனைக்கு சோதிலிங்கம் மாற்றப்பட்டு சில மணிநேரத்தில் மரணமானார்.

சோதிலிங்கத்தின் கொலை தொடர்பாக சுகந்தன் நடராஜா (24), சாந்தன் (விஜயகுமார்) தர்மலிங்கம் (28), ரஞ்சன் சண்முகநாதன் (26), மோகனராஜா தங்கராஜா (28), சசிகரன் செல்வரட்ணம் (21) ஆகிய ஐவர் ஒக்ரோபர் 30 2003ல் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் மறுதினம் குரொய்டன் மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். மேலும் குரொய்டனில் அருகருகில் இருந்த இரு வீடுகளை முற்றுகையிட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

குற்றவாளிகள் குரொய்டனில் வசிப்பவர்கள் என்றும் இவர்கள் யாழ்மாவட்டம் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகிறது. இவர் களுக்கு நிரந்தரவதிவிடம் இல்லை எனவும் சாந்தன் என்பவரைத் தவிர ஏனையவர்கள் வேலையற்றவர்கள் எனவும் பொலிசார் தெரிவித்திருந்தனர்.

AA EXPRESS
24 Hours Service
எங்கும் எப்போதும் அழைக்கலாம்
உங்கள் தேவை எங்கள் சேவை
தமிழ் சாரதிகள் உள்ளார்கள்
020 89020123
எங்கள் கம்பனிக்கு முழு அல்லது பகுதிநேர வாகன சாரதிகள் தேவை. வாரம் £500 மேல் கிடைக்கும். PCO Licence needed.
If you don't have, we will help you to get.

B&B SAVE MONEY SAVE TIME
B & B TIMBER & BUILDING MERCHANTS
Free Local Delivery
Open: MON - SAT 8 am to 6 pm
WED only 8 am to 1 pm
Call 020 8574 6691
020 8571 3430
6,7,8 - North Parade, North Road, Southall

LISA TIMBER LTD.
Importers of Hardwood & Parquet Flooring
REAL WOOD FLOORING AT DISCOUNTED PRICE
Call
020 8961 9030
Unit 40, Cumberland Business Park,
Cumberland Avenue,Park Royal NW10 7RX

## பட வெளியீடு

ஈழ நண்பர்கள் திரைக்கலை ஒன்றியத்தின் வெளியீடான கனவுகள் நிஜமானால் திரைப்படத்தின் விசேட வெளியீடு பெப்ரவரி 5ல் ரொல்வேர்த்தில் இடம்பெற்றது. ஊடகவியலாளருக்காக இக்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. பொது மக்களுக்கான காட்சிகள் வெகுவிரைவில் இடம்பெற உள்ளது.



## பேராசிரியர் சிவத்தம்பிக்கு விருது

சாகித்திய ரத்தினா என்ற உயர்ந்த இலக்கிய விருது பேராசிரியர் கா சிவத்தம்பிக்கு வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு இலக்கியவிழாவில் கா சிவத்தம்பி கலந்து கொள்ளாததால் ஜனவரியில் அவரது வெள்ளவத்தை இல்லத்தில் வைத்து தேசிய உரிமைகள் கலாச்சார அமைச்சர் விஜித ஹேரத் இவ்விருதினை வழங்கி பேராசிரியரைக் கௌரவித்தார். இச்சமயத்தில் இனங்களுக்கிடையேயான ஐக்கியத்தையும் புரிந்துணர்வையும் வளர்ப்பதற்கு பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வுகள் செய்யப்பட வேண்டியதன் .அவசியத்தை பேராசிரியர் அமைச்சருக்கு விளக்கினார்.



# சொல்றது அம்புட்டும் உண்மை

தொகுப்பு : பேராசிரியன் பெக்கோ

### குருக்களின் சிலுமிசம்:

என்ன இருந்தாலும் கோயில் குருக்களுக்கு இந்த மூளை கூடாது தான். ஏதாவது சிலுமிசம் தேவையென்டால் ரவல் காட்டை எடுத்துக்கொண்டு ஒருக்காலை Picadly பக்கம் இரவில போய் வரலாம் தானே. சும்மா மந்திரம் ஓதிக் கொண்டு கோயில் நிர்வாகம் செய்யும் அம்மாவில் கூடாது தானே. இந்தக் கோயில்களும் இல்லாட்டி லண்டன் very boring you see !

### நகை வாங்கலியோ!! நகை வாங்கலியோ!!!:

வெம்பிளி ஈலிங் றோட்டில் உள்ள நகைக்கடை ஒன்றுக்கு அப்பகுதி கோயில் ஒன்றினால் நல்ல வியாபாரமாம். 11 பிளஸ் பாஸ் பண்ண வேணும் என்று நேத்தி வைத்து சாமிக்கு தங்கச் சங்கிலிகளை அடியார்கள் போட அதைக் கொண்டு போய் நிர்வாகி அம்மா நகைக்கடையில் விற்க ஈலிங் றோட் வியாபாரம் படு பிசி யாம். என்ன தான் இருந்தாலும் ரோட்டுக்கு ஒரு கோயில் மிகவும் அவசியம் you see!

### பொம்பிளை விடயத்தில் நீர் கொஞ்சம் வீக்:

பொம்பிளை விடயத்தில் நீர் கொஞ்சம் வீக் அதனால் அரசியல் விவகாரங்களில் இருந்து கொஞ்சம் ஓய்வு எடும் ஐயா என இங்குள்ள ஒரு பிரமுகருக்கு கட்டளையிட்டுச் சென்றார் லண்டனிலிருந்த காலமாகிவிட்ட முக்கிய தமிழ் விடுதலை வீரர் ஒருவர். இது நடந்து தற்போது 12 வருடங்களுக்கு மேலாகிறது. இப்போது இந்த வீக்கான மனுஷன் பெரும் உஷார். தலைவர் என்றும் செயார்மென் என்றும் பல பதவிகளை நாடி ஓடுகிறார். இது காணாது என்று கோயிலுக்கு இன்னுமொரு கிளையும் திறக்க முயற்சிக்கிறார். வாழ்க உங்கள் பணி.

### சரியான 'விடுதலை' :

எமது ஜொனி வாக்கர் டாக்டர் எழுத்தாளரை மனைவி வீட்டை விட்டு கலைத்து விட்டதாக கேள்வி. அப்பாடா இப்போது தான் எனக்கு பூரண 'விடுதலை' என பெருமூச்சு விடுகிறாராம் ஜொனி வாக்கரின் முன்னாள் மனைவி. டாக்டருக்கு தண்ணி வாங்கிக் கொடுத்து பத்திரிகை நடத்தியவர்களுக்கு ஒரு எச்சரிக்கை. ஜொனி வாக்கரை இனி அணுக வேண்டாம். ஏனென்றால் வீடில்லாமல் அலையும் டாக்டர் உங்கள் வீட்டில் வந்து ஒரேயடியாக காம்ப் அடித்து விடுவார். நண்பரும் பாவம் அவரையும் வேலையால் துரத்தி விட்டார்கள். அதனால் இப்போது சமூகத்துக்கு 'விடுதலை' கிடைத்து விட்டதாம் என்று அவருடைய முன்னால் திங் ராங்க் கூறுகிறாராம்.

### லண்டன் பிரமுகர்கள் அவுட் :

இளையராஜாவின் சிம்பொனியில் திருவாசகம் ஏதோ லண்டனில் வெளியிடப்படுவது திண்ணம் தான். எனினும் அதில் லண்டன் பிரமுகர்கள் பெரும் பங்கு வகிக்க மாட்டார்கள் என்பது தான் இன்றைய நிலை என சம்பந்தப்பட்டவர்கள் அறியத் தருகிறார்கள். நிதி கொடுத்தவர்கள் நீதி கேட்க முன்னரே அவர்களுக்கு செக் அனுப்பியாச்சுதாம்.

### ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால் :

வடக்கு லண்டனில் பிரமுகர் ஒருவர் அவரது நண்பருடன் கொஞ்ச காலத்தக்கு முதல் கொழும்பு சென்றாராம். ஆசை யாரைத்தான் விட்டது. போன இடத்தில் பிரமுகர் கொழும்பில் பெண்களுடன் சிலுமிசம்....... ஏற்பாடு நண்பர் தானாம். பிரமு-கர் வெளியில் விட்ட சேட்டையை நண்பரின் வீட்டிலும் விட்டிருக்கிறார். ஏழரைச் சனியிலை கேது நின்ற கதையாகி விட்டதாம் பிரமுகரின் நிலை. இப்போது வெளிப்படையாக பிரமுகரின் கொழும்பு விவகாரம் பற்றி நண்பர் வெளியில் கூறி வருகிறாராம். இதனால் பிரமுகர் Happy இல்லையாம். அது மட்டும் இல்லையாம் நண்பருக்கும் வானொலி நண்பருக்கும் இருந்த உறவுக்கும் பிரமுகர் வேட்டுவைத்து விட்டாராம். அது இப்ப நெற்றிலையும் புகைக்கிதாம். அரசியல்ல இதெல்லாம் சகஜமப்பா என்கிறார் விடயமறிந்த நண்பர். இதைத் தான் எங்கட பழசுகள் ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால் என்று சொல்லி வச்சினமோ?

### தமிழ் கடை முதலாளிகள் உஷார் :

தமிழ் கடை சிறு முதலாளிகளின்ரை கஸ்டத்தை தெரிஞ்சு கொண்டு உந்த யமேக்கா காரன்கள் இரண்டு பேர் கள்ள நோட்டு அச்சடித்துத் தாறம் எண்டு சொல்லி ஏமாற்றப் பாத்திருக்கிறான்கள். எங்கடை ஆட்கள் என்ன அவ்வளவு இழிச்ச வாயன்களே. இரண்டு யமேக்கக் காரரையும் பிடிச்சு தரும அடியல்லே போட்டுட்டான்கள். உவங்கள் இரண்டு பேரும் ஈலிங்கிலயும் ஹரோவிலையும் பேக்காட்டிப் போட்டான்கள். ஆனால் இல்பேட்டில சிங்கன்கள் மாட்டி. வாங்கிக் கட்டிக் கொண்டு போயினம். இன்னுமொரு விளையாட்டும் இவை செய்யினம். தங்கடை ஆட்களிட்டை விலை போகாத சரக்குகளை எங்கடை கடைக்காறரிட்டை நல்லா விக்கும் என்று சொல்லி சாம்பிள் குடுப்பினம். பிறகு ஓராளைவிட்டு தாங்களே வாங்குவினம். இன்னுமிருக்கொ எண்டு வேற கேப்பினம். எங்கடையாக்களும் இது ஏதோ திறமா விற்கும் எண்ட நினைப்பில தொகையாய் வாங்கி விடுவினம். எதுக்கும் உஷாரய் இருங்கோ.

### தெய்வம் நின்று கொல்லும் :

ஆலயம் எப்போதும் பளபளப்பாக இருக்க வேண்டும். என்ன தான் இருந்தாலும் God lives there. பளபளப்பாக எல்லா இடமும் இருக்க வேண்டும் என்பதற்காக மினுமினுப்பாக இருக்கும் Kitchen wall tiles ஐ நிலத்தில் போடக்கூடாது கண்டியளோ. சூரன் போரிற்கு முதல் எல்லாம் பளபளக்க வேண்டும் என்று Kichen tiles ஐ படியில் போட; சூரன் போர் அன்று சூரன் வழுக்கி விழுந்து, சூரனின் மண்டை சிதறி விட்டது. அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்பது போல அடுத்த நாள் கோயிலில் இடம்பெற்ற மீற்றிங் இல் கலந்து கொண்டு இறங்கி வந்த Trusteeகள் எல்லாம் வழுக்கி விழ பெரிய முசுப்பாத்தியாம். அந்த கோயில் ஒரு நல்ல முசுப்பாத்தியான இடம் கண்டியளோ. Commedy Club, Commedy Pup மாதிரி இனி அந்தக் கோயிலை Commedy Temple என்று அழைப்போமா?

### அட்வேட்டும் அட்வைசும் :

எங்கட ஊடகங்கள் எல்லாம் அட்வேட்டில் தான் ஓடுறது எண்டு நான் ஒண்டும் உங்களுக்கு புதுசா சொல்லத் தேவையில்லைத் தானே. ஆனா பாருங்க பேப்பர், ரெடியோ, உந்த ரீவிக்கள் நடத்திறவை கொஞ்சம் உண்மையையும் சொல்லலாம் தானே. அட்வேட் தருகினம் எண்டதுக்காக முழுப் பூசணிக்காயை சோத்திலை மறைக்க முடியுமோ. நக்கினார் நா இழந்தார் எண்டு எங்கட பழசுகள் சொல்லிறதிலை நிறைய விசயம் இருக்குத் தான். இந்த சொலிசிற்றர் பேம் செய்த அநியாயம். இன்டைக்கு அட்வேட் போட்டவையெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு உலகம் இருண்டுட்டுது என்டா எங்கட சனம் என்ன முட்டாள்களே. கதை நாறிப் போச்சுதெல்லோ. அட்வேட் போடுங்கோ வேண்டாம் எண்டு சொல்லேல்ல ஆனா அதுக்காக அட்வேட் தாறவை எல்லாரையும் அட்வைஸ் பண்ண விடாதெங்கோ. பாவம் சனங்கள். ஊரிலை அவங்கள் உசிரக் கொடுத்து சேர்த்த நம்பிக்கையை இங்க அட்வேட் வாங்கி விக்கிறது எந்த விதத்தில நியாயம்.

### செய்யிறதை மட்டும் சொல்லுங்கோ :

ரீவி ஒன்றிலை சொல்லுங்கள் வெல்லுங்கள் பரிசுகளை அனுப்பி வைக்கிறம் என்டாங்கள். ஆனால் வென்ற ஒருத்தருக்கும் ஒரு கோதாரியும் போய்ச் சேரேல்லை. உதென்ன நியாயம். டிஸ்க் வேல்ட் என்றியல் நாலு பழைய சிடியை அனுப்பினால் என்ன முதலுக்கு நட்டமா வந்திடும். இல்லை என்றால் என்னத்துக்கு சொல்லப் போறியல். நிகழ்ச்சியை நடத்திய ரீவிக்கும் ஒரு பொறுப்பு இருக்கெல்லே. காசு கொடுத்து சனம் உங்கடை சனலை எடுத்து பார்க்குது. உங்கட ரீவில சொல்லுறது செய்யப்படுகுதா இல்லையா எண்டு உங்களுக்குத் தெரியத்தானே வேண்டும். எல்லாரும் சனத்தை பேக்காட்ட வேணும் எண்டு நினைச்சா அதுகள் என்ன செய்யிறது பாவம்.

### முருகனின் திருவிளையாடலா :

இலண்டனில் உள்ள கோவில் சாமிக்கு அடியார்கள் போட்ட 7 தங்கச் சங்கிலியில் 3 காணாமல் போய்விட்டதாம். இது குறித்து மிகவும் குழப்பம் அடைந்துள்ள அடியார் ஒருவர் ரசீதும் கையுமாக ரஸ்டீக்களைச் சந்தித்து சங்கிலிகளைப் பற்றி வினவி வருகிறாராம். ரஸ்டீக்களிடம் இருந்த சரியான பதில் கிடைக்காததால் இவ்வடியார், சங்கிலி காணாமல் போனது முருகனின் திருவிளையாடலா அல்லது ரஸ்டிகளின் கைவரிசை யா என்று அங்கலாய்க்கிறார்.

# முல்லைத் தீவில் பணியாற்றிய மருத்துவ நிபுணருடன் சந்திப்பு

முல்லைத்தீவில் தான் பணியாற்றிய மருத்துவக் குழுவில் இருந்த ஒரே தமிழர் தான் மட்டுமே ஏனையவர்கள் அனைவரும் சிங்களவர்கள் என கொழும்பு பிரதான வைத்தியசாலையின் இதய வைத்திய நிபுணரும் கொழும்பு பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீட விரிவுரையாளருமான டாக்டர் உதயனுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார். பெயர் குறிப்பிட விரும்பாத இவர் டிசம்பர் 3ல் முல்லைத்தீவில் இருந்து கொழும்பு வந்தடைந்த போது தொலைபேசியில் தொடர்பு கொண்டோம்.

தமிழ் பிரதேச மீட்புப் பணிகளில் இலண்டனில் இருந்து Tamil Health Organization சார்பில் சென்ற டாக்டர் மூர்த்தி, டாக்டர் புவிநாதன், டாக்டர் புஷ்பராஜன் ஆகியோர் மகத்தான சேவையாற்றி வருவதாக பேட்டி அளித்த இதய நிபுணர் தெரிவித்தார். மேலும் பல மருத்துவர்கள் இலண்டன் உட்பட பல்வேறு நாடுகளில் இருந்தும் தனிப்பட்ட முறையில் தமது சேவையை வழங்க விரைந்து வந்துள்ளதை அவர் பாராட்டினார்.

இவ்விதய நிபுணர் பேரழிவு நிகழ்ந்த டிசம்பர் 26 முதல் ஜனவரி 2 வரை முல்லைத்தீவு, பளை, யக்கச்சி, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் மருத்துவப் பணிய-ில் ஈடுபட்டு இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. வடக்கு கிழக்கு மாகாண மீட்புப் பணிகளில் விடுதலைப் புலிகளுடன் உள்ளூர் மக்களும் இணைந்து திறம்பட செய்து வருவதாகவும் தற்போது பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நிவாரணம் வந்து சேர்கிறது எனவும் அவ் டாக்டர் தெரிவித்தார். தமிழர் பிரதேசங்களுக்கான விநி-யோகம் திட்டமிட்ட முறையில் தடுக்கப்படுகிறதா எனக் கேட்ட போது அவ்வாறு திட்டமிட்ட முறையில் எந்தத் தடையும் ஏற்படவில்லை என்றும் உடை, உணவு என்பன போதிய அளவு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். சில தனிப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம் என்று குறிப்பிட்ட அவர், நீண்டகாலத்தில் உதவிகள் பகிர்ந்தளிக்கப்படுவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். சில அதிகாரிகள் முட்டுக்கட்டை போடுவதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

தமிழ் பிரதேசங்களில் பல சிங்கள வைத்தியர்கள் தம்முடன் இணைந்து பணியாற்றியதாகக் குறிப்பிட்ட இந்நிபுணர் அவர்களின் சேவையை மிகவும் மெச்சினார். விடுதலைப் புலிகள் அரசைக் குற்றம் சாட்டுவது பற்றி கேட்ட போது தமிழ் பிரதேசங்களில் புலிகளின் நிர்வாகம் கடந்த பல ஆண்டுகளாக இருந்து வருகிறது என்றும் தமிழ் பகுதிகளில் அரச அதிகாரிகளும் புலிகளுக்கு கட்டுப்பட்டே செயற்படுகின்றனர் எனவே இதில் அரசு நிவாரணப் பணிகளைச் செய்யவில்லை என்று கூறுவது நியாயமற்றது எனத் தெரிவித்தார்.



மருத்துவப் பணிகளுக்காக சங்குமன்கண்டி அகதிகள் முகாமுக்கு தென்னிலங்கை மருத்துவத் தாதிகள் குழுவினர் வந்துள்ளனர்

# பொடா கைதிகளை விடுவிக்க லண்டன் மனிதநேய அமைப்பு கோரிக்கை

பொடாச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்திருப்பவர்களை விடுவிக்கும் படி அகதிகள் புனர்வாழ்வு மற்றும் மனித உரிமைகளுக்கான இயக்கம் கோரிக்கை விடுத்து உள்ளது. மனித உரிமைகளை பாதிக்கும் பொடாச் சட்டத்தை கடுமையான எதிர்ப்பின் காரணமாக இந்திய அரசு கைவிட்டது. ஆனாலும் இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்ந்தும் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டு, கொடுமைகளை அனுபவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டு உள்ளனர். பொடாச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு இருக்கும் மக்கள் யுத்தக் குழு உறுப்பினர்கள் அண்மையில் வேலூர்ச் சிறையில் தங்களை விடுவிக்கக் கோரி உண்ணாவிரதம் இருக்கின்றனர்.

சிறப்பு முகாமை மூடுவதாக வாக்குறுதி அளித்த தமிழ்நாடு அரசு தொடர்ந்தும் இலங்கைத் தமிழர்களை கைது செய்து சிறப்பு முகாம்களில் அடைத்து கொடுமைப்படுத்துவதையும் அகதிகள் புனர்வாழ்வு மற்றும் மனித உரிமைகளுக்கான இயக்கம் கண்டித்து உள்ளது. பொட-ாச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுவிக்கக் கோரியும் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட நேபாள மாஓ இயக்கத் தலைவரை நாடுகடத்தாமல் விடுதலை செய்யும்படியும் இவ்வமைப்பு கோரிக்கைவிடுத்து உள்ளது. மேலும் நேபாள மக்களை கொடுமைப்படுத்தும் நேபாள அரசுக்கு இந்திய அரசு துணை போவதையும் அவ்வறிக்கை வன்மையாகக் கண்டித்து உள்ளது.

# கிழக்கின் சிறார்கள் : அதிர்ச்சி தரும் மனித உரிமைகள் அறிக்கை

HUMAN RIGHTS WATCH

நவம்பர் 2004ல் மனித உரிமைக்குழுவினர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் "குழந்தைகளும் இலங்கையின் உள்நாட்டுப் போரும்" என்ற 80 பக்க அறிக்கையை HRW வெளியிட்டது. டிசம்பர் 5ல் இலண்டனிலும் டிசம்பர் 12ல் ரொறன்ரோவிலும் இவ்வறிக்கை வெளியிடப்பட்டது. சுனாமிக்குப் பின் அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கி இருந்த முகாம்களில் இருந்தும் சிறார்கள் வி.புலிகளால் இயக்கத்துக்கு சேர்க்கப்பட்டு உள்ளார்கள் என யுஎன்எச்சிஆர் குற்றம்சாட்டி உள்ளது.

## குற்றச்சாட்டுகள் :

யுத்த நிறுத்த காலத்தில் சிறார்கள் மிகத் தீவிரமாக படையணிக்கு சேர்க்கப்பட்டது, ஏப்ரல் 10ல் விடுதலைப் புலிகளுக்குள் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து அவர்களுக்குள் ஏற்பட்ட குறுகிய ஆனால் மூர்க்கத்தனமான மோதலில் நூற்றுக்கும் மேற்பட்ட சிறார்கள் கொல்லப்பட்டது, கருணாவினால் வீட்டுக்கு அனுப்பப்பட்ட சிறார்கள், பலவந்தமாக வன்னிப் புலிகளால் சேர்க்கப்பட்டது, சிறார்களை அனுப்பாத பெற்றோர் தாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டது, வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டது, தப்பியோட முற்பட்டவர்கள் தண்டனைக்கு உள்ளானது கொல்லப்படுவது போன்ற அதிர்ச்சியூட்டும் தகவல்கள் இவ்வறிக்கையில் இடம்பெற்றிருந்தது. சிறார்கள் பயிற்சிகளின் போது கடுமையாக தண்டிக்கப்படுவது (ஒரு கட்டத்தில் சிறுவன் மீது கொதி நீர் ஊற்றப்பட்டதாக அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.), முன்னிலைத் தாக்குதலில் சிறுவர்கள் பயன்படுத்தப்படுவது போன்ற அம்சங்கள் கொண்ட சிறுவர் படையணியின் வேதனையான மறுபக்கத்தை அவ்வறிக்கை காட்டி உள்ளது.

சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு வழங்கப்பட்ட பல்லாயிரம் டாலர் நிதி அதற்கு முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டையும் HRW இவ்வறிக்கையில் தெரிவித்து உள்ளது.

## கருத்தரங்கில் சலசலப்பும் குழப்பமும் :

சிறார்களைப் படைக்குச் சேர்ப்பதை நிறுத்தும் படி புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் புலிகளை கேட்க வேண்டும் என பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்ட HRW, சிறார் உரிமைகள் பிரிவின் நியாயப் பிரிவுப் பணிப்பாளர் ஜோ பேக்கர் கருத்தரங்கில் தெரிவித்தார். இக்கருத்தரங்கில் பல்வேறு மனித உரிமை அமைப்பு பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள், உட்பட முன்னாள் போராளிகள் பலரும் கலந்து கொண்டனர். பிரித்தானிய பாராளுமன்றத்தின் இலங்கை விவகாரக்குழுவின் தலைவர் எட்மன்டன் பாராளுமன்ற உறுப்பினர் ஆண்டி லவ், தமிழ் பிரதிநிதி பூலோகலிங்கம் ஆகியோரும் அங்கு உரையாற்றினர். கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானவர்கள் சர்வதேச சமூகங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜோ பேக்கர் பேசும் போது புலிகள் தொடர்ந்து சிறுவர்களை படையில் சேர்ப்பதை தகுந்த ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டி இதனை நிறுத்துவதற்கு புலிகளுக்கு பணம் கொடுத்து ஆதரவளிப்பதை நிறுத்துங்கள் எனக் கேட்டுக்கொண்டார். அதன்பின் பேசிய அன்டி லவ் ( Andy love- MP Secretary Srilanka: All party parliamentary group) சிறுவர்களை படையில் சேர்ப்பது அந்த இனத்தின் பலவீனத்தையே காட்டுகிறது என்றார். அத்துடன் இது ஒரு பாரதூரமான விடயம் என்றும் இதனை எவர் செய்யவும் அனுமதிக்க முடியாது என்றும் மேலும் கூறினார்.

தொடர்ந்து பூலோகராஜன் என்பவர் பேச அழைக்கப்பட்டபோது புலிகளின் மனித உரிமை அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனக் கூறிக்கொண்டு மூவர் எழுந்து பூலோகராஜன் தமிழ் பிரதிநிதியாகப்பேசத் தகுதி இல்லாதவர். அவரை பேச விடமாட்டோம் எனக் கத்தினார்கள். உடனே பலர் எழுந்து நின்று அவர் ஒரு தமிழர். அந்த ஒரு தகுதியே போதும். அவரை பேச அனுமதியுங்கள் என்று குரல் கொடுத்தனர். அத்துடன் நீங்கள் சர்வாதிகாரம் காட்டுவதற்கு இது வன்னி அல்ல லண்டன் என்றனர். அதை அடுத்து சற்று அமைதி நிலவி கருத்தரங்கு தொடர்ந்தது. (படம் :இடது-ஜோபேக்கர், வலது-பூலோகராஜன்)



## ரொறன்ரோ கருத்தரங்கு :

இதே போன்று ரொறன்ரோவில் இடம்பெற்ற கருத்தரங்கிலும் குழப்பம் விளைவிக்கப்பட்டது. அங்கு ஒன்ராரியோவின் முன்னாள் மாநில முதலமைச்சர் பொப் ரே, ஜோ பெக்கர், ஜஸ்மின் கேர்ள்ட், கரின் லிப்பரட் மற்றும் கனேடிய தேசிய ஊடகங்களின் நிருபர்கள் உட்பட சுமார் 200 பேர் வரை கலந்து கொண்டனர். Prof. Noah Novogrodsky of the University of Toronto, Faculty of Law இக்கருத்தரங்குக்கு தலைமை தாங்கினார். கருத்துத் தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போதும் மற்றையவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது சிலர் கூச்சலிட்டு குழப்பம் விளைவித்தனர்.

தனது 25 வருட அரசியல், மற்றும் பொது வாழ்வில் இவ்வாறான அநாகரீகமான செயலை தான் கண்டதில்லையென ஒன்ராரியோவின் முன்னாள் மாநில முதலமைச்சர் பொப் ரே அங்கு கருத்துத் தெரிவித்தார். விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாக தங்களை இனம்காட்டிக் கொண்ட சிலரின் அடாவடித்தனங்களால் கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்ட போதும் கூட்டம் முழுமையாக நடைபெற்றது. சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மனித உரிமைகள் பற்றிய கருத்தரங்கில் இச்சம்பவம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.


## வாய் வேட்டுக்கள் :

இலண்டனில் இடம்பெற்ற கருத்தரங்கில் பார்வையாளர்களின் கருத்துக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டபோது குழப்பம் அதிகரித்தது. தங்களை புலிகளின் ஆதரவாளர்களாகக் காட்டிக் கொண்டவர்களை நோக்கி உங்கள் பிள்ளைகளை பிறைவேட் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவிட்டு ஹொலிடேயில் தமிழீழத்துக்குப் போகும் நீங்கள் அங்கு கஷ டப்படும் சிறுவர்களை பலிகொடுக்க வக்காளத்து வாங்குகிறீர்களா எனக் கேள்வி எழுப்பினர். மேலும் உங்கள் சொந்தப் பிள்ளைகளை யுத்தத்துக்கு அனுப்பத் தயாரா ? எனவும் அவர்கள் கேட்டனர்.

அப்போது விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் ஒருவர் எழுந்து 77ம் 83ம் ஆண்டுகளில் தமிழ் மக்கள் சிங்களவர்களால் தாக்கப்பட்டபோது இந்த மனித உரிமை அமைப்புகள் என்ன செய்தன? இன்று இவர்கள் சிஜஏ யிடம் பணம் பெற்றுக்கொண்டு புலிகளுக்கு எதிராக பொய் கூறுகின்றனர் என்றார். உடனே முஸ்லிம் பிரதிநிதி எஸ் எம் எம் பசீர் (படம்) எழுந்து 48 மணித்தியாலத்தில் எங்களை வெளியேற்றினீர்களே. அப்போது எங்கே போனது உங்கள் மனித உரிமை என்று கேட்டார். இதற்கு பதில் சொல்ல முடியாமல் கேள்வி எழுப்பியவர்கள் மௌன-மாக உட்கார்ந்தனர். அப்போது சபையில் பெரும்பாலான மக்கள் கைதட்டி அந்த முஸ்லிம் பிரதிநிதிக்கு தங்கள் ஆதரவினைச் செலுத்தினர்.



# திரும்பிச் செல்பவர்களுக்கு உதவ ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டம் திருப்பி அனுப்பப்படுவதை நிறுத்த கோரியது



நாட்டுக்கு திரும்பிச் செல்ல விரும்புபவர்களுக்கு உதவும் முகமாக அது பற்றிய விடயங்களை ஆராய்வதற்கான சந்திப்பினை European Integration Project of the Refugee Council, தமிழர் தகவல் நடுவத்துடன் இணைந்து டிசம்பர் 5ல் ஏற்பாடு செய்திருந்தது. ஆனால் திரும்பிச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவது கடுமையான எதிர்ப்புக்கு உள்ளானதை அடுத்து திருப்பி அனுப்புவதை தடுத்து நிறுத்த குரல் எழுப்புவது என இறுதியில் முடிவெடுக்கப்பட்டது. (படம்: வரதகுமார்)

இது தொடர்பாக தமிழர் தகவல் நடுவம் அனுப்பிய கடிதத்தில் பெப்ரவரி 2002ல் இடம்பெற்ற யுத்த நிறுத்த உடன்பாட்டுக்குப் பின் இலங்கைக்கு அகதிகள் தாமாக விரும்பி திரும்பிச் செல்வதாகவும் ஐரோப்பிய நாடுகள் இலங்கை ஒரு பாதுகாப்பான நாடாகக் கருதுவதாகவும் அதனால் தஞ்சம் மறுக்கப்பட்டவர்கள் தீவுக்கு திரும்பிச் செல்லலாம் எனவும் குறிப்பிடப்பட்டு உள்ளது. மேலும் கடந்த இரண்டு ஆண்டுகளில் 400 இலங்கையர் வரை நாட்டுக்கு திரும்பி உள்ளதாக பிரித்தானிய உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளது. இந்த 400 பேரில் எத்தனை பேர் தாமாக விரும்பிச் சென்றார்கள்; எத்தனை பேர் தஞ்சம் நிராகரிக்கப்பட்டதால் திருப்பி அனுப்பப்பட்டார்கள் என்ற விபரம் தெளிவுபடுத்தப்படவில்லை.

30,000 வரையான இலங்கைத் தமிழர்கள் தஞ்சம் நிராகரிக்கபட்ட நிலையில் பிரித்தானியாவில் வாழ்கின்றனர். இவர்களில் பல நூற்றுக்கணக்கானவர்கள் பிடித்து அனுப்பப்பட்டு விடுவோம் என்ற பயத்தில் இன்று தலைமறைவாக வாழ்கின்றனர். மேற்குலகில் தங்களுக்கு சுபிட்சமான வாழ்க்கை ஒன்று கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இலங்கையை விட்டு வெளியேறிய இன்னும் பல நூற்றுக் கணக்கானவர்கள் உலகின் பல்வேறு பாகங்களில் சிறையிலும் சிறைகளுக்கு வெளியேயும் பரிதவிக்கின்றனர். நிலைமை இப்படி இருக்கையில் திரும்பிச் செல்ல விரும்புபவர்களை ஊக்கப்படுத்தும் முயற்சி அவசியமானதா? என்றும் இம்முயற்சியின் பின்னணியில் வேறு நோக்கங்கள் உண்டா? என்றும் சந்தேகங்கள் எழுப்பப்படுகிறது.



தமிழர் தகவல் நடுவம் அரசியல் தஞ்சம் கோரிய தமிழர்களின் தஞ்சக் கோரிக்கையை பலப்படுத்தாமல் அதனை பலவீனப்படுத்தும் செயற்பாட்டில் இறங்குவது பிரித்தானியாவில் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட நிலையில் வாழும் பல்லாயிரக் கணக்கான தமிழர்களின் எதிர்காலத்தை பாதிக்கும் என சட்டத்தரணி அ கணநாதன் அச்சம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கையில் சமாதானம் வந்துவிட்டது என்று கூறி இப்போது திருப்பி அனுப்புகிறார்கள். பின்னர் இவ்வளவு பேர் இலங்கைக்கு திரும்பிச் சென்று வாழ்கிறார்கள் ஆகவே நீங்களும் அங்கு சென்று வாழலாம் என்று உள்துறை அமைச்சு வாதிடும். இதற்குத் தான் தமிழர் தகவல் நடுவம் வழிகோல்கிறதோ என்று அஞ்சுவதாக கணநாதன் அச்சந்திப்பில் கலந்து கொள்வதற்கு முன்னர் உதயனுக்குத் தெரிவித்தார்.

கணநாதனுடன் (படம்) இச்சந்திப்பில் நியூஹாம் தமிழர் நலன்புரி அமைப்பின் வெளிக்கள அலுவலர் ஜனார்த்தனன் தெற்கு இலண்டன் தமிழர் நலன்புரி அமைப்பின் அலுவலர் ஸ்ரானிஸ்லோ ஆகியோரும் கலந்துகொண்டு தமிழர் தகவல் நடுவத்தின் திட்டத்துக்கு தமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர். இங்கிருந்து தாமாக விரும்பி திரும்பிச் செல்கிறார்கள் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்த ஸ்ரானிஸ்லோ, தஞ்சம் கோரி சுயாதீனமாக செயற்படுவதற்குரிய அத்தனை வழிகளையும் உதவிகளையும் மூடிவிட்டு அவர்கள் சுயவிருப்பின் பேரில் திரும்பிச் செல்கிறார்கள் என்று கூறமுடியாது என்று வாதிட்டார்.

இக்கூட்டத்தில் விருப்பின் பேரில் திரும்பிச் செல்பவர்கள் பற்றிய தெளிவு ஏற்பட்டதாகக் குறிப்பிட்ட தமிழர் தகவல் நடுவத்தின் தலைவர் வரதகுமார் திரும்பிச் செல்பவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதன் அவசியத்தையும் பலவந்தமாக திருப்பி அனுப்பப்படுவதை தடுப்பதன் அவசியத்தையும் கவனத்தில் கொண்டு எதிர்காலச் செயற்பாடுகள் அமையும் என்று தெரிவித்தார். திருப்பி அனுப்புவதை தடுப்பதற்கான போராட்டம் ஒன்றுக்கும் அக்கூட்டத்தில் அழைப்பு விடுக்கப்பட்டது.

# தொடரும் அவைக்காற்றுக் கழகத்தின் பயணம்

வெள்ளி விழாக் கண்ட அவைக் காற்றுக் கழகம் சளைக்காமல் தொடர்ந்தும் மேடையேற்றங்களை நிகழ்த்தி வருகிறது. அவைக் காற்றுக் கழகத்தின் இளம் கலைஞர்கள் பங்கு கொண்ட சிறுவர் நாடக விழா டிசம்பர் 19ல் வின்ஸ்டன் சேர்ச்சில் மண்டபத்தில் இடம்பெற்றது. லண்டன் தமிழ் நாடகப் பள்ளி மாணவர்களின் அரசனின் புத்தாடை, தெற்கு லண்டன் தமிழ் பாடசாலை மாணவர்களின் பண்டார வன்னியன், பிறன்ற் தமிழ் பாடசாலை மாணவர்களின் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, அவைக்காற்றுக் கழகத்தின் அவசரக்காரர்கள் என நான்கு சிறுவர் நாடகங்கள் மேடையேற்றப்பட்டது.

அவைக் காற்றுக் கழகத்தில் ஏற்பட்ட உள் முரண்பாடுகளை ஓரம்கட்டி மீண்டும் தனது பயணத்தைத் தொடர்ந்துள்ளது. நவம்பர் 20 இக்குழுவினரது நாடக விழா பேர்மிங்ஹாம் வூல் வகாம்ரன் நகரில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வர பாலாஜி ஆலயத்தின் கலாச்சார அரங்கில் மேடையேறியது. கண்ணாடி வார்ப்புகள், செழியனின் பெருங்கதையாடல், மாவை நித்தியானந்தனின் அவசரக்காரர்கள் ஆகிய நாடகங்கள் அங்கு மேடையேற்றப்பட்டன. பெரும்பாலும் ஈழத்தமிழ் ரசிகர்களையே பார்வையாளராகக் கொண்டிருந்த நிலையில் பேர்மிங்ஹாம் நாடகவிழா பெருமளவில் தென்னிந்திய பார்வையாளர்களை கவர்ந்துள்ளதாக நாடகக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

# இலண்டன் தமிழ் நிலையத்தில் புகைகிளம்பிவிட்டது



சட்பறி, வெம்பிளி பகுதியில் இயங்கி வரும் லண்டன் தமிழ் நிலையத்தின் தலைவர் நியமனம் சர்ச்சைக்கு உள்ளாகி உள்ளது. இதைத் தொடர்ந்து உறுப்பினர்கள் மத்தியில் புகை கிளம்பி உள்ளது. லண்டன் தமிழ் சங்கத்தின் ஒரு அங்கமாகவே லண்டனில் முதன்மையான தமிழ் பாடசாலையான வெம்பிளி தமிழ் பாடசாலை இயங்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. இத்தமிழ் பாடசாலையின் அதிபராக சண்றைஸ் டாக்டர் நித்தியானந்தன் (படம்) பணியாற்றி வருகிறார்.

புதிய நிய மனம் சம்பந்தப்பட்ட பல உறுப்பினர்களுக்கு விசனத்தை அளித்து உள்ளது. இப்பதவியை ஏற்க உள்ளவர் இலண்டன் தமிழ் நிலையத்துக்கு தனது நேரத்தையும் உழைப்பையும் வழங்கக் கூடியவரல்ல என்று உறுப்பினர்கள் கருதுகின்றனர். அதனால் இப்பதவி கொடுக்கப்பட்டதன் மூலம் வீணடிக்கப்பட் டுள்ளதாக பரவலாக அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையத்தின் யாப்பின் பிரகாரம் இப்பதவியில் ஒருவர் ஒரு வருட காலம் மட்டும் தான் இருக்க முடியும். "மனுசன் ஆசைப்படுகுது ஒரு வருஷம் இருந்து விட்டுப் போகட்டுமன்" என்று ஒரு நீண்டகால உறுப்பினர் கருத்துத் தெரிவித்தார். "சிலர் பதவிகளுக்காக தலைவிரி கோலமாக அவாப்பட்டுத் திரிவதால் பல புதியவர்களுக்கும் இளைஞர்களுக்கும் வாய்ப்பு இல்லாமல் போகிறது" என இன்னுமொரு சாரார் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

இது இப்படியிருக்க, உறுப்பினர்களுக்கு இடையில் நிலவி வரும் கருத்து வேற்றுமையின் காரணமாக இரு உறுப்பினர்கள் Lottery Fund இற்கு கடிதம் போட்டு இந்நிலையத்திற்கு கிடைத்து வந்த நிதி உதவியையும் நிறுத்தியுள்ளனர். இவ்வாறு கடிதம் போட்டு நிதி உதவியை நிறுத்தியவர்கள் இன்னமும் இந்நிலையத்துடன் தொடர்பு கொண்டு இருப்பதாக மேலும் அறியப்படுகின்றது. எரிகின்ற வீட்டிற்குள் எண்ணையை ஊற்றியது போல சீவரத்தினத்தின் நியமனம் இந்நிலையத்திற்கு பெரும் தலையிடியாக மாறியுள்ளது.

# போலி பொலிஸ் உடையில் £80,000 திருட்டு

பொலிஸ் உடையில் வந்த போலிகள் எண்பதிணாயிரம் பெறுமதியான பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர். இச்சம்பவம் தென் குரொய்டனில் உள்ள ரின்டேல் குளோஸில் ஜனவரி பிற்பகுதியில் இடம்பெற்றது. கைத்துப்பாக்கியுடனும் கத்தியுடனும் நுழைந்த இவர்கள் தனியாக இருந்த வீட்டுக்காரரை மிரட்டி எண்பதிணாயிரம் பெறுமதியான தங்கக் காசுகள் இரண்டாயிரம் பவுண் பணம் என்பவற்றைத் திருடி உள்ளனர். 40 நிமிடங்கள் நீடித்த இந்தத் திருட்டுச் சம்பவத்தில் வீட்டுக்காரர்கள் தாக்கப்பட்டும் உள்ளனர். பிளம்பிங் வேலைக்கு ஒருவர் வருவதாக இருந்ததால் இரவு 10 மணிக்கு அழைத்தபோது வீட்டுக்கதவுச் சங்கிலியை திறந்துள்ளார். பொலிஸ் உடையில் வந்த வெள்ளையர்கள் வீட்டுக்காரரின் பெயரை சரியாக அழைத்தும் உள்ளார்கள்.

# Tamil Aid - தமிழ் உதவி ?

சுனாமி மீள்கட்டுமானத்துக்கு உதவும் மற்றுமொரு செயாரிற்றி நிறுவனம் இலண்டனில் உருவாக்கப்பட உள்ளது. ரமிழ் எய்ட் என்ற பெயரில் வரவுள்ள இந்த செயாரிற்றியின் இயக்குனர்களாக கணக்காளர்கள் இருவரும் சட்டத்தரணிகள் இருவரும் நியமிக்கப்பட உள்ளனர். அவர்களில் ஒருவர் பெண் என்றும் தெரியவருகிறது.


சுனாமி இடம்பெற்ற சில மணி நேரங்களிலேயே உண்டியல் குலுக்க ஆரம்பித்த செயாரிற்றிகள் இன்று வரை தாம் எவ்வளவு நிதியைத் திரட்டியது என்றோ எதற்காகச் செலவிட்டது என்றோ வெளிப்படுத்தவில்லை. வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகையில் வந்து வாரி வழங்குங்கள் என்று கேட்பதில் உள்ள ஆர்வம் சேர்க்கப்பட்ட நிதிக்கு என்ன நடந்தது என்று பதில் சொல்வதில் காட்டப்படுவதில்லை.

இதற்கிடையே நிதி சேகரிப்பில் ஈடுபட்டவர்கள் பற்றியும் சேர்க்கப்பட்ட நிதி பற்றியும் பல சந்தேகங்கள் எழுந்துள்ளது. நிதியை சேகரித்தவர்களும் நிதியைப் பெற்றுக்கொண்டவர்களும் தொடர்ந்தும் மௌனமாக இருக்க இன்னும் புதிய புதிய அமைப்புகள் நிதி சேகரிப்பில் இறங்குவது மேலும் மேலும் சந்தேகங்களையே வலுப்படுத்துகிறது.

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரை அடிப்படை உதவிகள் பெரும்பாலும் உள்ளூர் மக்களாலேயே வழங்கப்பட்டு உள்ளது. மேலும் சர்வதேச உதவிகளும் அரச உதவிகளும் பலரது கைகளுக்கூடாக மக்களுக்கும் போய்ச் சேருகிறது. தமது நெருங்கியவர்களுக்கூடாக நேரடியாக புலம்பெயர்ந்தவர்கள் வழங்கிய பணம் மட்டுமே மக்களை முழுமையாகச் சென்றடைந்துள்ளது.

# பா உ வடக்கு கிழக்குக்கு பயணம்

வடக்கு, கிழக்கில் கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட தொழிற்கட்சியின் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ரொபேட் ஈவான்ஸ் பெப்ரவரி 5ல் இலங்கை செல்கிறார். அவர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, காலி ஆகிய இடங்களைப் பார்வையிட உள்ளார். மேலும் யாழ்ப்பாணத்தில் ஈலிங்கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தாலும் தமிழர் தகவல் ஒருங்கமைப்பாலும் நடத்தப்படும் கணணிப் பயிற்சி நிலையத்தில் கற்று வெளியேறும் மாணவர்களுக்கான சான்றிதள்களை ரொபேட்ஸ் இவான்ஸ் வழங்க உள்ளார். இவ்வைபவம் பெப்ரவரி 6ல் நடைபெற உள்ளது. றொபேட் இவான்சுடன் ஹரோ கவுன்சிலர் தயா இடைக்காடரும் செல்ல உள்ளார்.





ATN Jewellery
தரம், சேவை, நாணயம்
அனைத்தும் இங்கே தங்கம்
மங்கையர் மணங்கவர்
நகைகளோ மற்றும்
குறையாத தங்கம்
(T) 020 8521 9767
37, Palmerston Road,
Walthamstow,
London E17 6PR

VACANCY - Chef & Waiter
For Srilankan/South Indian Restaurant
புதிய ரெஸ்ரோறன்ட் ஒன்றுக்கு
சமயல் தேவைக்கும் பரிமாறல்
தேவைக்கும் அனுபமிக்க
வேலையாட்கள் தேவை.
தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
Navam (T) 020 8861 5614
020 8904 3489

J K SHAH
Chartered Certified Accountants
& Registered Auditors
e-mail: jk@jkshah.com
website: www.jkshah.com
570 Romford Road, Manor Park
London E12 5AF
TEL: 020 8553 2436
FAX: 020 8514 6939

# இலண்டன் தமிழருக்கு கனடியத் தமிழர்கள் கௌரவம்

கனடிய தமிழ் இலக்கியத் தோட்டமும் ரொறன்ரோ பல்கலைக்கழகமும் தென்னாசியக் கழகமும் இணைந்து வழங்கும் 2004ஆம் ஆண்டிற்கான இயல் விருது இ பத்மநாப ஐயருக்கு வழங்கப்படுகின்றது. ஈழத்து நூல் வெளியீட்டுத்துறையில் கடந்த நான்கு தசாப்தங்களாக உழைத்து வரும் பத்மநாப ஐயரின் பதிப்புத்துறை முயற்சியைப் பாராட்டி இவ்விருது வழங்கப்படுகிறது. கடந்த காலங்களில் சுந்தர ராமசாமி, கே.கணேஷ், வெங்கட் சாமிநாதன் ஆகியோருக்கு இயல் விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் 'வாசகர் வட்டம்' வெளியிட்ட 'அக்கரை இலக்கியம்'(1968) என்ற ஈழ, மலேசிய படைப்புகளின் தொகுப்பு முதல் கனடாவில் ஆங்கிலத்தில் வெளியான ஈழத்து இலக்கியத்தொகுப்பு (Lutesong and Lament - 2001) வரை ஈழத்து இலக்கியத் தொகுப்பு முயற்சிகளில் பத்மநாப ஐயர் காட்டிய ஆர்வமும் அக்கறையும் பாராட்டுக்குரியது.

தமிழியல் என்ற வெளியீட்டகத்தின் மூலமாக கவிதை, சிறுகதை, ஓவியம், மொழிவரலாறு ஆகிய பல்வேறு துறைகளில் நூல்களை வெளியிட்டதுடன் ஈழத்து ஆக்கங்களை தமிழகத்திலும் சர்வதேச ரீதியிலும் அறிமுகப்படுத்துவதற்கான பின்னணித் தளங்களை அமைப்பதில் பத்மநாப ஐயரின் பங்களிப்பு முக்கியமானது. சர்வதேச ரீதியில் அனைத்துலக தமிழ் எழுத்தாளர்களுக்கிடையே ஒரு தொடர்பு மையமாக பத்நாப ஐயர் தனித்து இயங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தனித்துவம் பத்மநாப ஐயரின் வெற்றிக்கும் தோல்விக்குமான காரணமாக உள்ளது. பத்மநாப ஐயர் என்ற தனிநபருக்கு அப்பால் ஒரு நிர்வாகக் கட்டமைப்பு இல்லாததால் அவருக்குப் பின் இம்முயற்சிகள் அனைத்தும் ஒரு தேக்க நிலையை அடையும். தனக்குப் பின் இதனைச் செய்யக்கூடிய ஒரு கட்டமைப்பை ஐயரால் உருவாக்க முடியுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. தமிழ் சமூகத்தில் கூட்டுழைப்பு என்பது குதிரைக் கொம்பாக இருப்பதால் கட்டமைப்பினூடாக சாதிக்க முடியாததை ஐயர் தனிமனிதராக சாதித்து உள்ளார் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## Little Terrorist குறும்படம்

அஸ்வின் குமாரின் லிட்டில் ரெறறிஸ்ட் என்ற குறும்படம் ஒஸ்கார் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டு உள்ளது. இக்குறும்படம் ஏற்கனவே சில சர்வதேச விருதுகளையும் வென்றிருப்பது குறிப்பிடத்தக்கது. தெரியாமல் பாகிஸ்தான் - இந்திய எல்லையை கடக்கும் பாகிஸ்தானி சிறுவன் பெரும் பயங்கரவாதி போல் நடத்தப்படுகிறான். இதுவே இக்குறும்படம் 15 நிமிடங்களில் சொல்லும் கதை.



# ஒற்றுமையை வலுப்படுத்தும் பயணம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளிக்கவும் நாட்டில் இன ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் வலுப்படுத்தவுமான சமாதான யாத்திரை ஒன்று பெப்ரவரி 5ல் ஆரம்பிக்கிறது. கொழும்பில் இருந்து பாதிக்கப்பட்ட இடங்கள் ஊடாக பெப்ரவரி 13ல் யாழ்ப்பாணத்தை அடைந்து மறுநாள் கொழும்பு திரும்ப உள்ளனர். கொழும்பில் உள்ள வெவ்வேறு வணக்கத்தலங்களில் இருந்து பௌத்த, இந்து, இஸ்லாமிய மதத் தலைவர்கள் இணைந்து செல்லும் இவ்யாத்திரையில் 100 பேர் கலந்து கொள்ள உள்ளனர். இவர்கள் நான்கு வாகனங்களில் செல்லத் திட்டமிட்டு உள்ளனர்.

கொழும்பில் ஆரம்பிக்கும் இவ்யாத்திரை மாத்தறை, கதிர்காமம், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு சென்று யாழ்ப்பாணத்தை அடைந்து மீண்டும் கொழும்பு திரும்ப உள்ளது.

## சுனாமி கலை நிகழ்ச்சி

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுமுகமாக கலை நிகழ்ச்சிகள் பல ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது. சக்தி பைன் ஆர்ட்ஸ் என்ற அமைப்பு நாட்டியா : த நெக்ஸ்ட் ஜெனரேசன் என்ற நிகழ்வை பெப்ரவரி 5ல் ஒழுங்கு செய்திருந்தது. வோல்தம்ஸ்ரோ ரவுன்ஹோலில் இந்நிகழ்வு மாலை ஆறுமணிக்கு நடைபெற்றது.

இதே போன்ற மற்றுமொரு நிகழ்வு ஹரோவிலும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. பெப்ரவரி 12ல் நடைபெறும் இந்நிகழ்வில் தமிழ் பள்ளிகளின் மாணவ, மாணவிகள் பங்கேற்க உள்ளனர். இந்நிகழ்ச்சிகளின் மூலம் கிடைக்கும் நிதி வெண்புறா அமைப்புக்கு வழங்கப்பட உள்ளது.

## ஜேர்மனியில் தஞ்சம் கோரிய பல்லாயிரம்

# தமிழர்கள் நிர்க்கதியில்

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள 110,000 இலங்கைத் தமிழர்களில் தஞ்ச விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட நிலையில் உள்ள 10,000க்கும் மேற்பட்ட தஞ்ச விண்ணப்பதாரிகள் நிர்க்கதிக்கு உள்ளாகி உள்ளனர். சுனாமிக்குப்பின் திருப்பி அனுப்பப்படுவது தற்காலிகமாகத் இடைநிறுத்தப்பட்ட போதும். இன்னும் சில மாதங்களில் திருப்பி அனுப்பும் படலம் ஆரம்பிக்கும் என்றே அஞ்சப்படுகிறது. தற்காலிக 2004ல் மட்டும் ஆயிரம் பேர் வரை இலங்கைக்குப் பலவந்தமாக நாடு கடத்தப்பட்டுள்ளனர் என ஜேர்மனியிலுள்ள அகதிகள் மற்றும் மனித உரிமைகள் அமைப்புக்கள் தெரிவிக்கின்றன. தஞ்ச விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் உள்ள பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தஞ்ச விண்ணப்பதாரர்கள் கட்டம் கட்டமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டு வருகிறார்கள். ஜேர்மனியின் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் பொலிஸாரின் துணையுடன், இரவோடிரவாக தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களின் இருப்பிடங்களை முற்றுகையிட்டு பலவந்தமாக நாட்டைவிட்டு வெளியேற்றுகின்றனர். பிராங்பேட் விமான நிலையம் நாடுகடத்தலின் மையமாக உள்ளது.

இத்திருப்பி அனுப்பும் விடயத்தில் வெஸ்ட்பார்லன் மாநிலம் மிகவும் தீவிரமாக உள்ளது. தமிழ் மக்கள் மிகவும் செறிவாக வாழும் டோட்மூன், எசன் நகரங்களைக் கொண்ட இம்மாநிலத்திலேயே ஆரம்ப காலங்களில் தமிழ் மக்கள் குடியேறினர். இம்மாநிலத்தின் பொருளாதாரச் சரிவும் அரசில் தங்கி வாழ்வோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பும் அம்மாநிலத்தில் திருப்பி அனுப்பப்படுவோரின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதற்குக் காரணமாகக் கருதப்படுகிறது. மாறாக ஸ்ருட்காட் நகரம் அமைந்துள்ள வுட்டம்பேர்க் பகுதிகளில் இலங்கையர்கள் பலருக்கு தஞ்சம் நிராகரிக்கப்பட்டு இருந்த போதும் திருப்பி அனுப்புவது பாரிய அளவில் நடைபெறவில்லை. இப்பகுதிகளின் பொருளாதாரம் நல்ல நிலையில் இருப்பதே அதற்குக் காரணமாகக் கொள்ளப்படுகிறது. ஜேர்மனியில் தஞ்ச விடயங்களில் மாநிலங்களே இறுதிமுடிவெடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அதனால் திருப்பி அனுப்பப்படுவது மாநிலத்துக்கு மாநிலம் சற்று மாறுபடும்.

தொண்ணூறுக்களின் நடுப்பகுதியில் ஜேர்மனியில் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழர்கள் பெரும்பாலும் பிரித்தானியாவுக்கும் கனடாவுக்கும் புலம்பெயர்ந்தனர். அவர்களில் சிலர் இன்று நிரந்தரவதிவிட உரிமை பெற்று நிம்மதியாக வாழ்கின்றனர். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக பிரித்தானிய அரசு மேற்கொண்ட கடுமையான குடிவரவுச் சட்டங்களும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கிடையேயான மத்தியப் படுத்தப்பட்ட தஞ்ச விண்ணப்ப பரிசீலனைகளும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியாவுக்குள் நுழைபவர்களின் தஞ்ச விண்ணப்பங்களை முழுமையாக நிராகரித்து திருப்பி அனுப்புவதையும் துரிதப்படுத்தி உள்ளது. மேலும் எல்லைகளும் கடுமையாக கண்காணிக்கப்படுகின்றன. அதனால் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்கள் வேறு நாடுகளுக்கு புலம்பெயர்வதும் மிகவும் கடினமாக்கப்பட்டு உள்ளது.

இலங்கையில் உருவாகி உள்ள இரண்டும் கெட்டான் சமாதானம் இலங்கையில் வாழும் தமிழர்களை மட்டுமல்லாமல் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களையும் மிகவும் பாதித்து உள்ளது. இங்கு பிரித்தானியாவில் ஜேர்மனியைப் போல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட மூன்று மடங்கு தமிழர்கள் இருண்ட எதிர்காலத்தை எதிர் நோக்கி உள்ளனர். பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட தமிழர்களின் நிலை கேள்விக்குறியாகவே உள்ளது. இலங்கை அரசோ விடுதலைப் புலிகளோ இதுவிடயத்தில் கவனம் செலுத்துவதாக இல்லை. இத்தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்கள் கைவிடப்பட்ட அல்லது மறக்கப்பட்ட தமிழர்களாகவே உள்ளனர்.

Thompson & Co.
Solicitors
Legal Aid for
* Immigration
* Employment
* Criminal Law
* Also Property
& Family Law
Tel: 020 8767 5005
48A Tooting High Street
(Opposite Broadway Station)
London SW17 0RG
Email: mail@thompsonlaw.co.uk

UDHAYAN NEWS HOTLINE
020 8952 5677

MAHARAJA
Indian Meat & Poultry
WHOLESALERS & RETAILERS OF FRESH MEAT & POULTRY
SUPPLIERS TO THE TRADE & RESTAURANT
WE ALSO SELL
BOILER CHICKEN GROUSE, QUAILS, (BHATERA), DEER, PIGEON, RABBIT, SPRING LAMB, AND WHOLE MUTTON AT LOW PRICES
Tel: 020 8813 7700
776 Uxbridge Road, Hayes, Middx. UB4 0RS

To Know your Birth Star contact 020 8905 7775, 020 8952 5677

MARKANDAN & CO SOLICITORS
We specialise in
- குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்
- விவாக விண்ணப்பங்கள்
- அகதி விண்ணப்பங்கள்
- 10 வருட அல்லது 7 வருட வதிவிட தகைமை விண்ணப்பங்கள்
- பிரித்தானிய பிரஜாவுரிமை
- வீதிப் போக்குவரத்து சம்பந்தமான வழக்குகள்.
- வீடு/மனை/வியாபார ஸ்தலங்கள் வாங்க, விற்க, குத்தகைக்கு விடுதல் சம்பந்தமான விடயங்கள்
- விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயமடைந்திருந்தால் நட்ட ஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் - No Win - No Fee அடிப்படையில்
- பிரஜாவுரிமை விண்ணப்பத்திற்கான ஆங்கில மொழித் தேர்ச்சி தகுதிச் சான்றிதழ்
M
01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானியா அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந் நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானியா உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
TEL : 0208 514 8188/07946010022
THAMIL HOUSE, 720 Romford Road, Manor Park, London, E12 6BT

Graphical Impact
Signs ~ Designs ~ Graphics
www.graphicalimpact.com
61 Hoe Street, Walthamstow, London E17 4SA
Tel 020 8925 2333 Fax 020 8925 2332

Creative Curtains (LONDON) Ltd.
Made to Measure Service for Curtains & Blinds
Contact Dee Dee
Tel: 020 8574 2156
Mobile: 07780 572 429
15 Witley Ind. Est. Witley Gardens, Southall UB2 4EZ

K.Ravi Solicitors
Solicitors & Administrators of Oaths
* Immigration
* Conveyancing
Both Residential & Commercial
* Welfare Matters
* Civil Litigation
* Landlord & Tenant Disputes
Call 020 8866 7800
Suite 2, First Floor (above Abbey National), 410-420 Rayners Lane, Pinner, Middx. HA5 5DY

SRIHARANS SOLICITORS
AUTHORISED TO ADMINISTER OATH
Professional service for freedom and justice under the Human Rights Act of UK and with European Convention of Human Rights
(P) 020 8843 9977
020 8843 9974 (3 lines)
223 The Broadway
Southall, Middx.

IN TROUBLE WITH THE POLICE
24 Hr. POLICE STATION ATTENDANCE
FREE INITIAL INTERVIEW
ANY CASE CONSIDERED
Mehra & Co.
- Solicitors -
367 High Road Wembley
020 8902 1900
Mobile 07956 528 927
07956 463 665

SPL Offer 5 GARMENTS Drycleaned £9.99 only
Bring this Advertisement in and get your
WASHING DONE FOR HALF PRICE
MONDAY - FRIDAY ONLY
OPEN 8am - 10pm TUE & THUR
Rest of the days 8am - 8 pm
Mob: 07984644259
at junction of East Lane/Watford Rd. 14 Court Parade
also at Northolt
12 Manderville parade (A312) next to KFC Part of Salsha Ltd.
Laundry, Dry Cleaning & Ironing Centre

# 2005 ஆண்டு பொதுவான பலன்கள்

## மேஷம்

இராசியில் இராகு நிற்க, இராசி நாதன் செவ்வாய் எட்டில் நிற்க. உடன் மூன்று ஆறுக்குடைய புதனும், இரண்டு ஏழுக்குடைய சுக்கிரனும் நிற்க, ஏழில் கேதுவும், ஆறில் குருவும்,சுகஸ்தானத்தில் சனியும், பாக்கியத்தில் சூரியனும் நிற்க,

இராசியாதிபதி எட்டில் நின்று சனி சாரம் பெற்று இருப்பதால் இந்த புத்தாண்டில் எந்த ஒரு காரியத்தையும் செய்யும் போது தடைகளும், தடுமாற்றங்களும் இயற்கையாக இருக்கலாம். எதையும் பொறுமையுடன் செயல்பட்டு போராடி அனுகூலமாக முடிக்கும் போது கூட இந்த உலகத்தில் மாணவர்களையும், பகைத்து கொள்ள வேண்டியது இருக்கலாம். உழைப்பில் நம்பிக்கை கொண்டு செயல்பட வேண்டும். கர்மலாபாதிபதி சனி பகவான் சுகஸ்தானத்தில் நின்று இராசியை பார்ப்பதாலும் கர்மஸ்தானத்தையும், பாக்கிய விரையாதிபதியான குரு பகவானையும் பார்ப்பதால் செய்தொழில் மாற்றங்களும், புதிய தொழில் தொடங்க கடுமையான உழைப்பையும் சிந்த வேண்டியது இருக்கும்.

இன்றைய உழைப்பை அலட்சியப்படுத்தாமல் உழைத்தால் மேன்மை உண்டு. எக்காரணத்தைக் கொண்டும் குறுக்கு வழியில் பல தொடர்புகள் கிடைத்தாலும் நேர்மையான நிலையிலிருந்து தவறக்கூடாது. காரணம் குரு, செவ்வாய் சாரத்தில் இருப்பதால் நல்லவர்களுக்கும், சோதனை வரலாம். பொருளாதாரத்தில் நெருக்கடிகள் வரலாம். மரியாதைக்குரியவர்களிடம் மனக்கசப்பு ஏற்படலாம். ஒருபுறம், குருபகவான் தனஸ்தானத்தையும், தொழில் ஸ்தானத்தையும் பார்த்தாலும் அட்டமாதிபதி சாரம் பெற்று பார்ப்பதால் தேவைக்கு தகுந்த கடன் கொண்டு சமாளிப்பது புத்திசாலித்தனம். அதே நேரம் தனஸ்தானாதிபதி சுக்கிரனும் எட்டில் நின்று தனஸ்தானத்தை பார்ப்பதால் அவ்வப்போது உதவிகள் கிடைத்தாலும், கடன்நிலைகள் கூடத்தான் செய்யும். வீட்டில் கட்டிய மனைவியிடம் கருத்து வேறுபாடு கொள்ளாமல், அவர்கள் கையில் பொறுப்புகளைக் கொடுத்து நிர்வாகிக்க சொல்வது நல்லதுதான்.

முக்கியமான விஷயம் என்னவென்றால் பஞ்சமாதிபதியான சூரியனுக்கு பத்தில் பாக்கியாதிபதி நிற்பது மிக உன்னதமான விஷயம். குழந்தைகளின் நல்வாழ்க்கையைப் பற்றி சிறிதும் கவலைப்பட வேண்டாம். அவர்களுக்கு உன்னதமான உத்யோக மேன்மையும், வெளிநாட்டு வேலைவாய்ப்பும், படித்த இளைஞர்களுக்கு தகுந்த வேலைவாய்ப்பும், பருவம் வந்த குழந்தைகளுக்கு திருமணமும் நடைபெறும். இதில் ஏழில் கேது இருப்பதால் நன்கு தீர விசாரித்து திருமணம் செய்ய வேண்டும். மார்ச் 28ம் தேதி இராகு,கேது பெயர்ச்சிக்கு பின் மாமாயையில் இருந்து விடுபட்டது போன்று பல ஏமாற்றங்கள். இழப்புகளிலிருந்து விடுபடுவீர்கள்.

கூட்டுத் தொழில் செய்பவர்களுள் தங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டு தனியாக தொழில் செய்ய முயற்சி மேற்கொள்ள வேண்டாம். உகந்த காலமாக இல்லை.

அரசுத்துறையில் பணிபுரிந்தாலும், தனியார் துறையில் பணிபுரிந்தாலும் தனக்கு மேல் உள்ள பொறுப்பாளர்களிடம் மனவேறுபாடோ, கருத்து வேறுபாடோ கூடாது. அதிகமான வேலையை கொடுத்தாலும் முகம் சுழிக்காமல் செய்ய வேண்டும். ஏனென்றால் உடன் பணிபுரிபவர்களே தக்க சமயத்தில் உங்கள் மீது விரோதம் கொள்ளலாம். பதவி உயர்வு தடையாகவும், தாமதமாகவும் இடமுண்டு. அதற்காக கோர்ட், கேஸ் என்று அலைய வேண்டாம். போராட்டங்கள் செய்வதால் எந்த பலனும் இல்லை. மேலும் உடல்நிலையில் அதிக கவனம செலுத்துங்கள். இரத்தகொதிப்பு, சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு இருதய பலவீனம் ஏற்படவும் ஆறாமிடத்து குருபகவான் மூலம் வாய்ப்புண்டு. பொறுமை, நிதானம் அவசியம் வேண்டும்.

கடனால் அவஸ்தையும், கடனை கடன் கொண்டு அடைக்க முயற்சி செய்வதும் அதற்கு உதவியும் கிடைக்கும். பொறுமையும் நிதானமாக செயல்பட வேண்டும். பூர்வீகச் சொத்துக்களில் உடன்பிற ந்தோரோடு இணக்கமற்ற போக்கும், பிரித்து கொடுக்கப்பட்ட சொத்தை கடனுக்காக விற்பதும் நடைபெறும்.

முக்கியமாக கவனிக்க வேண்டியது முன்னோர்கள் வழிபாட்டை அவசியம் செய்ய வேண்டும். குலதெய்வ வழிபாட்டையும் அவசியம் செய்ய வேண்டும். இடம் விட்டு இடம் செல்ல வாய்ப்பு கிடைத்தால் உடனே மாற்றிக் கொள்ளலாம்.

29,30, வைகாசி 29,30, புரட்டாசி 29,30 ஆகிய தேதிகள் ங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

திருச்செந்தூர் சென்று கடல் ஸ்நானம் செய்து வந்தால் நல்லது நடைபெறும். வாழ்க எல்லா உயிர்களும்.

## ரிஷபம்

எவ்வழி மெய் வழி என்பது வேத ஆகமம், அவ்வழி எனக்கருள் அருட்பெருஞ்சோதி. எப்படி எண்ணியது என் கருத்து இங்கு எனக்கு அப்படி அருளிய அருட்பெருட்ஜோதி என்று ஜோதி வடிவான இறைவனை வேண்டி வாழ்த்துக்கள் கூறும் போது முன் வினை கர்ம நிழலைத் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் உங்களுக்கு இயற்கையின் உண்மையை உணர்த்த வேண்டும். மற்றவர்களுக்கு ஆலோசனை சொல்வதில் சலியாத உங்களுக்கு தன் குடும்பத்தில் உங்கள் இராசியாதிபதி தனபஞ்சமாதிபதியான புதனின் சாரத்தில் நின்று புதனோடு கூடி ஏழில் நிற்க, உடன் சப்தமாதிபதியும் இருப்பதால் சுயமாக தேடும் பொருளாதார உயர்வு ஏற்படும். இனி காசு,பணம் என்கின்ற பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பில்லை. அதே நேரம் தேடுகின்ற பொருளாதாரத்தை சரியான வழியில் விரையம் செய்வது தான் முறையானது. என்ன செய்யலாம், சிலருக்கு பூர்வீகச் சொத்துக்களில் சில மாற்றங்கள் செய்யலாம் அல்லது நீண்ட கால ஆசையான வீடு கட்டும் யோகமும், வீட்டிற்கு தேவையான தளவாட சாமான்கள் சேர்க்கையும் ஏற்படும். அன்பாக இருக்கும் குடும்பத்தில் அவ்வப்போது புயல்வீசுவதும் உண்டு. சிலருக்கு உத்யோக அடிப்படையில் பிரிவு ஏற்படவும் வாய்ப்புண்டு. எதுவாக இருந்தாலும் இந்தக் காலத்தில் மகிழ்ச்சிகரமான நன்னிலைக்கு உயர்வடைய இறை வனின் அருள் கிடைக்கும்.

பொருளாதார உயர்வு கிடைக்கப் பெற்றால் நல்ல தாய், தகப்பனின் கடமை என்னவாக இருக்கும். தன் குழந்தைகளின் சுபகாரியங்களுக்காக செலவிடத்தான் மனம் வரும் அது மிகச்சிறப்பாக நடைபெறும். அதற்காக கடன் கொஞ்சம் அடைந்தாலும் கவலை வேண்டாம்.

அட்டமாதிபதியான குருபகவான் ஐந்தில் நிற்கின்ற காலம் வீட்டாரின் மனக்கசப்புடன் திருமணம் நடைபெற வாய்ப்புண்டு. கூட்டாக இருந்த பூர்வீக சொத்து பாகம் பிரிக்கப்பட்டு உங்களின் மீது கடனோடு சேர்த்து சில சொத்துக்களையும் கொடுக்கப்படும்.

மேலும் நண்பர்கள் சொல்கின்றார்கள் என்பதற்காக செய்தொழில் மாற்றம் செய்ய நேரிடும் போது சிலருக்கு லாப மேன்மையை கொடுக்கவும் வாய்ப்புண்டு. புதிய தொழில் முயற்சியும், உத்யோக முயற்சியும் சிறப்பையும், லாப மேன்மையையும் கொடுக்கும். பிரிந்து போன கணவன் மனைவி ஒன்று சேர்வீர்கள். நாட் கடந்த புத்திரபாக்கியம் சிலருக்கு கிடைக்கும் வாய்ப்புண்டு. பணிபுரிப்வர்களுக்கு உண்மையான உழைப்பைக் கொண்டு மரியாதை, மதிப்பு கிடைக்க வாய்ப்புண்டு.

பெற்ற தாய் தந்தையரின் உடல்நலத்தில் கவனம் செலுத்துவதும், சொத்துக்கள் வாங்குவதின் மூலம் கூடுதல் கடனாளியாக வேண்டியதும் உண்டு. தர்ம, கர்மாதிபதியான சனி பகவான் இராசிக்கு மூன்றில் நிற்பதும், பாக்கிய ஸ்தானத்தை பார்ப்பதும், பத்தாமிடத்திற்கு ஆறில் சஞ்சாரம் செய்யும் காலம் உங்கள் முயற்சி கால தாமதமானாலும் கர்ம மேன்மை உண்டு. பெரியோர்கள் ஆதரவும், நல்ல முதலீடும் கிடைக்கப் பெற்று முன்னேற்ற ங்களை அடையும் காலம் இதுதான்.

பேப்பர், பிரிண்டிங் தொழில் செய்வோர், பெரிய நிறுவனங்களில் பணிபுரிவோர் நல்ல உயர்வு அடையக்கூடும். உழைப்பால் உயர்ந்த பெரியோர்களின் வரிசையில் உங்களுக்கும் இடமுண்டு. மார்ச் மாதம் 28-ம் தேதிக்கு மேல் இராகு கேது பெயர்ச்சி உங்களின் வாழ்க்கைத்தரத்தை மாற்றும் அமைப்பு உண்டு.

மிருகசீரிடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு நாலாவது தசையாக நடைபெறுபவர்கள் எதிலும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். கடுமையான வேதனையை மனதளவில் கொடுக்கக்கூடிய நிலையில் சரபேஸ்வரரை வழிபட்டு வந்தாலும், காலபைரவரை வழிபட்டு வந்தாலும் நன்மை உண்டு.

வாகனத்தில் செல்லும் போது மிகுந்த கவனம் வேண்டும். விவசாயத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு வீண் போகாது. இசைக்கலைஞர்களுக்கு இந்த வருடம் ஊக்கமும், பெருமையும், கெளர பரிசும், சன்மானமும் கிடைக்கும். பெண்களுக்கு இந்தக்காலம் மனதிற்கு இசைந்த திருமண வாழ்க்கையும், மகிழ்ச்சியும், இன்பச்சுற்றுலா செல்வதற்கான வாய்ப்பும் கிடைக்கப் பெறும்.

## மிதுனம்

பிறந்தாலும், விடியும் பொழுது பூரத்தில் விடிவதால் வாழ்க்கையின் கடந்த கால கசப்பான நிலையெல்லாம் மாறுகின்ற காலம் இதுதான். எத்தனை கொடுமையான, கடுமையான பாதையை கடந்து வந்து கொண்டு இருக்கின்றோம். இதுவரை, ராசியில் இருந்த சனி பகவான தனஸ்தானமெனும், குடும்பஸ்தானத்தில் குடியேற, சப்தகர்மஸ்தானாதிபதி குரு பகவான் சுகஸ்தானத்தில் வீற்றிருக்க, அவருக்கு இரண்டில் மணிமகுடம் சூட்டும் மாணிக்கத்தின் நிகரான ஐந்தாமிடத்தில் கேது அமர, ராசியாதிபதியும், யோகாதிபதியுமான புதனும், சுக்கிரனும் ஆறில் அமர்ந்தாலும் உடன் செவ்வாயும் நிற்க, முயற்சி ஸ்தானாதிபதியான சூரியன் ஏழில் நிற்க இந்தவருடம் பிறக்கிறது.

எந்த ஒரு காலத்திலும், ஆன்மா சிறப்படைய வேண்டுமானால் சுகஸ்தானமெனும் நாலாமிடமும், சப்தமஸ்தானமெனும் மனைவி ஸ்தானமும், ஜீவனஸ்தானமெனும் பத்தாமிடமும் சிறப்பாக இருக்க ன்துராசியாதிபதி புதன் ஆறில் நிற்பதால் உழைப்பிற்கு பஞ்சமில்லை. உத்யோகத்தில் நல்ல நிறைவும் மனத்திருப்தியும் கிடைக்கும் என்றாலும் இந்த ஆண்டு மகத்தில் பிறப்பதால் கேது பகவான் ஐந்தில் இருப்பதால் கெளரவ பங்கம் இல்லை என்றாலும், கெளரவமான கடன்காரன் என்ற நிலையில் இருந்து இன்னும் விலக முடியவில்லை. கடனை கட்டமுடியாத நிலையெல்லாம் இருந்தும் கூட இன்று தன் கெளரவத்தை காப்பாற்றி தலைநிமிர்ந்து நடக்கும் அளவுக்கு விடிவு காலம் ஏற்பட போகிறது. பெரும்பாலானவர்களுக்கு சொத்தை விற்று இருக்கும் கடனை அடைத்து விடலாம் என்றெல்லாம் முடிவு செய்து விலை பேசினாலும், நன்றாக நடந்து வந்த தொழில் இன்று நசிந்து ஏனோ தானோ என்று ஓடுகிற து என்ற நிலையிலும் வெளியில் உள்ளவர்கள் உனக்கென்ன என்கின்ற உணர்வில் உங்களை உற்று நோக்குவது பழைய மரியாதையை வைத்துதான்.

உடல்நலத்தில் அவ்வப்போது ஏற்படும் கோளாறுகள் இடையிடையே மருத்துவர்களை பார்க்க வைத்தாலும் உயிருக்கு ஆபத்து இல்லை.

மனச்சுமையை தாங்கும் பெற்றோ ார்களுக்கு இந்த வருடம் திருமணம் கைகூடும். சிலர்தான் விரும்பிய படி காதல் திருமணம் நடைபெறும். இந்தக் காலத்தில் உடன்பிறந்தோர் மனக்கசப்பும் ஏற்படத்தான் செய்யும். சகோதரிகளுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு.

உத்யோகஸ்தர்கள் கடமை உணர்வோடு செயல்படும் போது கெளரவப்படுவார்கள். உத்யோக உயர்வும், இடமாற்ற மும் கிடைக்கும். சிலருக்கு அவசர அவசரமாக வீடு இடமாற்றம் செய்ய வேண்டியது இருக்கும். வீண் அலைக்கழிப்புகளுக்கு பின்பு மே மாதம் முதல் ஆனந்தமான நிம்மதி கிடைக்கும்.

சுயதொழில் செய்வோர் வியாபாரத்தில் இருந்து வந்த முடக்கம் இனி இருக்காது. வியாபாரம் விருத்தியாகும். வியாபாரக் கடன் அதிகமாகும். அதனை அடைத்து விடலாம். காண்ட்ராக்ட் அடிப்படையிலும், மொத்த வியாபாரத்திலும் உள்ளவர்களுக்கும், கட்டிட சம்பந்தமான தொழில் உள்ளவர்களுக்கும், மோட்டார், வாகன தொழில் செய்வோருக்கும் நல்ல வருமானம் வரும். முன்னேற்ற கதவுகள் திறந்தே இருக்கும். சிலர் வீட்டில் பெண்குழந்தைகள் கண்டித்து வளர்காததால் தன்னுடைய விருப்பத்திற்கு தன் வாழ்க்கையை அமைத்து கொண்டாலும் அதனை மறுக்காமல் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

சனி பகவான் நாலாம் வீட்டைப் பார்ப்பதால் வாகனமாற்றம் மற்றும் செலவுகள் வரவும், பழைய வீட்டை இடித்து கட்டுவதற்கு கடன் வாங்குகின்ற வாய்ப்பு உண்டு. வெளிநாட்டு வர்த்தகம் கிடைத்தால் விட்டு விட வேண்டாம். சிலருக்கு கடலுக்கு அடியில் வேலை செய்யும் மெரைனிங் இன்ஜினியர்க்கு உடனடி வேலை கிடைத்து செல்ல வேண்டியது இருக்கும்.

## கடகம்

2005 ஆம் ஆண்டு மகத்தில் பிற க்கிறது. ஆனால் பூரத்தில் விடிகின்ற து. பூரத்தின் அதிபதி சுக்கிரன். சுக்கிரன் சுகலாபாதிபதியாகி சுக போகங்களை அள்ளித்தருகின்ற வர். சிறிய நிலையிருப்பவர்கள் பெரியவர்களுக்கு பெயரும், புகழையும் தருகின்ற ஐந்தாமிடத்தில் நிற்பதும், முயற்சிகளுக்கு முத்தாய்ப்பு வைத்து முலாம் பூசுகின்ற சந்தர்ப்ப சூழ்நிலையை சந்தர்ப்பத்திற்கு தகுந்தாற்போன்று நேர்த்தியாக கோர்வையாக மலர்ச்சரமாக கொடுக்கின்ற புதனும், ஆயிரம் பேரையும் தன் ஆனைக்குள் கட்டுப்படுத்துகின்ற கட்டளைக்கு உட்படச் செய்யும் செவ்வாயும் ஒன்று கூடி ஐந்தாமிடத்தில் நிற்பது மிகப்பெரிய பாக்கியசாலியாகி உள்ளீர்கள் அதையும் மீறி அதற்கு சிகரம் வைத்தாற் போன்று குரு பகவான் மூன்றில் நின்று தன்னுடைய பாக்கியஸ்தானத்தை பார்ப்பது மிகச்சிற ப்பு. சாதாரண குடும்பத்தில் பிறந்து படிப்படியாக வளரும். காலத்தில் எத்தனையோ, வேதனைகள், அதையெல்லாம் அனுபவமாக்கி கொள்வதும், அதை படிக்கட்டுக்களாக்கி வளர்ச்சியடைவதும் உங்களுக்கு சொல்லியா கொடுக்க வேண்டும் ராசியாதிபதி சந்திரன் இரண்டில் நிற்பதால் எப்போதும் பொருளாதாரத்தைப் பற்றிய நோக்கம்தான் இருக்கும். இதில் பலவிதமான வழிகளில் இருந்து நிரந்தரமாக வருமானம் வருகின்ற அளவுக்கு உங்களின் வாழ்க்கைத்தரம் உயரும். வெளி வட்டார பழக்க வழக்கங்கள் முன்னைவிட மூன்று மடங்கு உயரும். அறிவு சார்ந்த கல்வி துறையில் இருப்பவர்களுக்கு பாராட்டும், கெளரவமும் கிடைக்கும். கல்வியில் முதன்பெற்று விளங்கலாம். மூன்றாம் ஒரு ஜாதகரின் எண்ணம் எழுத்து, இயக்கம், பேராற்றல், சக்தி, வீரியத்தை கொடுக்கக் கூடியதாகும் இதில் ஆறுக்குடையவரும், ஒன்பதுகுடையவருமான குரு பகவான் உங்கள் ராசிக்கு மிகவும் நல்லவர் என்பதோடு, பதவியை கொடுப்பதும், அந்த பதவியில் உயர்வைக் கொடுப்பதும், உயர்ந்த மனிதர்களிடத்தில் நட்பும், தன்னையும் உயர்ந்த மனிதராக்கி கொள்ளுகின்ற நிலையை உருவாக்கி கொடுப்பவரும் குருதான். ஆறாமிடம் எல்லோரும் தீங்கு என்று சொல்வார்கள். ஒரு ஜாதகனுக்கு உழைப்பை கொடுப்பதும், உத்யோகத்தின் மேன்மையை கொடுப்பதும் ஆறாமிடம்தான். அதோடு உத்யோகத்தின் உயர்வை உரிய காலத்தில் கொடுப்பவரும் அவர்தான். இந்த காலத்தில் கன்னியில் நின்றாலும், பதவியின் பெருமையை கொடுக்கக் கூடியவரும், அதிகாரத்தையும், அரசாட்சியையும் கொடுக்கின்ற செவ்வாயின் சாரத்தில் இருப்பதால் சாதாரண பதவியில் இருப்பவர்களும் உயர்ந்த பதவியைக் கொடுக்கும். சம்பள உயர்வுடன் இடமாற்றமும் கிடைக்கும். வெளிநாடு வேலை வாய்ப்பு உண்டு. பெரியோர்கள், நல்ல மாமனிதர்களின் தொடர்பு கிடைக்கும். இறையாண்மை வழிபாடு கூடும். பல இடங்களுக்கு யாத்திரை செல்லும் பாக்கியம் உண்டு. இத்தனைக்கும் மேலாக ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். என்னவென்றால் ஏழுக்குடையவரும், அட்டமாதிபதியுமான சனி பகவான் ராசியில் சஞ்சரிக்கின்றார் என்பதை மனதில் கொள்ள வேண்டும். ஆறில் இருக்கும் சூரியன் அள்ளி, அள்ளி கொடுக்கலாம். உயர்ந்த பதவியும், பட்டங்களும் எல்லோரும் கொடுத்தாலும் அதனையெல்லாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தக்கவைத்துக் கொள்ளக்கூடிய தகுதியை இப்போது நிர்ணயிக்கின்ற பெரும் பொறுப்பு சனி பகவானுக்கு உண்டு என்பதை மறந்து விடக்கூடாது. ஏழரைச்சனி என்பதற்காக யாரும் பயந்து விடாதீர்கள். சனிதசை நடப்பவர்க்கும், சந்திர தசை நடப்பவர்க்கும் தான் குழந்தைச்சனி பகவான் பார்ப்பதால் ஏதாவது ஒரு நல்ல காரியம் நடக்குமானால் அதற்கு அடுத்தாற் போல் மனதை நெருடச் செய்யும் ஒரு சம்பவமும் நடைபெற த்தான் செய்யும். ஆரோக்கியம் நன்ற ாக இருந்தாலும் சோர்வும், தளர்ச்சியும் இணைந்து ஒரு பக்கம் தாக்கத்தான் செய்யும். மனம் தளர வேண்டாம். இந்தக்காலத்தில் நம் வளர்ச்சிப்பணிகள் எல்லாம் சிறப்பாக நடந்தால் தான் பிற்காலம் சிறப்பாக இருக்கும் என்பதை மறந்து விடக்கூடாது.

உத்யோகஸ்தர்களுக்கு பதவியில் நல்ல ஈடுபாடும், ஆதிக்கம் செலுத்துகின்ற ார் போன்று பெருமையான உயர்வும், மேன்மையும், இடமாற்றமும் உண்டு. இதில் தரமும், தகுதியும் உயரும்.

## சிம்மம்

2005 ஆம் ஆண்டு உங்களுடைய ராசியான மகம் நட்சத்திரத்தில் பிறந்து இரவு பகலாகும் தருணம் சுக்கிரன் நட்சத்திரமான பூரத்தில் விடிகிறது. சுகந்தத்தையும், சுகாதாரத்தையும் சுவாசிக்கச்செய்யும் சுக்கிரன் வாழ்வில் வசந்தத்தையும், சகல கலைகளையும் ஒருங்கே அளிக்கின்ற ஆற்றல் சுக்கிரனுக்கே உண்டு. செயகர்மாவில் விதிக்கப்பட்ட விதியில் தன் உழைப்பில் தன் உடன் பிறந்தோருக்காக செய்ய வேண்டியதை செய்துதானே ஆக வேண்டும். கடந்த ஒருவருடமாக செய்து வந்தாலும் பிரதிபலன் எதிர்பாராமல் ங்கள் செய்ய வேண்டியது இருக்கிறது. ஏனென்றால் உடன் பிறந்தோரால் இழப்பும் ஏமாற்றமும் இழப்பும் ஏற்படும் அதே நேரத்தில் உடன்பிறந்தோரை இழக்கவும் வாய்ப்புண்டு. மற்றவர்களுக்காக இரக்கப்பட்டு ஜாமீனோ, சூரிட்டியோ கொடுத்தால் சொத்து இழப்பு ஏற்படவும் வாய்புண்டு. இந்தக் காலத்தில்தான் நம்பிக்கையான மனிதர்கள் என்று நம்பி அவர்களுக்காக சில காரியங்களை செய்துவிட்டு பின்பு குழந்தைகளுக்காக வைத்திருக்கின்ற சொத்தையும் இழந்து விடக்கூடாது. இதில் மிக கவனமாக இருக்க வேண்டும். பூர்வீகத்தில் சொத்துக்கள் இருக்கலாம் அதனை தன் உடன் பிறந்தோருக்காக விட்டு வெளியே வேண்டியதும் இருக்கும். தூக்கி யெறிந்து விடுங்கள் அதுதான் நல்லது. அப்படி இல்லாத நிலையில் பூர்வீக சொத்தை விட்டுக்கொடுக்க மாட்டேன் என்று சொன்னால் அதற்கு மேலான விரையங்கள் ஏற்படவும் வாய்ப்புண்டு. உயிருக்கு அபாயம் வருமளவுக்கு சங்கடங்கள் விளையும் என்பதை மனதில் கொண்டு செயல்பட வேண்டும். ண்ட தூர பயணங்களை வெகு ஜாக்கிரதையாக சென்று வரவேண்டும். யாரையும் நம்பி எந்த ஒரு காரியத்தையும் ஒப்படைக்க வேண்டாம்.

இதனை கடந்த காலத்திலேயே உணர்ந்தும் இருப்பீர்கள் இனி வரும் காலத்தில் இந்த மாதிரி ஒரு காரண காரியங்களுக்கு நாம் இலக்காகி விடக்கூடாது.

மேலும் இரண்டில் குரு நிற்கின்ற ார். குரு ஒருபக்கம் யோகாதிபதி அதாவது பஞ்சமாதிபதி நன்மையை செய்யக்கூடியவர். இவர் நன்மையே செய்ய எந்த ரூபத்தில் வருகிறார் என்ற ால் ஐந்துக்குடையவராகி, எட்டுக்கும் உடையவராகி இரண்டில் நின்றால் எதிர்பாராத தனவரவு உண்டு என்பது திண்ணம். சொத்துக்கள் வாங்குவதற்கு ஏதுவான காலம்தான். அதற்கு முன்பு ண்டதூர பயணத்தைக் கொடுத்து அதில் விபத்தையும் கொடுக்கும். வண்டி வாகனத்தில் செல்லும் போது மிகக் கவனமாக செல்ல வேண்டும். வீடுகட்டலாம். பழையவீட்டை இடித்து கட்டலாம். கட்டுவதற்கும் வாய்ப்பு உண்டு. தேவையற்ற வழக்கு வியாக்கியங்களினால் வீட்டையே விட்டு வேறு இடம் குடிபோக வேண்டிய நிலை உருவாகலாம் கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டிய காலம் இதுதான். முக்கியமான விஷயம் என்னவென்றால் குடும்பத்துடன் சுற்றுலா மற்றும் நீர் நிலை ஏரியாக்களுக்கு செல்லவேண்டாம்.

சுக்கிரன் மூன்று பத்துக்குடையவராகி சுகஸ்தானத்தில் நிற்பதாலும் லாபாதிபதி சாரம் பெற்று இருப்பதால் வியாபாரத்தில் வெகுதனலாபம் கிடைக்கப்பெற்று வியாபார அபிவிருத்தி அடைவதும், லாபமேன்மையை கூட்டிக் கொடுப்பதும் இயல்பாக நடைபெறும். இதில் பலதொழில் முனையும் ஏற்படும் என்பது தெரிகிறது. புதிய தொழில் முதலீடும் செய்து கொள்ளலாம்.

ராசியாதிபதியான சூரியனும் பஞ்சமத்தில் நின்று சுக்கிரன் சாரம் பெற்று இருந்தாலும் பொருளாதாரத்தில்

நல்ல திருப்பு முனையை செய்கின்ற காலம் இதுதான் உத்யோகஸ்தர்களுக்கு, சுக்கிரனுக்கு ஒன்பதில் சனி நிற்பதும், சூரியனுக்கு பத்தில் குரு நிற்பதும், சனி, குருவை பார்பதால் பதவி உயர்வு வரவேண்டிய நிலையில் காலதாமதமாகிப் போனாலும் வந்து சேரும். இடம் விட்டு இடம் செல்ல வேண்டியதும் உண்டு.

படிக்கும் மாணவர்களுக்கு கல்வியிலும், உயர்கல்வியும் மிகச்சிறப்பாக இருக்கிறது. பொறியியல் படிப்பும், சட்டத்துறையும், சரி, அல்லது ஆராய்ச்சி பட்டப்படிப்பும் படிக்க தகுதி வாய்ந்ததாக இருக்கின்றது. .

பெண்களுக்கு குடும்ப பொறுப்போடு, உறவினர் வழியிலும், பெற்றோர்கள் வழியிலும் உதவிகளும் கிடைக்கப் பெறும். மகிழ்ச்சிக்கு குறையிருக்காது. வாழ்க்கைத்தரம் மேம்படும் காலம் இதுதான்.

குறிப்பாக மகத்தில் பிறந்தவர்களுக்கு செவ்வாய் திசை நடக்குமானால் பிரித்யங்கிரா தேவியை வழிபடுவது நன்று. சோதனைகளும் வேதனைகளும் மிகுதியாகவே உண்டு.

## கன்னி

2005-ஆம் ஆண்டு மகம் நட்சத்திரத்தில் பிறந்தாலும், பூரத்தில் விடிகிறது. இராசியில் குரு நிற்கின்ற குருபகவான் சுகாதிபதியாகவும், சப்தமாதிபதியாகவும் பரிணமிக்கின்றார். பொதுவாக குரு இராசியோடு இணையும் காலம் குரு சந்திர யோகம் என்று பெயர். லக்னத்தில் குரு நின்றால் திக்பலம் என்று பெயர். இங்கு குரு இராசியில் நிற்பதால் நேர்மையும், நியாயமும், ஒழுக்கமும், தர்ம குணமும், தயாள குணமும், இரக்கமும், இறையாண்மையும், மூத்தோர், பெரியோர், உயர்ந்த மனிதர்களின் நட்பும், ஆதரவும் ஒருபுறம் கொடுக்கத்தான் செய்யும். அதற்காக கடனை கடன் கொண்டு அடைக்க முயற்சி செய்வதிலும் தடைகள் இடையூறுகள் இருக்கத்தான் செய்கின்றன. சனி பகவான் லாபஸ்தானத்தில் நிற்பதால் காலம் கடந்து காரியம் நடந்தாலும் அனுகூலமாக நட்புறவின் மூலம் நடந்து கொண்டிருக்கும்.

இரண்டில் கேது வந்த காலம் முதல் பொருளாதார சேதங்கள் நிறையவே ஆகிக் கொண்டிருக்கிறது. பற்றாக்குறைக்கு அவ்வப்போது குடும்பத்திலும் பிரச்சினை. கூட்டுக்குடும்பமாக இருந்தவர்கள் கூட விலகி தனிக்குடித்தனம் வந்தாலும் தன்னிறைவு அடைந்த பாடில்லை. இந்தப் போக்கு மார்ச் 28-ம் தேதி வரை டிக்கத்தான் செய்யும். எவ்வளவு காசு வந்தாலும் கரையும். பற்றாக்குறை இருக்கும் மனம் ஒருபுறம் வேதனையோடு தான் நடமாடும். தன, பாக்கியாதிபதி சுக்கிரன், இராசியாதிபதி மூன்றில் நின்று, பாக்கியஸ்தானத்தை பார்ப்பதும், அந்த வீட்டை சுகஸ்தானாதிபதியும் பார்க்க உடன் செவ்வாயும் பார்ப்பதால், தகப்பன் ஸ்தானத்தை மாரகாதிபதி குருவும், செவ்வாயும் பார்ப்பதால் தந்தைக்கு சங்கடத்தை கொடுக்கும் வாழ்க்கைத் தரம் மாறும் காலம் இதுதான்.

## துலாம்

கடந்த ஆகஸ்ட் மாதத்திற்கு பின்பு பரவாயில்லை. இனி வாழ்வில் ஒளி ஏற்றலாம் என்ற தன்னம்பிக்கை அரும்பு விட ஆரம்பித்த நேரத்தில் . கேது பகவான் தான் இந்த ஒருவருடமாக குழப்பத்தையும், சஞ்சலத்தையும் , பல வழிகளில் இழப்புகளையும் கொடுத்து கொண்டிருக்கின்றார் என்னும் கூட தனஸ்தானாதிபதியுடன் இராசியாதிபதியும், பாக்கியாதிபதியும் நிற்பது பாக்கியத்தான். இதில் மார்ச் மாதம் இராகு கேது பெயர்ச்சிக்கு பின்பு எல்லா வழிகளிலும் அடைக்கப்பட்ட கதவுகள் திறக்கப்படுகின்றது என்பது உண்மைதான். பத்தில் சனி வேறு அமர்ந்து சுகஸ்தானத்தை பார்க்கின்ற காலம். மேலும் சுகஸ்தானத்தை குரு பார்வையிடுவதும் இழந்த கதவு மீண்டும் பெறுகின்ற உபாயத்தை குருபகவான் காட்டி விடுவார். இரண்டாம் இடத்திற்கு எட்டாமிடத்தில் சனி பகவான் உலா வந்த காலம் எதிர்பார்த்து இருந்தது தான் மிச்சம். பற்றாக்குறை இருந்து கொண்டே இருந்தது. இனி எப்போதும் கையில் பணபுழக்கம் இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியடைவார்கள்.

யோகாதிபதியான சனி பகவான் பத்தில் நின்று மூன்று ஆறுக்குடையவராகி விரையத்தில் நிற்கும் குருவை பார்ப்பதால் தொழில் முதலீடு செய்வதற்கான உத்யோகஸ்தர்கள், கடமை உணர்வில் மிகவும் பொறுப்பு வாய்ந்தவராக இருந்தாலும் இனி கூடுதல் பொறுப்புகள் கிடைக்க வாய்ப்புண்டு. கல்வியில் சிறப்பும், தேர்ச்சி பெறக்கூடிய உயர்வும் இயல்பாக கிடைக்கும். உயர்கல்வியில் நல்ல அனுகூலம் உண்டு.

பெண்களுக்கு வீட்டில் இனி மகிழ்ச்சியும், சந்தோஷமும் உண்டு. ஜனவரி முதல் மார்ச் வரை இருந்த வயிற்று வேதனை, சர்க்கரை மற்றும் இரத்தக் கொதிப்பு அதிகமாக இருக்கும் மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளவும்.

## விருச்சிகம்

இந்தாண்டின் இனிய வரவை மகிழ்ந்து கொண்டிருக்கும் போது ராசியில் அட்டம, விரையாதிபதியாகிய புதனும், சுக்கிரனும், ஒருபுறம் ராசியாதிபதியானாலும், ஆறுக்குடையவரும் நிற்கும் போது, சனிக்கிழமை, மகம் நட்சத்திரத்தில் பிறந்தாலும், பூரத்தில் விடிகிறது. இருப்பினும் நவம்பர் இருபதாம் தேதியில் இருந்தே சோதனைகளும் வேதனைகளும் ஆரம்பித்து விட்டது. வீதியில் போராடி விவகாரங்கள் எல்லாம் வீட்டிற்குள் வந்து விடவே நிம்மதி இல்லாத போக்கு ஆரம்பித்து விட்டது. எதிலும் நிம்மதியில்லாத மனம் அலைக்கழித்துக் கொண்டே இருக்கிறது. உத்யோக அடிப்படையில் குடும்பத்தை விட்டு பிரிந்து போக வேண்டியதும் இருக்கும். அல்லது கூட்டு குடும்பத்தில் பிறந்து உடன் பிறந்ததோரால் வேதனைப்பட்டு குடும்பத்தை விட்டு பிரியவேண்டிய நிலையும் வரலாம். இதில் ஒன்றை மறந்து விடக்கூடாது. சோதனைகள் இருந்தாலும், போராட்டம் இருந்தாலும் அதையும் மீறிய நன்மைகள் உண்டு.

தன, பஞ்சமாதிபதியான குருபகவான் ராசிக்கு லாபஸ்தானத்தில் நின்றாலும், சுகஸ்தானாதிபதி பாக்கியஸ்தானத்தில் இருந்து பார்ப்பதாலும், முயற்சி ஸ்தானத்தை குருவும், சனியும் பார்பதால் எதையும் ஊக்கமுடன் செய்து முடிக்கப்படுவதும், கர்ம மேன்மையும், சுகமேன்மையும் ஒருங்கே அமையப்படுவதும், செய்யும் தொழில் மேன்மையால் கிடைக்கக் கூடிய லாபத்தைக் கொண்டு மேலும் பல விருத்திகளை அடையும் முன்பு பெற்ற தாய், தகப்பனை பாதுகாக்க வேண்டியதை மறந்து விடக்கூடாது. மார்ச் மாதம் வரை அவர்களின் உடல்நலத்திலிருந்து அனைத்து நிலைகளிலும் கவனம் செலுத்த வேண்டும்.

பழைய வீட்டை வாங்கி இடித்து கட்டுகின்ற மனோநிலைக்கு வருவதும், அதே நேரத்தில் தொலைநோக்கு சிந்தனையுடன் செயல்பட்டு அதனை மாத, மாதம் வருமானம் வரும்படி அமைத்து வரும்படியான செயல்பாடு ஆரம்பத்தில் நல்லவிதமாக இருந்தாலும் போக போக, கடுமையான சிரமங்களையும், சிலநேரம் பொருளாதார தட்டுப்பாடுகள் வரக்கூடிய நிலை உண்டு. இந்தக் காலத்தில் வெளியூர் பயணம் மற்றும் ண்டதூரப்பயணங்கள் அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

மார்ச் மாதம் வரை உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம். இதில் ரத்தக் கொதிப்பு, உள்ளவர்கள் முறையான விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். கடன் இருக்கலாம், வட்டிகட்டிவிடலாம், ஆனால் வழக்குகளும், நோயும் ஒருமனிதனுக்கு வந்து விடக்கூடாது. இதைத்தடுக்க ஒவ்வொரு புதன்கிழமையும் துர்க்கைக்கு அரளி மாலை சாத்தி குங்கும அர்ச்சனை செய்து வந்தால் நன்மைகளும், மற்ற விக்னங்கள் விலகும்.

திருமண வயதுடையோருக்கு நல்ல வசதி வாய்ப்புள்ள குடும்பத்திலிருந்து வரனும், வரவும் கிடைக்கும். திருமணம் நல்ல விமர்ச்சையாக நடைபெறும். உறவுகள் நல்ல முறையில் அமையும்.

இந்த வருடத்தில் சில நல்ல காரியங்களுக்காக காசு பணத்தை விரையம் செய்தோம் என்று இருக்க வேண்டும் அதேநேரம் இழந்தோம் என்றும் இருக்கக் கூடாது. இதில் என்னவென்றால் பெண்கள் மற்றவர்களின் நகையையோ அல்லது உடமைகளையே இரவல் வாங்குவதை தவிர்க்க வேண்டும். ஆண்களாக இருந்தால் வாகனத்தையோ அல்லது மற்ற எந்த பொருட்களையும் இரவல் வாங்குவதை தவிர்க்க வேண்டும். இழந்த பின்பு அதைப்பற்றி வருத்தப்படக்கூடாது. முன்ஜாக்கிரதை வேண்டும்.

கூட்டுத் தொழில் செய்ய வாய்ப்பு கிடைத்தாலும் அதனால் பின்பு வருத்தப்படக்கூடிய நிலை வராமல் ஒப்பந்தத்தை சரியாக்கிக் கொள்ளவும். உயர்ந்த மனிதர்களின் நட்பு கிடைக்கும். பதவி உயர்வு கிடைக்கும் நேரமும் இதுதான். .

தொழிற் துறையிலும், வியாபாரத்திலும் இருப்பவர்களுக்கு முதலீடும், நல்ல லாபம் கிடைக்கும் காலம். .

கல்வித்துறையில் மாணவர்கள் உயர்கல்வியில் சிறப்பு பெறுவார்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் மாற்றங்கள் கிடைக்கும். பதவி உயர்வு கிடைக்கும். இருப்பினும் உத்யோகத்தில் கவனக்குறைவு இருப்பதும் தெரிகிறது. மேலும் விருப்ப ஓய்வு எடுக்கக் கூடிய வாய்ப்பும் உண்டு. பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதோடு உத்யோகத்துறையில், சுயமுயற்சியில் தொழில் துறையில் இருப்பவர்களும் நல்ல முன்னேற்றம் அடைவார்கள். .

## தனுசு

2005-ஆம் ஆண்டு பிறப்பது மகம் நட்சத்திரத்தில், விடிவது பூரத்தில், கேதுவும், சுக்கிரனும் இந்த வருடத்தின் தனகர்த்தர்களாக ஆட்சி செய்வார்கள் என்பது உண்மை என்றாலும் உங்களது ராசிக்கு பலவிதமான பலன்களை எழுதி குழப்பலாம்.

காரணம் ராசியாதிபதியான குருபகவான் ராசிக்கு பத்தில் நிற்பதும், தனஸ்தானாதிபதி என்று சொல்லுகின்ற முயற்சி ஸ்தானதிபதியான சனிபகவான் எட்டில் நிற்பதும், பஞ்சமாதிபதி என்று பெருமைகளை வழங்குகின்ற செவ்வாய் எட்டில் நிற்கும் சனிசாரம் பெற்று விரையத்தில் நிற்பதும், .தொழில் ஸ்தானாதிபதியும், களஸ்திர ஸ்தானாதிபதியுமான புதன் விரையத்தில் நிற்பதும் லாபாதிபதியான சத்ரு ஸ்தானதிபதியும் விரையத்தில் நிற்க, பாக்கியாதிபதி மட்டும் ராசியில் நிற்கின்றார். இதில் ராசியாதிபதியான குருபகவான் பத்தில் நின்று யோகாதிபதியான செவ்வாய் சாரம் பெற்றிருப்பதால் உழைப்பும், முயற்சியும், எதிலும் பெருமைதரக்கூடிய தலைமீடும், மதிப்பு மரியாதை மற்றும் கௌரவம் உயருகின்ற காலம் இதுதான். எல்லா நிலைகளிலும் உங்களை முதன்மைப்படுத்தி எதிலும் வெற்றியை கொடுக்கின்ற இந்தத் தருணத்தில், ஒவ்வொரு சந்தோசத்திற்கு பின்பும் மிகப்பெரிய வருத்தமும், எதிர்ப்பும், இடையூறும், பகை உணர்வு கொண்டவர்களும் நிறைந்து இருப்பதை கவனிக்காமல் விடக்கூடாது. மறைமுகமாக தொல்லைகள் இருக்கும். உங்களைப் பெருமைப்படுத்தி, உயர்த்தி பேசி, புகழ்ந்து பழிவாங்கும் குணம் கொண்டவர்கள் உங்கள் அருகிலேயே இருப்பார்கள். அதிக கவனம் வேண்டும். .

மேலும் ராசியாதிபதியான குரு நின்ற வீட்டிற்கு பாக்கியாதிபதியான சுக்கிரன் ராசிக்கு விரையத்தில் நிற்பதால் உத்யோக விஷயமாக வெளிநாடு சென்று பணிபுரியும் வாய்ப்பு கிடைக்கும். அதே நேரத்தில் குருவுக்கு அட்டமாதிபதி செவ்வாய் சனிசாரம் பெற்று விரையத்தில் இருப்பதால் இல்லத்தில் திருடு போகும் வாய்ப்பு உண்டு. உடைமைகளை பாதுகாத்து கொள்ள வேண்டும். பூர்வீகச் சொத்துக்களை விட்டுக் கொடுப்பதும், அதனை விற்று சில கடுமையான சூழ்நிலையை விலக்க வேண்டியது இருக்கும். இந்த சமயத்தில் உயர்ந்தோர், மூத்தோர், பெரியோர் ஆதரவு கிடைக்கும் இறை அருளால் காப்பாற்றபடுவீர்கள்.

தனஸ்தானாதிபதி சனி பகவான் எட்டில் நிற்பதும் குருவுக்கு லாபஸ்தானத்தில் நிற்பதால் எதிர்பார்த்த நேரம் ஏமாறுவதும், எதிர்பாராத நேரத்தில் எல்லாம் கிடைப்பதும் இயல்பாக நடந்து கொண்டிருக்கும். குருபகவான் தனஸ்தானத்தைப் பார்ப்பதால் நியாயவாதியான உங்களுக்கு, நேர்மையான வழிகளில் இருந்து பொருள் வரவு வரவேண்டும் என்று எண்ணுகின்ற உங்களுக்கு குறுக்கு வழிகளும், சட்டத்திற்கு புறம்பான தொடர்புகளும் நிறைந்து வரும். அதனையெல்லாம் செய்தால் பின்பு வருத்தப்படவேண்டியதுதான். ஆகவே எச்சரிக்கையோடு செயல்படவேண்டும்.

தொழில் துறையிலும், வியாபாரத்திலும் சிறப்புகள் உண்டு. சனிபகவான் பத்தாமிடத்தை எட்டில் இருந்து பார்ப்பதால் இடையூறுகளும், தடைகளும் நிறைந்து இருக்கும் என்பதையும் மறந்து விடக்கூடாது. போருக்கு செல்லும் வீரன் கூட புத்துணர்ச்சியை வெற்றி எண்ணும் இலக்கை நினைத்து அடைந்து கொண்டிருப்பதால் ங்களும் அப்படித்தான்.

பெண்களுக்கு இனிய இல்லறமும், உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உயர்வும் மேன்மையும் ஏற்படும். .

## மகரம்

மகரத்தில் பிறந்து பூரத்தில் விடிகிறது. ராசியாதிபதி சனி பகவான் கடகத்தில் நின்று ராசியைப் பார்க்க, பாக்கியத்தில் குரு பிரகாசிக்க, பத்தில் கேதுவும், லாபஸ்தானத்தில் யோகாதிபதிகள் கூடி லாபாதிபதியுடன் சேர்ந்து நிற்க, அட்டமாதிபதி விரையத்தில் நிற்பதால் மேன்மையும் சிறப்பும் உண்டு. இதுவரை தொழிற்துறையில் இடர்பாடுகளும் எண்ணியபடி மேன்மையும் இல்லாமல் இருந்தாலும் மார்ச் 28-க்கு மேல் மிகவும் சிறப்பாகவும், உயர்வும், லாபமும் உண்டு. அதுவரை பொறுமையும் நிதானமும் வேண்டும். மகரத்தின் சிறப்பை பற்றி சொல்லும் போது சனியோட வீட்டில் சந்திரனின் நட்சத்திரத்தையும், சந்திரனின் வீட்டில் சனியின் நட்சத்திரத்தையும் கடகத்தில் வைத்த இறைவன் மகரரேகை, கடக ரேகை என்று பிரித்து உத்திராயணம், தட்சிணாயினம் என்று பிரித்தாலும் வாழ்வில் மோட்சத்தின் திறவுகோளாக சனி சந்திரனில் தான் இறைவன் மறைத்து வைத்திருக்கின்றான். செய்தொழில் மேன்மையை கொடுப்பதும், ஆலய வழிபாட்டில் அதிக ஆர்வம் கொடுத்து ஒவ்வொரு புண்ணிய ஸ்தலங்களுக்கும் சென்று வரவும். குலதெய்வ கோவில் கும்பாபிஷேக வேலைக்கு தன்னை இணைத்துக் கொள்வதும், உயர்ந்த மனிதர்களின் நட்பை பெறுவதும், புனிதமான மகான்களின் தரிசனம் கிடைப்பதும் உண்டு. வெளிநாட்டு வர்த்தக தொடர்பு, கிடைப்பதும், வெளிநாடு செல்ல வாய்ப்பும் உண்டு. சுய போராட்டம் இருந்தாலும் இந்தக் காலத்துச் சனி பகவான் கடகத்தில் நிற்கும் காலத்தில் கையகல கூரை வீடாவது கட்டி விடலாம் என்பது திண்ணம். மார்ச் 28க்கு பின்பு இராகு, கேது பெயர்ச்சி உங்களுக்கு பெருமைகளையும், உழைப்பையும், அதற்கு தகுந்த உயர்வும் கொடுக்கும். சுக லாபாதிபதியான செவ்வாய் சனி சாரம் பெற்று தனஸ்தானத்தையும், ஆறாமிடத்தையும் பார்ப்பது உத்யோகம் கிடைப்பதும், உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு உயர்வும், கடன் கொண்டு சுகமேன்மைகளை பெருக்கி கொள்வதும் இயல்பாக நடைபெறும். சுக்கிரன் பாக்கியாதிபதி சாரம் பெற்று இருப்பதால் பெருமைகளும், மரியாதை,மதிப்பு, கௌரவம் உயர்வதும், வழக்குகள் வெற்றியடைவதும், பதவி உயர்வும், அதற்கு தகுந்த இடமாற்றம் கிடைப்பதும், குழந்தைகளின் வளர்ச்சியில் அக்கறையும், அவர்களால் மகிழ்ச்சியும், பெருமையும் அவர்களது திருமணம் மிகச்சிறப்பாக வெகு விமர்சையாக நடப்பதும் இந்த ஆண்டு நடைபெறும். சொத்தோ அல்லது வீடோ வாங்குவதற்கு முன்பு வாகனத்தில் இருந்து விழுந்து எழ வேண்டியது இருக்கும். பழைய வாகனத்தை மாற்றுவதும், புதிய வாகனத்தில் பவனி வருவதும் நடைபெறும்.

சிலருக்கு உத்யோக அடிப்படையில் குடும்பம் ஒரு புறமும், தான் ஒருபுறமும் இருக்க வேண்டிய நிலை வரும். சுயமாக எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் சாதகமாகவும், நன்மையாகவும் இருக்கும். குரு இராசிக்கு பத்தில் மாறினாலும் உங்களுக்கு பலன்கள் மாறாது சிறப்பாக நடைபெறும். சூரியன் விரையத்தில் இருந்தாலும் உங்களை பல நிலைகளில் ஆராய்ந்து செயல்படத் தூண்டுவதும், மறைமுகமான ரகசிய நடவடிக்கைகளுக்கும் ஆளாக்கலாம்.

மாணவர்களின் கல்வி முதலில் தாமதமாக இருந்தாலும் தேர்வு எழுதும் அந்த காலக்கட்டம் உடல்நிலை பலகீனம் அடையும் வாய்ப்பு உண்டு. .

பெண்களுக்கு இந்த ஆண்டு பொற்காலம் என்று தான் சொல்ல வேண்டும்.

## கும்பம்

இராசியாதிபதி சனிபகவான் ஆறில் நிற்க, இந்த வருடம் மகத்தில் பிறந்தாலும், விடியல் என்னவோ பூரம் என்ற யோகாதிபதியான சுக்கிரனின் சாரத்தில் தான். சனி பகவான் நின்ற வீட்டிற்கு பத்துக்குடைய செவ்வாய், இராசிக்கு பத்தில் நிற்பதால், இந்த வருடம் எல்லா நிலைகளிலும் பெருமையும், புகழும், நிறைவும் வளமும் பெற தகுதியாகி விட்டீர்கள். எட்டில் குருவும், குருவுக்கு இரண்டில் கேதுவும், யோகாதிபதிகள் சுக்கிரனும், புதனும் பத்தில் நிற்பதும், லாபஸ்தானத்தில் சூரியனும், மூன்றில் இராகுவும் நிற்க பிறக்கின்ற இந்த ஆண்டு. உழைப்பின் மூலம் கிடைக்கின்ற பொருளாதாரத்தை கொடுத்து இருக்கின்ற கடன்நிலையை கொடுப்பதோடு, நிதி நிலையில் மேன்மை அடைவதோடு, அவ்வப்போது குடும்பத்தில் ஏற்படுகின்ற சலசலப்பை ரசித்துக் கொண்டு, ரசனையோடு வாழப் பழகிக் கொள்வதோடு தனஸ்தானாதிபதியான குரு பகவான் எட்டில் நின்றாலும், இரண்டாமிடத்தைப் பார்ப்பதால் எதிர்பாராத பொருளாதார மேன்மை ஏற்படும். புதிய தொழில் முதலீடு செய்வதும், அதனை அக்கறையோடு பெருக்குவதும் விரிவாக்குவதும் நடைபெறும். ஏழுக்குடைய சூரியன் லாபஸ்தானத்தில் நிற்க,அவருக்கு ஏழுக்குடைய புதன் விருச்சிகத்தில் இருப்பதால் ஏழெட்டு பேரோடு பிறந்தோரை திருமணம் செய்து கொள்ளும் பாக்கியம் கிட்டும். சுகஸ்தானத்தை புதன், சுக்கிரன், செவ்வாய் பார்ப்பதால் வீடு, வாசல், வண்டி வாகனம், சுகபோகமேன்மைகள் அபிவிருத்தியாவதோடு வீட்டில் சுபகாரியமும் இனிமையாக நடைபெறும். தொழில்வளம் மேன்மையடையும். . குழந்தைகளின் மேல் தனிக்கவனம் செலுத்தி வளர்க்க வேண்டும் காரணம் இராசியாதிபதியாக இருந்தாலும் விரையாதிபதியாகி ஆறில் நின்று தனலாபாதியை பார்ப்பதால் இருக்கும் பொருளாதாரத்தை ஏதாவது ஒரு வழியில் சேதப்படுத்தக்கூடும். சேர்த்து வைத்தப் பணம் கூட செலவாகலாம் அல்லது விரையமாகலாம். பெண்கள் வீட்டில் எப்போதும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். மருத்துவத்துறையில் இருப்பவர்கள் இந்த ஆண்டு சாதனை படைப்பார்கள். மகப்பேறு மருத்துவத்திலும், குழந்தைகள் மருத்துவத்திலும் நல்ல பெயரும், புகழும் கிடைக்கும். பொறியியல் துறை மற்றும் கம்ப்யூட்டர் துறையில் இருப்பவர்களுக்கும் வெளிநாடு செல்ல வாய்ப்புகள் கிடைக்கும். உத்யோகமும் மேன்மையைத் தரும். பலருக்கும் இந்த இராசியில் பிறந்தவர் இடையூறுகள் எதுவும் இல்லை. ஆனால் பெண் குழந்தைகளின் வாழ்வில் மனமாற்றம் திணிக்கப்படும். சாதாரணமாக சனி கடகத்தில் இருக்கும் காலம் வரை மூச்சுதிணறல், சளி, விக்கல், மற்றும் ஈஸ்னோபீஸியா போன்ற குளிர்ச்சியில் தாக்கக்கூடிய நோய்கள் இருப்பதால் அதற்கு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். உடல்நலத்தில் அதிகமான அக்கறை செலுத்துவது அவசியம். அடுத்தவர்களுக்கு பொருளாதார ரீதியாக ஒத்துழைப்பதால் ங்கள் பெரும் கடன்காரராகி விட நேரிடும். கவனம்.

தொழில்துறையிலும், வியாரத்திலும் இருப்பவர்களுக்கு மேலும் கடன் நிலைகள் அதிகரிக்க வாய்ப்புண்டு. இருந்தாலும் அபிவிருத்தி குறையாது. புதிய தொழில் தொடக்கம் சிறப்பாக இருக்கும். கம்ப்யூட்டர் துறையில் இருப்பவர்களுக்கு நல்ல வருவாயும், முன்னேற்றமும் உண்டு. அச்சகத்துறையில் இருப்பவர்களும், சிவில், மற்றும் மெக்கானிக் துறையில் இருப்பவர்களுக்கும், கலைத்துறையில் இருப்பவர்களுக்கும் மேன்மை உண்டு.

உத்யோகஸ்தர்களுக்கு ஆறில் சனியும், பத்தில் சுக்கிரன், புதனும், செவ்வாயும் இருப்பதால் மார்ச் மாதத்திற்கு பின்பு உத்யோக உயர்வும், இடமாற்றமும் உண்டு. மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும். உத்யோகத்தில் இருக்கும் போது வாங்கப்பட்ட கடன் அடைபடும். வெளிக்கடனுக்கு வட்டி கட்ட வேதனைப்படுவீர்கள். இந்த ஆண்டு மிகச்சிறப்பாக இருக்கும்.

மாணவர்களின் கல்வி முன்னை விட சிறப்பாக அமையும். உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு காம்பஸ் இன்டர்வியூவில் தேர்வு செய்யப்படுவர்கள். இன்ஸ்புட்டாப் டெக்னாலஜியில் பயிலும் மாணவர்கள் புதிய கண்டுபிடிப்பு இருக்கும். பள்ளியில் பயிலும் மாணவர்கள் பத்திரிக்கையில் புகைப்படம் வருமளவுக்கு சிறப்பு வாய்ந்ததாக இருக்கிறது.

பெண்கள் கல்வியில் முதலிடம் பெறும் காலம் இது. உயர்கல்வியும் சிறப்பைத் தரும். இல்லறத்தில் இனிமையும், காதல் திருமணமும், கல்யாண வாழ்க்கையும், நன்றாக இருக்கிறது. உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு பதவிஉயர்வும், சிறப்பும் ஏற்படும்.

தூங்குக் தூக்கிச் செயற்பால தூங்கற்ற தூங்காது செய்யும் வினை□□

என்ற குறளுக்கொப்ப செய்ய வேண்டிய காரியங்களை செய்யும் காலத்தில் செய்து முடிக்க வேண்டும்.

## மீனம்

இந்த வருடம் இராசியாதிபதி குரு பகவான் ஏழில் நின்றாலும் தன,பாக்கியாதிபதி சாரம் பெற்று இருப்பதால் நிறைவான பொருளாதாரத்தில் முன்னேற்றம் கொடுப்பதோடு, சமூகத்தில் தானும் பெரிய மனித அந்தஸ்தை அடைவதோடு, தன்னுடைய பழக்க வழக்கத்தையும் விரிவுபடுத்திக் கொள்ள முடியும். பதவியில் இருப்பவர்களுக்கு மிக முக்கியமான பொறுப்புகள் கிடைக்கும். படித்தவர்கள் வெளிநாடு எளிதில் செல்ல வாய்ப்புண்டு. பெண்களுக்கு தகப்பனார் வீட்டிலிருந்து போதிய உதவிகளும், பொருளாதார விஷயத்தில் உதவிகளும் கிடைக்கும். திருமணமாகதவர்களுக்கு மிகச்சிறப்பாக இல்லறம் தொடங்கும். பெண் குழந்தைகளைப் பெற்றவர்கள் அவர்கள் வழியில் சுபகாரியச் செலவுகளும் இனிது நிறைவேறும்.

இந்த ஆண்டு இனிய ஆண்டாக இருக்கும் என்பதில் மாற்றமில்லை. இனிய பயணங்கள், இருந்தாலும் பயனுள்ள பயணங்களாக . டெக்னிக்கல் துறையில் இருப்பவர்களுக்கும், பொறியியல் துறையில் இருப்பவர்களுக்கும், கம்ப்யூட்டர் துறையில் இருப்பவர்களுக்கும் வெளிநாடு சென்று பொருள் தேடும் வாய்ப்பு ஏற்படும். தொழிலதிபர்களுக்கும், வியாபாரத்துறையில் இருப்பவர்களுக்கும் நல்ல முன்னேற்றமும், அபிவிருத்தியும் உண்டு. ஹோட்டல், பலசரக்கு, மற்றும் மொத்த விற்பனையாளர்கள் போன்றவர்கள் விரிவுப்படுத்துவதும், ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் விருத்தி செய்ய வாய்ப்புண்டு. மாணவர்கள் உயர்கல்வி பிரகாசமாக இருக்கிறது. கல்வியை முடித்த கையோடு வெளிநாடு செல்வதோ, வெளியிடங்கள் செல்வதோ உடனடியாக நடைபெறும். பள்ளியில் படிக்கும் மாணவர்கள் அதிகமான மதிப்பெண்கள் பெறலாம். நன்றாக படியுங்கள்.

பெண்கள் வீட்டில் இல்லறத்தில் குறை உண்டு என்று தான் சொல்ல வேண்டும். காரணம் எப்போதும் கருத்து வேறுபாடு கொள்ளத்தக்கபடி இருந்தாலும் பொறுமையாக நடந்து கொண்டால் இனிக்கும் இல்லறமாக மாறும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு முன்னேற்றம் உண்டு. உடல்நலத்தில் கொஞ்சம் கவனம் வேண்டும். கர்பாயச் சம்பந்தமான அடிவயிற்று பிரச்சினை வர வாய்ப்புள்ளது. உதிரப் போக்கும் இரத்தக் கொதிப்பு மற்றும் சர்க்கரை நோய் உங்களைத் தாக்கக் கூடும் கவனம் தேவை

விவசாயத்துறையில் குத்தகைக்கு எடுத்து உழவடை செய்வதே உங்களுக்கு நல்லது. பெரும்பாலும் ஒத்திக்குத் தான் வீடு கிடைக்கிறது. அதில் நிறையப் பேர் குடியிருப்பார்கள். இவர்கள் குடியிருக்கும் வீடுகள் மாடிவீடுகளாகத் தான் இருக்கும்.

**DIGITAL WINDOWS (U.K.) LTD**

Maintainence Free REHALL PVCU WINDOWS

* Fully Welded & Internally Beaded Doors
* Aluminium Windows, Doors & Conservatories
* Free Estimates
* 10 years Insurance Back Gaurantee
* We are a Member of Fensa

Call us on
(T) 020 8459 2666/7403
2B Church Hill Rd.
Willesden NW2 5EA

மிதுஸ் ஜுவல்லரி அண்டு டயமண்ட்ஸ்
பேலஸில் உங்கள் பொன்னான கனவுகளுக்கு
அழகான வடிவம் கொடுங்கள்

**Mithus Jewellery**

OPEN 7 DAYS A WEEK
322-324 London Rd., Croydon CR0 2TJ
Ph: 020 8683 1756 Fax: 0208683 1792

**DIAMOND PALACE**

Ph: 0208767 5333 Fax: 02087675814
76 Tooting High St., London SW17 0RN

**HARTEX**

ESTABLISHED 1969

THE GREAT OUT DOORS

· COMBAT · PULLOVERS · MAP CASES · THERMAL UNDERWEAR · RAINWEAR · BODY WARMERS · SHORTS · COMPRESSORS BAGS · CLOTHING · BOOTS · COOKWARE · MONEY BELTS · HIKING BOOTS · HAMMOCKS · CUTLERY SETS · PLATES · WEBBING · GLOVES · HEADWEAR · HIKING BOOTS



Competitive prices

55 VICTORIA ROAD
RUISLIP MANOR
MIDDX, HA4 9BS
TEL: 01895 634244

321 NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDX, HA2 8JA
TEL: 020 8864 3333

OPEN 7 DAYS

**SAMS Accounting Services Ltd.**

* Audit & Accountancy
* Prepare Monthly Management Accounts
* Tax Planning & Refund
* Specialists in Solicitor Accounting
* SAGE Line 50/Payroll

Call Mrs. Sumathi Jankan on
020 8509 8484
077 1557 6989

Email: info@samsaccounting.co.uk
92a Forest Road, Walthamstow, London E17 6JQ

**TRAVEL (UK) LTD**

Worldwide Travel Agents
485 Yeading Lane, Northolt, Middlesex
UB5 6LN London (U.K)

Tel: 020 8841 8842
Fax: 020 8842 1079

Web: www.traveluk.ltd.uk
Email: sales@traveluk.ltd.uk

**CINNAMON**

Sri Lankan, Indian & Pakistani Cuisine

* Catered for all occassions — Daily 12 - 11:30 pm
* 10% Discount over £13.50 (Take-away only)
* Free delivery within 5 miles
* Sunday Buffet £5.99 (Eat-in)
* 100 String Hoopers £16.50 only

020 8861 6363
34, High Street, Wealdstone, Harrow, Middx.

**Rainbow**

Multi Cuisine Restaurant & Bar
Indian, Tandoor & Srilankan

* Free Car Parking
* Fully Licensed
* 12 to 12 Bar
* Takeaway available
* Birthday parties
* Catering to all parties

You only leave to come back

96 A, High St, (Opp. to Police Station)
Southall, Middlesex, UB1 3DN Phone: 020 8574 4087
website: wwwbarrainbow.com

**ABRA WHOLESALES LTD.**

Unit 9P, Kynoch Road, Eley Estate, Edmonton N18 3BH


POUND/DISCOUNT TRADE SPECIALIST

Ph: 020 8887 9303 Fax: 020 8887 9304
sales@abrawholesales.co.uk

* Toiletries
* Household Goods
* Stationery
* Gifts & Toys
* Silk Flowers
* Mobile Phone Accessories
* Medicines
* Soft Drinks
* Greeting Cards
* Video, DVD & CDs
* Electricals

We have increased our range of products by 500 to over 6000 and our selling area to 21,000 sq. ft.

Opening Times
Mon - Fri
9am - 7 pm
Sat & Sun
9.30am - 3.30pm
Bank Holidays
9.30am - 3.30pm




Open 7 days a week

LONDON CELLULAR 020 8459 6914

T··Mobile···



FREE NOKIA 3510i

FREE 750 Off Peak Minutes
FREE 50 Text Messages per Month
FREE Connection
All for only £7.50 per month (inc. VAT)

100 High Road, Willesden Green
London NW10 2PP

**KOtech**

PC COMPONENTS
AT LOW LOW PRICES
PC's Built To Order
TEL: 08700 27 11 99
www.KOtech.co.uk
KOtech LTD
Unit 3,
Trinity Estate
Silverdale Rd.
Hayes UB3 3BN

**Ellis &Co.** Residential Sale & Letting

வீடு வாடகைக்கோ, விற்கவோ, வாங்கவோ மேலும் Mortgage தேவைக்கோ நீங்கள் உடன் தொடர்பு கொள்ளவும்
Kumar on
(T) 020 8204 3300
(F) 020 8206 1102
(M) 07984 184064
email: kenton@ellisandco.co.uk
272, Streatfield Road, Kenton, Harrow

**AIR SAVERS TRAVEL**

0208 540 2226

| | | | |
|---|---|---|---|
| Colombo | £320 | Madras | £400 |
| Toronto | £250 | Australia | £475 |
| Bombay | £315 | Singapore | £360 |
| Kuala Lum | £370 | New York | £135 |
| Trichy | £415 | Bangalore | £415 |

All Major Credit Cards Accepted

**FREEHOLD CASH AND CARRY FOR SALE**

The relocation of a well established London Cash and Carry to larger premises, could make available for sale the freehold of their existing 40,000 sq ft warehouse to the right party.
For further details please send, in confidence, your name, address and contact details, to either:
FAX: 0208 3572592
or e-mail: businessforsale@hotmail.com

Community's best friend UDHAYAN

தீராத உங்களின் மன வேதனைகள் தீர்ந்திட, உங்களின் வாழ்க்கையில் என்றும் வெற்றி கண்டிட தரிசியுங்கள் அன்னையை 020 8905 7775, 020 8952 7775

**dotcom SOLICITORS**

QUALITY AND PROFESSIONAL ADVICE TEL : 020 88809000

* PERSONAL INJURY*
* MEDICAL NEGLIGENCE*
* COMMERCIAL LITIGATION
* WILLS AND PROBATE
* CONVEYANCING (from £300.00 - excluding VAT & Disbursements)
* LICENCING - Personal / Premises / Conversation and/or Variation
* ALL EMPLOYMENT MATTERS
* ALL IMMIGRATION MATTERS

W55 GROVE BUSINESS CENTRE, 560 ?568 HIGH ROAD TOTTENHAM, LONDON N17 9TA [email :advice@dotcomsolicitors.com]
[www.dotcomsolicitors.com] {* No Win No Fee} < WE ALSO SUE SOLICITORS AND OTHER PROFESSIONALS > Ask for Mr. Ram